
கல்கி
KALKI
17.9.89



# கரையேற முடியாத மீன்கள்

ஆத்துவழி போய்வருவோம்
ஜலசா — கையில்
ஆனமட்டும் பலமிருக்கு
ஜலசா!
சோத்துக்கொரு வழியில்லையே
ஜலசா — ஆனா
சொர்க்கத்துல இருக்கிறமே
ஜலசா!

சட்(டை)ட ஒண்ணு இல்லையடா
ஜலசா — அதைச்
சட்(டை)ட செய்ய நேரமில்ல
ஜலசா
கட்சிகூட மாறிப்போச்சு
ஜலசா — நாங்க
காந்திவழி மாறலையே
ஜலசா!

என்னென்னமோ ஆகிப்போச்சு
ஜலசா — ஓடம்
எந்திரத்தில் ஏறிப்போச்சு
ஜலசா!
காலமெல்லாம் மாறிப்போச்சு
ஜலசா — எங்க
கைத்துடுப்பு மாறவில்ல
ஜலசா!

உச்சிவெயில் நேரம்மட்டும்
ஜலசா — எங்க
உசுருக்குள்ள தீயெரியும்
ஜலசா!
மனுசனுக்கு மனசு இல்ல,
ஜலசா — ஆனா
மரங்களெல்லாம் கொடபுடிக்கும்
ஜலசா!

ஆத்துக்குள்ள மழையடிச்சா
ஜலசா — நாங்க
அச்சப்பட்டுப் போவதில்ல
ஜலசா
நடுவீட்டில் இருந்தாலும்
ஜலசா — நாங்க
நனஞ்சேதான் பழக்கமடா
ஜலசா!

ஏழேழு தலைமுறையா
ஜலசா — துடுப்ப
இழுத்திழுத்து வலிக்கிறமே
ஜலசா!
ஒங்களத்தான் க(ரை)ரசேர்த்தோம்
ஜலசா — அட
எங்க க(ரை)ர எப்பவரும்
ஜலசா?

வைரமுத்து

வண்ணப்படம்: யோகா

## நீங்கள் கேட்டவை — துராசு

* ரூ. 20 பரிசு பெறுபவர்:

கே. வேல்சாமி,
6, இரவியலிங்கேஸ்வரர் கோவில் தெரு,
கீரத்துரை,
மதுரை — 625 001.

* உஷா கிருஷ்ணமூர்த்தி, சென்னை—63.

? 'கோல்ட் வார்' என்றால் என்ன?.

! தேர்தலின் போது, அல்லது ஆட்சி கலைக்கப்படும் போது ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையே நடப்பது நேரடி யுத்தம் எனில், இதர சமயங்களில் ஒருவர் மீது ஒருவர் பழி சுமத்திக் கொண்டு பாய்ச்சல் காட்டுவது பனிப்போர்! வல்லரசுகளிடையே அல்லது இரு நாடுகளிடையே நடக்கும் பனிப்போரும் இத்தகையதுதான். அது நேரடி யுத்தமாக மாறி விடக் கூடாது என்ற கவலை இருதரப்பிலும் இருக்கும். ஆனால் ஜனநாயகத்தில் தேர்தல் என்ற நேரடியுத்தம் இன்றியமையாதது.

* எம். ராஜேந்திரன், லால்குடி.

? 'உலகில் இவ்வளவு அவமானத்தையும் அவதூறுகளையும் தாங்கிக் கொண்டு அரசியல் தலைவியாக விளங்கும் முதல் பெண்மணி ஜெயலலிதாதான்' என்று காளிமுத்து கூறியுள்ளாரே?

! இதை ஒரு பாராட்டாக அவர் கூறியிருந்தாலும் உதைக்கிறது; வருத்தப்பட்டுக் கூறியிருந்தாலும் இடிக்கிறது! ஜெயலலிதா மீது அவமானத்தையும் அவதூறுகளையும் கணக்கின்றிச் சுமத்தியவரே காளிமுத்துதானே!

* கே. வேல்சாமி, மதுரை *

? அமைச்சர் துரை முருகனை, வை. கோபால்சாமி என்று நினைத்துக் கொண்டு குசலம் விசாரித்தாராமே சிவாஜி கணேசன், அறிந்தீர்களா?

! நீங்கள் சொல்லித்தான் தெரியும். ஆனால் எனக்கு வியப்பில்லை. பாரிஸுக்குச் சென்ற கோர்பசேவ், 'எதை எதையோ எனக்குக் காட்டுகிறீர்களே, பிரெஞ்சுப் புரட்சியினால் பெரும் புகழ் பெற்ற 'பாஸ்டைல்' சிறைச்சாலை எங்கே? அதைக் காண்பியுங்கள்' என்றாரே, அதை விடவா? ஆனைக்கும் அடி சறுக்கும் எனில் கணேசனுக்கும்தான்! (பி.கு.: சரித்திரம் அறியாதவர்களுக்கு: பாஸ்டைல் சிறைச்சாலை பிரெஞ்சு மக்களால் புரட்சியின் போது தரைமட்டமாக்கப்பட்டது!)

* டி. சீனிவாசன், சென்னை.


? 'போலீஸ் உதவியுடன் நடந்த பந்த் இது' என்று வாழப்பாடி கூறுகிறாரே?

! பீகாரிலும், உ.பி.யிலும் கூடவா? தேசிய நாளிதழ்களைக் கொஞ்சம் கூர்ந்து படியுங்கள், மிஸ்டர் வாழப்பாடி!

* கே. ஆர். அசோகன், கிட்டம்பட்டி.

? 'தி. மு. க. வைக் கிரகணம் பிடித்து விட்டது. சுக்கிரன் போய் சனி தசை ஆரம்

* சட்டமும் தர்மமும்



# என்.டி.ஆர். சினிமாவில்



ஆனைக்கும்....



....அடி சறுக்கும்



* முதல் பெண்மணி!



* கூர்ந்து படியுங்கள்!



* அழைப்பிதழ்!



* வெடிக்காத குண்டு!

பம்' என்று காளிமுத்து கூறுகிறாரே?

! அரசியலில் புகுந்து அதைக் கெடுத்தது போதாதா? ஜோசியத் துறையில் வேறு புகுந்து அதையும் குட்டிச்சுவராக்க வேண்டுமா? வேண்டாம் காளிமுத்து ஸார்! தயவு செய்து ஜோஸ்யர் ஆகி விடாதீர்கள்!

* என். ஆர். சுப்பிரமணியன், பூனாம்பாளையம்.

? 'தி. மு. க. கவிழ்ந்தால் அதற்கு நாங்கள் பொறுப்பல்ல' என்று சிதம்பரம் கூறியுள்ளாரே?

! வரும் தேர்தலில் காங்கிரஸ் ஆட்சி கவிழ்ந்தால் அதற்கு இவர்கள் மட்டுமே பொறுப்பு!

* ரமா சந்திரசேகர், வேலூர்.

? த. மு. மு. என்ன ஆயிற்று?

! தடைகளைக் கடந்து முன்னேறாமல் முடங்கி விட்டது.

* கொ. இரமேஷ், காரிமங்கலம்.

? 'ஆங்கில மொழியை ஒழிக்க வேண்டும்' என்று மத்திய அமைச்சர் சிவசங்கர் பேசியுள்ளது பற்றி?

! கூடவே தேசிய ஒருமைப்பாடும் ஒழிந்து போய் விடும்.

* வ. வேங்கடேசன், தில்லையாடி.

? மகாத்மா காந்தியின் பேரன் ராஜ் மோகன் காந்தி ஜனதா தளத்தில் சேர்ந்திருப்பது பற்றி...?

! அவர் ராஜாஜியின் மகள் வயிற்றுப் பேரனும் கூட. 'மகான்களின் பேரனாகத் தாம் பிறந்தது ஒரு பாக்கியம்; அதையும் நாட்டுக்கு நன்மை ஏற்படுமானால் பயன்படுத்தத் தயாராக இருக்கிறேன்' என்று கூறியிருக்கிறார். யோக்கியமானவர்கள், அறிவாளிகள், நடுத்தர வயதினர் ஒதுங்கியிராமல் களத்துக்கு வருவது நல்லது. ராஜ் மோகன் அரசியலில் குதித்திருப்பது அவரைப் போன்ற வேறு பலருக்கு அழைப்பிதழாக விளங்கட்டும்!

* மல்லிகை மன்னன், திருச்சி.

? 'அரசு இயந்திரங்களை முறைகேடாகப் பயன்படுத்திய கருணாநிதி அரசை டிஸ்மிஸ் செய்ய வேண்டும்' என்று ராஜீவுக்கு ஜெயலலிதா வேண்டுகோள் விடுத்திருக்கிறாரே?

! ராஜீவ் காந்தியை விட அரசு இயந்திரத்தை முறைகேடாகப் பயன்படுத்தியவர், பயன்படுத்தி வருகிறவர் வேறு ஒருவரும் இல்லை என்பது 'ஜெ'க்குத் தெரியும் என்பதால் மீண்டும் ஒருமுறை அதிகார துஷ்பிரயோகம் செய்யுமாறு கேட்கிறார்!

* மு. மதிவாணன், அரூர்.

? என்.டி.ஆர். சினிமாவில் நடிக்கத் தடையில்லை என்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதே?

! தீர்ப்பு என்பது சட்டத்தையொட்டி வழங்கப்படுகிற ஒன்று. ஆனால் பல தீர்ப்புகளில் நீதிபதிகள் தர்மத்தையும் எடுத்துக் கூறுவார்கள். இந்த வழக்கிலும் கூறியிருக்கிறார்கள். அந்தத் தர்மோபதேசத்துக்குத் தலைவணங்குவதெனில் என்.டி.ஆர். மேக்—அப்பைக் கலைத்து விடுவார். சட்டத்தை மட்டும் பற்றிக் கொண்டால் கலைக்க மாட்டார்!

* கே. வி. ஆர். வாசு, சென்னை — 93.

? சுந்தர்ஜி பெரிய குண்டாக ஒன்றைத் தூக்கிப் போட்டிருக்கிறாரே?

! முன்பு அருண்சிங் என்ன சொல்லி ராஜினாமா செய்தாரோ அதையேதான் இவ்வளவு காலத்துக்குப் பிறகு இப்போது சுந்தர்ஜி கூறியிருக்கிறார். புதிதாக ஒன்றும் இல்லை. ஆனால் அன்று அருண்சிங்குக்கு அதைச் சொல்லி ராஜினாமா செய்யும் துணிவு இருந்தது. சுந்தர்ஜிக்கு இருக்கவில்லையே! ஓய்வு பெற்ற பிறகு அல்லவா திருவாய்மலர்ந்தருளியிருக்கிறார்! பதவியில் இருந்த போது இவர் டி.வி.யில் தோன்றி போஃபர்ஸ் ஆதரவாகப் பேசியதெல்லாம் நாம் மறக்க முடியவில்லையே! ஜே.பி.ஸிக்கு இவர் கொடுத்த சாட்சியமும் நமக்கு நினைவிருக்கிறதே! எனவே போஃபர்ஸ் ஊழல் நிஜமென்றாலும் அதை நிரூபிக்க சுந்தர்ஜியின் சாட்சியம் வலுவற்றது!

# நடிக்கலாம் என்ற தீர்ப்பு குறித்து?



# கற்பனை டெல்லியில்;

'அரசுத் துறை என்றாலே அழுது வடியும்' என்கிற அவப் பெயரைப் போக்கி, ஏராளமான பெண்கள் கூட்டத்தைத் தன்வசம் இழுத்துக் கொண்டிருக்கிறது கோ—ஆப்டெக்ஸ். தமிழகம் எங்கும் ஷோ—ரூம்கள்... குறிப்பிட்டுச் சொல்லும்படியாக, சென்னையில் வானவில் மற்றும் தில்லையாடி வள்ளியம்மை பெயரைத் தாங்கி நிற்கும் 'பட்டு மாளிகை'! ஐம்பதாயிரம் சதுரடி கொண்ட இம் மாளிகையில் திரும்பின பக்கமெல்லாம் பளிச் பளிச்சென்று மின்னும் நிறங்களையும் வகை வகையான பட்டுச் சேலைகளையும் பார்த்தால், எப்பேர்பட்ட 'மாமியார்க்காரியும்' திருப்தி அடையக்கூடிய சரக்குத்தான் என்று தோன்றுகிறது.

அது சரி, 'பட்டு மாளிகை' கட்டடத்துக்குத் தில்லையாடி வள்ளியம்மையின் பெயரை ஏன் வைத்தார்கள்....? புடைவைக் கடல் தோற்றுவித்த பிரமிப்பிலிருந்து விடுபட்டதும் முதலில் அதைத்தான் விசாரித்தோம்:

பதிவு செய்யப்படாத எந்த இந்துத் திருமணமும் சட்டப்படி செல்லாது என்று பிரிட்டிஷ் அரசு ஆதிக்கத்திலிருந்த தென்னாப்பிரிக்கக் காலனியில் அறிவிக்கப்பட்ட போது, அங்கிருந்த காந்திஜி அதைத் தீவிரமாய் எதிர்த்தார். இந்தியாவிலும் எதிர்ப்பலைகள் பரவின. அப்போது தீவிரமாக சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்ட பதினாறு

## கலை வடிவம் கொடுக்கும் கரங்கள்:

புதுடெல்லி ஜன நெரிசலில் ஏதோ ஒரு மூலையில் இருந்து கொண்டு ராகேஷ் தாகோர் நீளமான அட்டையில் வண்ணத்தில் வரைந்து அனுப்பும் கற்பனையை, காஞ்சிபுரத்தில் நூல் பிசகாமல் அப்படியே நெசவு செய்து நிஜமாக்குபவர் லோகநாதன். இவர்தான் முதன் முதலில் டெல்லியின் கற்பனையை இங்கிருந்து நெசவு செய்து அனுப்பியவர்! இவரைக் காஞ்சீபுரம் பிள்ளையார் பாளையத்தில் சந்தித்தோம்.

''எங்கிருந்தோ ஒரு அட்டையில் வரைந்து கொடுக்கின்ற டிஸைனை அப்படியே எப்படி உங்களால் நெசவு செய்ய முடிகின்றது?''

''டிஸைன் அட்டை எங்ககிட்ட வர்றதுக்கு முன்னால, எங்க சொஸைட்டி ஆர்ட் டிஸைனர் அந்த அட்டையை வாங்கிப் பார்ப்பார். அதுல போட்டிருக்கின்ற டிஸைனுக்குத் தக்கபடி கிராஃப் ஷீட்டுல புள்ளி எடுப்பார். கிராஃப் ஷீட்டுல இருக்கின்ற ஒவ்வொரு கோடும் ஒரு இழை. இவ்வாறு புள்ளி வரைஞ்சு கிராஃப் ஷீட்டை அடைகட்டுறவங்க கிட்டக் கொடுப்பார். அடை



* தறி இல்லாத வீடே இல்லை!

# கலை வடிவம் காஞ்சியில்!



வயது சிறுமிதான் தில்லையாடி வள்ளியம்மை. பிரிட்டிஷ் அரசால் சிறை வைக்கப்பட்டு, கடும் நோய்வாய்ப்பட்டுச் சிறையிலேயே இறந்தார். மரணப் படுக்கையில்' தம்மைக் காண வந்த காந்திஜியிடம் 'நான் மரணத்தைக் கண்டு அஞ்சவில்லை; என் தாய்நாட்டுக்காக உயிர் விடுவதில் பெருமையடைகிறேன்' என்ற வீர வார்த்தைகளைப் பேசிய வள்ளியம்மை, நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் நினைவாய்த்தான் பட்டு மாளிகைக்குப் பெயரிட்டுள்ளனராம்.

ஒரு சரித்திர நாயகிக்கு வீர வணக்கம் செலுத்தி நிற்கும் பட்டு மாளிகையில் 'வண்ணப்பாவு' என்றொரு கண்காட்சி – பட்டிலும் நூலிலும் பொடிப் பொடிக் கட்டம் போட்டு, இரண்டே விரல் கடை அகல பார்டருடன் இளம் நிறங்களில் புடைவைகள். கட் அவுட் செய்யப்பட்ட அட்டைப் பெண்மணிகள் அவற்றை அணிந்து 'புஸ்' என்று உட்கார்ந்திருக்க, ஏதோ கனவுலகக் காட்சி போல் இருந்தது.


'வண்ணப்பாவு' பற்றிய விவரங்கள் கேட்டோம்... ராகேஷ் தாகோர் என்று ஒரு 'டிசைனர்'. இவர்தான் பழமையான பாரம்பரிய டிசைன்களையும் புதுமையான லேட்டஸ்ட் ஃபாஷன் நிறங்களையும் இணைத்து 'வண்ணப்பாவு' புடைவைகளைக் காகிதத்தில் வடித்தார். இவர் தயாரித்த 150 முதல் 200 டிசைன்களை கோ–ஆப்டெக்ஸ் நிபுணர்கள் வகை பிரித்து ஊர் ஊராக அனுப்பினார்கள். சின்ன பார்டருள்ள டிசைன் என்றால் கும்பகோணம், ஜரிகையுடன் கூடிய அகலக்கரை காஞ்சிபுரம், மெல்லிய இழை ஜரிகை பார்டர் கொண்ட நூல் புடைவை என்றால் திருச்சிக்கு அருகே உள்ள விளந்தை, என்று ஊர் ஊராக டிசைன் அட்டைகள் அனுப்பப்பட்டன. அங்குள்ள பரம்பரை நெசவாளர்கள், அட்டையில் வடிக்கப்பட்ட கற்பனையை அழகான நிஜமாக்கித் தர, அந்தப் புடைவைகள் ஒவ்வொன்றும் டிசைனுடன் ஒப்பிடப்பட்டு, வண்ணமும் வடிவ


கட்டுரவங்க, அவர் வரைஞ்சு கொடுத்துள்ள புள்ளிக்குத் தக்கபடி ஏற்ற, இறக்கங்களை அமைச்சு அடை கட்டிக் கொடுப்பாங்க. அதாவது நூல் கயிற்றில் அந்த டிஸைனை அச்சு மாதிரி பண்ணிக் கொடுத்திடுவாங்க. இதைப் 'பேட் அடை கட்டுதல்'னு சொல்வோமுங்க! இந்த அச்சு மாதிரியான டிஸைன்தாங்க எங்க கிட்ட வரும். கூடவே அந்த வண்ண டிஸைன் அட்டையும் கொடுத்து விவரம் சொல்லுவார் ஆர்ட் டிஸைனர். நாங்க அந்த அட்டையைத் தரியில போட்டு டிஸைனுக்குத் தக்கபடி நூலை இழுத்து வேலையை ஆரம்பிச்சிடுவோம்...

"ஒரு வண்ணப்பாவு புடைவையை நாலு நாள்ல முடிச்சிடுவோம். டிஸைனுக்குத் தக்கபடி ஒரு சேலைக்கு இருநூறிலிருந்து இருநூற்றி ஐம்பது வரைக்கும் கிடைக்கும். மற்ற பட்டுப் புடைவைன்னா பதினைந்து நாள் வேலை ஆகும். ஆறு நூறு கிடைக்கும். எனக்கு வண்ணப்பாவு பண்ணத்தாங்க ஆசை. சுலுவா முடிச்சுடலாம். பண்ணியதையே பண்ணாது. இது மாதிரி புதுசு புதுசா ஏதாவது பண்ணவும் முடியுது..."

டெல்லியிலிருந்து ராகேஷ் தாகோர்,

• லோகநாதன்





• அட்டையில் வண்ணப்பாவு டிசைன்கள்.

மும் பொருந்தியிருப்பின் கண்காட்சியில் கலந்து கொள்ளும் கௌரவத் தகுதி பெற்றன. கற்பனை டிசைனிலிருந்து 'வழுவிய' புடைவைகள் பத்தோடு பதினொன்றாக மூட்டை கட்டப்பட்டு விற்பனை நிலையங்களிலுள்ள இதர ஆயிரக் கணக்கான புடைவைகளுடன் சங்கமித்து விட்டன.

**கோ**–ஆப்டெக்ஸின் விற்பனைப் பிரிவு அதிகாரி பால்ராஜை சந்தித்தோம். "இப்போதைய ஃபாஷனாக உள்ள ஆரஞ்சு, பிங்க் போன்ற நிறங்களை அறிமுகப்படுத்தியிருக்கிறோம். கோ–ஆப்டெக்ஸ் புடைவைகளுக்குக் கனம் அதிகம் என்பதால் சிலர் விரும்புவதில்லை. எனவே ஒரு மீட்டருக்கு நூல் எடையை நூறு கிராமிலிருந்து எண்பது கிராமாகக் குறைத்து விட்டோம். கனம் குறைவான செட்டி நாட்டு வகைப் புடைவைகளுக்கு இப்போது மவுசு அதிகம்" என்றார்.

**கோ**–ஆப்டெக்ஸின் புதிய முயற்சி புதிய வாடிக்கையாளர்களை ஈர்ப்பதைக் காண முடிந்தது. சாதாரணமாக 'எக்ஸ்க்ளூஸிவ் பொடீக்'குகளில் மட்டுமே காணக்கூடிய 'நதியா கொண்டை', 'நுனி நாக்கு ஆங்கில'க்கூட்டம் வண்ணப்பாவு கண்காட்சியில் மொய்த்தது. போட்டா போட்டியில் 'பொடீக்' உரிமையாளர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய காலம் வந்து விட்டது.

**— நிர்மலா சக்கரவர்த்தி**

அட்டையில் வண்ணப்பாவு புடைவை அணிந்துள்ளவர்: **ரம்யா கோபையா**

வண்ணப்படம் மற்றும் படங்கள்: **யோகா**

---

ரின் ஆசான் மார்த்தான் சிங் என்பவர் முதலில் 'புதுப்பாவு' என்று ஒரு டிஸைன் போட்டுக் கொடுக்க, அதை அற்புதமாய் லோகநாதன் நெசவு செய்ய, டெல்லிக்கு அனுப்பியிருக்கிறார்கள், கோ–ஆப்டெக்ஸில். டெல்லியில் நடைபெற்ற கண்காட்சியில் லோகநாதனின் கை வேலைக்கு ஏக கிராக்கி! அதற்காக மத்திய மந்திரியிடம் சால்வையும் பரிசும் வாங்கியதைப் பெருமிதத்துடன் கூறினார் லோகநாதன்.

ஆர்ட் டிஸைனர் ஒருவரையும் சந்தித்தோம். "டெல்லியிலிருந்து வரைந்து அனுப்புகின்ற டிஸைன் அட்டைகளைக் காண்பித்தார்! 'ராகேஷ் தாகோர் கன்சல்டெண்ட்' என்று பெயரிட்டிருந்தது. பக்க வாட்டில் சேலையின் அளவு, பார்டர்கள் அளவு, ஜரிகை, போன்ற விவரங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. டிசைனில் உள்ள நிறச் சேர்க்கைபடி முதலில் கொஞ்சம் நூலைச் சாயம் தோய்த்து, கலர் 'எஃபெக்ட்' கிடைக்கின்றதா என்று பரிசோதித்து விட்டுத்தான் நூலை முழுவதுமாய்ச் சாயம் தோய்த்து நெசவாளர்களுக்கு வழங்குகின்றார்கள்.

**கா**ஞ்சிபுரத்தில் மொத்தம் இருபது நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன. சங்கத்தின் மூலம் தான் எல்லோரும் தறி போட்டுள்ளார்கள். தறி இல்லாத வீட்டைப் பார்ப்பது அபூர்வம். குடும்பத்தில் உள்ள எல்லோரும் உழைக்கின்றார்கள்! நாம் பார்த்த வரையிலும் எல்லா நெசவாளர்களும் டி.வி.எஸ். 50, (அல்லது வேறு ஏதாவது ஒரு வாகனம்) டீ.வி., ஃபேன் என்று சௌகர்யமாக இருக்கின்றார்கள்.

முருகன் என்ற நெசவாளர் இன்கம்–டாக்ஸ் கட்டுகின்ற அளவு தொழிலில் வெற்றிகரமாக இருந்திருக்கிறார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

**— பாரதிபாலன்**

படங்கள்: **சுபா**


தாகத் தொழில்
எண்களோடு விளையாடும்
பெண்மணிக்கும் லிம்கா
எண்ணற்ற டிசைன் வரையும்
ஆணிற்கும் லிம்கா
எண்களோடு விளையாடி விளையாடி அல்லது
டிசைன்கள் வரைந்து வரைந்து களைத்து நீங்கள்
தாகத்தால் தவிக்கும் பொழுது...
ஐஸோடானிக் ஸால்ட் அடங்கிய கிருமிகள்
அற்ற லிம்கா அருந்தி தாகத்தை தணிப்பீர்.
Limca®
RADEUS/PE/L/3-89-TAM
ARTIFICIALLY FLAVOURED. CONTAINS NO FRUIT JUICE OR FRUIT PULP
® THE REGISTERED TRADEMARK OF PARLE (EXPORTS) LTD., BOMBAY.

"சுவையான சம்பவங்கள்"—

# "கவரைப் பிரித்தால் ஆச்சரியம் காத்திருந்தது!"

இது நடந்து 10 — 12 மாதங்களாகின்றன. அப்பொழுது எங்கள் ஒரே பெண் பிளஸ் டூ படித்து முடித்திருந்தாள். எல்லாப் பெற்றோர்களுக்கும் இருக்கும் ஒரே கவலைதான், எங்களுக்கும். என்ன செய்வது? எங்கே சேர்ப்பது? எந்தக் காலேஜில் ஸீட் கிடைக்கும்? பெண்ணானதால், பக்கத்தில் கிடைக்காவிட்டால் என்ன செய்வது? என்ற கவலைதான். எங்கள் பெண் பிளஸ் டூ படிப்பில் நல்ல மார்க்கு வாங்கி, பள்ளியிலேயே இரண்டாம் இடத்தைப் பெற்றிருந்தாள். அதனால் அவள் இஷ்டப்படியே மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்தால் சேர்ப்பது என்று தீர்மானம் செய்தோம். மருத்துவக் கல்லூரியில் சேர்ப்பது ஒன்றும் சாமானியமானதாகத் தெரியவில்லை. நாங்கள் வேலூருக்கு ஒரு தடவை, பாண்டிச்சேரிக்கு ஒரு தடவை, சென்னைக்குப் பல தடவை என்று படையெடுத்தோம். கடைசியில் அதிர்ஷ்டவசமாக எங்கள் பெண் தமிழ்நாடு மருத்துவக் கல்லூரி நேர்முகத் தேர்வில் நல்ல எண்கள் பெற்றதால், சென்னையிலேயே, அவள் கேட்ட மருத்துவக் கல்லூரியிலேயே இடம் கிடைத்தது.

அந்தச் செய்தி யாருக்கும் சந்தோஷம் கொடுப்பதுதான். ஆனால், சேர்த்த பிறகுதான் தெரிந்தது, அதன் செலவு விவரம் என்ன என்று. கல்லூரி, விடுதி, புத்தகங்கள், கருவிகள் என்று பல விவரங்கள் இருந்தன. அதைத் தவிர எங்கள் பெண் பிளஸ் டூ படிக்கும் வரை யூனிபார்ம்தான் உபயோகித்து வந்தாள். புடைவை எல்லாம் கிடையாது. மருத்துவக் கல்லூரியில் சேர்ந்ததுமே புடைவை 1 டஜனுக்கு மேலே, மற்றபடி அதற்குத் தகுந்தாற்போல் இதர டிரஸ் வகைகள், மற்றபடி விசேஷங்களுக்காக 2 பட்டுப் புடைவைகள் ஆகியவை தேவையாயிருந்தன. மற்றபடி விடுதிச் செலவு, பயணச் செலவு எல்லாமாகக் கூட்டிக் கழித்ததில் ஒரு 10,000 ரூபாய்க்கு ஓடியது. என்ன செய்வது என்று கொஞ்சம் யோசனை. ப்ராவிடண்ட் பண்டா, எல். ஐ. ஸியா என்று யோசனை.

அப்பொழுது மாதத்தின் 10, 11 — ந்தேதி இருக்கும் என்று நினைக்கிறேன். ஸ்ரீராம் சிட்ஸ் பண்டிலிருந்து ஒரு கவர் வந்தது. நான் வழக்கமாக வரும் மாதாந்திர ரசீது என்று நினைத்து அசுவாரசியமாகப் பிரித்துப் பார்த்ததில் ஆச்சரியம் காத்திருந்தது. அதிர்ஷ்டவசமாகவோ, அல்லது எதேச்சையாகவோ நான் 6 மாதங்களுக்கு முன்பு எழுத்து மூலம் கேட்டிருந்த ஏலத்திற்கு, என் சீட்டு விழுந்திருக்கிறது. அதை எழுத்து மூலம் ஸ்ரீராம் சிட்ஸ் எனக்குத் தெரியப்படுத்தி, ஃபாரத்தைப் பூர்த்தி செய்து, பணத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு எழுதியிருந்தார்கள். பிறகு நான் வேண்டியதைச் செய்து பணத்தைப் பெற்றுக் கொண்டேன் என்பதைச் சொல்லவும் வேண்டுமா? எங்கள் பெண்ணின் பெரிய தேவைகளும் சுலபமாக முடிந்தது. இந்தச் சுவையான சம்பவத்திற்கு ஸ்ரீராம் சிட் பண்ட்ஸே முழுக் காரணம்' என்றால் இது மிகையாகாது. இதனாலேயே ஸ்ரீராம் சிட் பண்ட்ஸில் பூரண நம்பிக்கை வந்துள்ளது. மேலும் முதலீடு செய்வதற்கு, ஸ்ரீராமின் சேவை நாட்டுக்குத் தேவை என்பதுடன் நிறுத்திக் கொள்கிறேன்.

டாக்டர் ஆர். கிருஷ்ணஸ்வாமி.
கல்பாக்கம் — 603 102.

• பிரம்மா



**உ**பேந்திரநாத் பிரம்மா.

இந்தியாவில் இருபத்தாறாவது மாநிலமாக 'போடோ நாடு' கேட்கும் மாணவர்களின் அணிக்குத் தலைமைதாங்கும் இந்தச் சாகச மனிதர், இன்னும் முப்பது வயதைக் கூடத் தொடாதவர். பாராகுயிர் என்ற கிராமத்தைச் சேர்ந்தவர். (கோக்ரஜார் மாவட்டம்)

சிறிய விவசாயக் குடும்பம். ஆரம்பக் கல்விக்கே மிகவும் சிரமப்பட்டவர் பிரம்மா. எப்படியோ கௌஹாத்தி காட்டன் கல்லூரியில் படித்து, கௌஹாத்தி பல்கலைக் கழகத்தில் எம்.எஸ்.ஸி. பட்டம் வாங்கி இப்போது, ஆராய்ச்சியைத் தொடர்ந்து அதன் மூலம் மாணவர் என்ற பெயரை இன்னும் தக்க வைத்துக் கொண்டிருக்கிறார்! அப்போதானே மாணவர் தலைவராக விளங்கலாம்!

# போராட்டக் களத்தில் போடோ மாணவர்

அசாம் மாணவர்களின் போராட்டத்தை நேரில் பார்த்த பிறகுதான் போராட்டம் என்றால் என்ன என்பதையே அறிந்து கொண்டாராம், பிரம்மா. அதனால்தானோ என்னவோ, அப்பட்டமாக அசாம் மாணவர் போராட்டம் போலவே நடத்தி வருகிறார்... படிக்கிற காலத்தில் மிக அமைதியாக இருந்த இந்த மாணவரா இப்படி அதிரடி அடிக்கிறார் என்று நம்ப மறுப்பவர் தாம் அதிகம்!

பிரம்மா போடோ மாணவர் போராட்டத்தை ஆரம்பித்த போது, யாரும் அவரைப் பொருட்படுத்தவில்லை. இந்த வருடம் பிப்ரவரியில் போராட்டத்தை மறுபடி தீவிரமாக்கி விட்டு, கொஞ்ச நாள் தலைமறைவாக இருந்தார். இப்போது திடீரென்று ஆகஸ்ட் கடைசியில், தில்லியில் இருக்கிறார் என்றார்கள். பிரதமர் ராஜீவுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தினார் என்றும் கேள்வி. உடம்பு சரியில்லாமல், நம் வேலூர் ஆஸ்பத்திரிக்கு வந்ததாகக் கூடச் சொன்னார்கள். உண்மை என்னவோ, பிரம்மாவுக்கே வெளிச்சம்! போடோ சமூகத்தினரில், இந்து மதத்தைச் சேர்ந்தவர் உபேந்திரநாத் பிரம்மா. (பிரம்மா என்ற பெயரில் முடியும் கிறிஸ்தவர்களும் உண்டு!)


**இ**வரது போடோ மாணவர் அணியின் கணக்குப்படி, சுமார் 40 லட்சம் போடோ மக்கள் அசாமில் மட்டும் இருக்கிறார்கள். (இதை மறுக்கிறது 71 சென்சஸ் கணிப்பு.) இந்தியாவின் வட கிழக்குப் பகுதியில் போடோ மொழி பேசும் மக்கள் மேகாலயாவிலுள்ள காரோ மலைப் பகுதிகள், திரிபுரா, கூச் பீகார், வடக்கு வங்காளம், பங்களாதேஷின் வடகிழக்குப் பகுதி போன்ற பல இடங்களில் உண்டு. திபேத்திய — பர்மிய மொழிகளின் பாதிப்பு உள்ள மொழிதான் போடோ மொழி.

அருணாசலப் பிரதேசத்தின் அடிவாரப் பகுதி முதல், பிரம்மபுத்திரா நதி வரை இடைப்பட்ட பிரதேசம்தான் இவர்கள் கேட்கும் போடோ நாடு மாநிலம்.

அசாம் மாநில முதலமைச்சர் மகந்த்தாவுக்குத் தொல்லை கொடுக்க, மத்திய அரசே போடோ பிரச்னையைத் தூண்டி விடுவதாக ஒரு குற்றச்சாட்டு இருக்கிறது. மத்திய அரசின் ஒரு புலனாய்வுப் பிரிவும் **(RAW)** மத்திய அமைச்சர் சந்தோஷ் மோகன் தேவும், போராட்டத்தைத் தூண்டி விடுவதாகப் பலமான சந்தேகங்களைக் கிளப்பியிருக்கிறார் மகந்த்தா!

**— சித்தார்த்.**

# பறக்கும் தோசைகள்!



தோசைகள் பறக்கின்றன! சிறகு முளைத்து அல்ல. விமானம் மூலமாக. பம்பாய் வாழ் தோசை ரசிகர்களுக்காகத் தினசரி பெங்களூரில் உள்ள எம். டி. ஆர். (மாவலி டிபன் ரூம்) நிர்வாகத்தினர் 60 முதல் 100 தோசைகளை விமானத்தில் அனுப்புகிறார்கள். தோசைக்கான ஆர்டர் முதல் நாள் மாலையே வந்து விடுமாம்!

நன்றி: பிஸினஸ் இண்டியா.

தகவல்: ஆர். கிருஷ்ணவேணி.




ஜப்பான் நாட்டில் ரயில்கள் தாமதமாக வரும் ஒவ்வொரு நிமிஷத்திற்கும் ஒரு ஜப்பானிய யென் வீதம் கணக்கிட்டுப் பயணிகளுக்குப் பணம் திருப்பித் தர வேண்டும்! ஆகவே அந் நாட்டு ரயில்கள் 98.5 சதவீதம் குறித்த நேரத்தில் ஓடுகின்றன.

ஆதாரம்: 'வியப்பூட்டும் செய்திகள்'

— அனுராதா ஆபஸ்தம்பன்.

மகாராஷ்டிரத்தில் மோர்வே கிராமப் பஞ்சாயத்துத் தலைவரையும் துணைத் தலைவரையும் ஏலத்தின் மூலம் தேர்ந்தெடுத்தனர். தலைவர் பதவி 13,500 ரூபாய்க்கும் துணைத் தலைவர் பதவி 5,500 ரூபாய்க்கும் ஏலம் போயிற்று. அத்தொகை கிராம வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்படுமாம்!

— சீதாபஞ்சு.




●● கர்நாடக மாநிலம் பீடார் மாவட்டத்தில் சில விஷமிகள் ஒரு திரில்லுக்காக நூதனத் திருட்டொன்றைச் செய்து வருகின்றனர். மகாத்மா காந்தி, டாக்டர் அம்பேத்கார் ஆகியோரின் சிலைகளில் உள்ள மூக்குக் கண்ணாடிகளை அவர்கள் திருடிப் போய் விடுகின்றனர்! இதைக் கண்டித்து அங்கு ஒருநாள் கதவடைப்பு நடந்தது!

ஆதாரம்: 'சண்டே' தகவல்: சீதாபஞ்சு.



## பஸ் பயணிகளுக்கு ஓர் எச்சரிக்கை!

வெளியூர் செல்லும் பஸ் ஒன்றில் ஜன்னல் ஓரம் உட்கார்ந்து பிரயாணம் செய்து கொண்டிருந்தார் அப்பாசாமி. ஜன்னலில் உள்ள நீண்ட கம்பிகள் மீது வலது கையை மடித்து வைத்து முழங்கையை வெளியே நீட்டியபடி அமர்ந்திருந்தார்.

எதிர்ப்புறம் வந்த லாரி, பஸ்ஸை ஒட்டி வருகையில், பலமாக முழங்கையில் மோத, 'அம்மா' என்று அலறியபடி பின்புறம் சாய்ந்தார். அந்த வேதனைக் குரலைக் கேட்ட டிரைவர் சட்டென்று 'பிரேக்' போட, அந்த வேகத்தில் அடிபட்ட அப்பாசாமி முன்புறம் சாய்ந்திருக்கிறார். முன் ஸீட் மீது உள்ள பைப்பில் தலை பலமாக இடிக்க, பாவம், அந்தக் கணமே இறந்து விட்டார். அப்பாசாமியின் மரணம் பஸ் பயணிகளுக்கு ஓர் எச்சரிக்கையாக அமையட்டும்.

— துரைஸ்வாமி.



# உத்தம புருஷன்

கணவனைக் கண்காணித்து முந்தானையில் முடிந்து கொள்ளப் பார்க்கும் உத்தம மனைவி ரேவதி. தனக்குப் புது செகரட்டரியாய் வாய்த்திருக்கும் அல்ட்ரா மாடர்ன் அமலாவுடன் ஜல்சா பண்ணத் துடிக்கும் பிரபு. அது அந்த ரகமல்ல; உத்தமி என்ற உண்மை வெளிப்படுமுன் பிரபு கொலைப் பழிக்கே ஆளாகும் சூளறு படிகளில் மாட்டிக் கொண்டு முழி பிதுங்குவதும், மீளுவதும் உத்தம புருஷனாய்த் திருந்துவதும் கதை கதையாம் காரணமாம்.

கன்னம் குழிந்த சிரிப்பும் கள்ளவிழிப் பார்வையும் கையாலாகாத்தனத்துப் பொருமலும் முணுமுணுப்பும் கையோங்கிய இடத்தில் அனாயாச ஆர்ப்பாட்டமும் பிரபுவின் தனி முத்திரைகள். மனைவி ரேவதி வசமாய் அவரை மடக்கி வாக்குச் சவுக்கால் சொடுக்கும் போது, "இப்பத்தான் இந்தப் பொம்பிளைங்க எதுக்குக் கல்யாணம் பண்ணிக்கிறாங்கன்னு புரியுது. அவங்க ஆசை தீரத் திட்டித் தீர்க்கறதுக்கு ஒரு ஆம்பிளை வேணும். அதுக்குத்தான்," என்று கடுப்புக் காட்டும் போது கரவொலி தூக்கல்.

இடைவேளை வரை இந்த மாதிரித் துள்ளலிலேயே நெஞ்சத்தை அள்ளிக் கொண்டு போன பிரபுவை அப்புறம் சீரியஸில் கொண்டு செலுத்திச் சப்புக் கொட்டச் செய்து விட்டார் டைரக்டர். வழக்கமான பழந்தடத்தில் திரும்பியது ஏமாற்றம் தான்.

குத்து விளக்குப் போன்ற ரேவதி படு பாந்தமான குடும்பத் தலைவி. கணவரைப் போலீசில் பிடித்துச் செல்லும் போது அவர் தவிக்கும் துடிப்பாகட்டும்; தான் தாய்மை அடைந்து விட்டதைக் கணவரிடம் காட்டும் பெருமிதப் படிமானமாகட்டும்; புகுந்த வீட்டை விட்டு வரும்படி போதனை செய்யும் தாயை மடக்கிச் சாடும் பாங்காகட்டும் — எந்தக் கட்டத்திலும் துளி பிசிறு தட்ட வேண்டுமே!

அமலாவின் பிரவேசக் கவர்ச்சி, பிரபுவின் எதிரில் அமரும் போது அந்தச் சுண்டும் பார்வை, சுழிக்கும் இதழ்கள், கொஞ்சல் பேச்சு, குமிழிடும் சிரிப்பு — இவற்றையெல்லாம் பார்க்கும் போது அவர் இதத்துக்கு வந்தவராய்த் தெரிகிறாரே தவிர, இதோபதேசத்துக்கு லாயக்கானவராய்ப் படவில்லை. சக்கர நாற்காலிக் கணவர் ரவி, சம்சார பந்தம் இவையெல்லாம் செயற்கைத்தனமாய் செருகப்பட்டவை போல் தோன்றினாலும் போலீசில் மாட்டிய பிரபுவுக்கு ஆதரவாய்ச் சாட்சி சொல்லக் கூண்டேறும் போது உபயோகப்படுகிறார் என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

சார்லிக்கு இடம் அதிகம்தான். பிரபுவுக்குக் கிளாஸ்மேட்டாய் இருந்து, இப்போது அவருக்குப் பியூன். அவருடைய உதவி தேவைப்படும்போதெல்லாம், 'நீதானேடா என் ஒரே ஃப்ரண்ட்?' என்று பிரபு குழைவதும் காரியம் முடிந்ததும் காலால் உதைப்பதும் தெரிந்ததுதான். 'இப்ப நான் ப்ரண்டா, பியூனா?' என்று அடிக்கடி ஆழப் பார்வையில் சந்தேகம் கேட்பது கலகல.

பொறுப்பான தந்தை வி.கே.ஆர். குடும்ப கௌரவத்தைப் பெரிதாய் நினைத்துப் பேசும் கட்டங்களில் உலுக்கி விடுகிறார்.

கட்டுமஸ்தான தினேஷ் ரொம்பத் தேர்ந்த சர்ஜன்தான் போங்கள். அடுத்தவரை அத்தனை அமைதியான இதமாய் அறுத்துத் தள்ளுகிறார்! படு பாலீஷ் வில்லன்.


மொத்தப் படத்துக்கு வலுவான இரண்டு கால்கள்: 1. காமெரா, 2. வசனம். ஒன்றுக்கு ஒன்று வாங்கல் இல்லை. காமெராக் கோணங்கள் கண்களை விரிய வைக்கின்றன என்றால் வசனங்களில் உள்ள கூர்மை காதுகளை விடைக்க வைக்கின்றது.

உத்தம புருஷன் என்ற தலைப்பில் செமை சபல கேஸ்!

— பி. எஸ். எஸ்.



# Essar invites you to share in the promising



- Essar is entering the high priority, high growth area of steel—by setting up India's second largest private sector steel plant.
- This 100% Export Oriented Steel Plant will earn around Rs.2500 crores in foreign exchange in the first five years of operations.
- Coupled with a Tax Holiday and a host of other concessions, this project combines rewarding returns and strong security.
- Essar has demonstrated its ability to put up large projects with the world's largest sponge iron plant which will be commissioned ahead of schedule by early 1990.
- The demand-supply gap for sponge iron in India is estimated at 45 lakh tonnes by 1990 and 65 lakh tonnes by 1994.
- The sponge iron will save over Rs.250 crores in foreign exchange every year.

**And now, you can invest in a Fully Convertible Debenture Issue with a built-in promise of sustained growth and high profitability– ESSAR STEEL BONDS.**

# world of steel.






For more details of the Debenture Issue and for Application Forms, please write to:

**ESSAR GUJARAT LIMITED**

Regd. Office: 13th Floor, Maker Chambers IV, Nariman Point, Bombay 400 021.

Name: ____________________


Address: ____________________

**ESSAR**

What the core sector is all about.

STEEL □ ENERGY □ OFFSHORE □ CONSTRUCTION


CLEA



போஃபர்ஸ் பற்றி...
போஃபர்ஸ் பற்றி குறை
வெளிநாடு சென்று திரும்பும் ராஜீவுக்கு குண்டுகள் முழங்க (அவ)மரியாதை!




வேண்டாம்னா விட்ருவமா?
சினிமாவில் நடிக்க ராமராஜுக்குத் தடை கிடையாது— நீதி மன்றம் தீர்ப்பு




# கல்கி

1989 செப்டம்பர் 17
மலர் 48 இதழ் 7
சுக்ல புரட்டாசி 1




## போஃபர்ஸ் அபாயத்தை விடப் பேரபாயம்!

போஃபர்ஸ் ஊழல் போன்ற பரபரப்பான விஷயங்கள் அலசப்படும் போது; எதிர்க்கட்சித் தலைவர்கள் மீதும் ஆளும் கட்சியினர் ஊழல் குற்றச்சாட்டுக்களை மூட்டை அவிழ்த்து விடும் போது; எப்பேர்ப்பட்ட பயங்கரமான ஊழலை விடவும் பேராபத்தான பொருளாதார நெருக்கடியில் இந்தியா சிக்கிக் கொண்டிருப்பதை மறந்துதான் போய் விடுகிறோம்! திருச்சியில் பேசிய குடியரசுத் தலைவர் ஆர்.வி., நமது அந்நியச் செலாவணி நிலைமை மிக ஆபத்தான கட்டத்தை நெருங்கியிருப்பதை நினைவூட்டியிருக்கிறார்! இந்த அபாயத்திலிருந்து மீளத் தேவையற்ற இறக்குமதிகளை உடனடியாகக் குறைக்க வேண்டும் என்று யோசனையும் சொல்லியிருக்கிறார்.

ஆர்.வி. நம்மை எதிர்நோக்கியுள்ள அபாயம் பற்றி தக்க சமயத்தில் எச்சரித்ததற்காக அவருக்கு நன்றி கூறத்தான் வேண்டும். ஆனால் நெருக்கடியிலிருந்து விடுபட அவர் கூறியுள்ள யோசனை, பாதி கிணறு தாண்டுகிற கதைதான். இறக்குமதியைக் குறைப்பது மட்டுமே பிரச்னைக்குத் தீர்வாகாது. நமது அந்நியக் கடன்கள் பெருகியிருப்பதற்குக் காரணம், நமது ஏற்றுமதியின் மதிப்பை விட இறக்குமதியின் மதிப்பு அதிகமாக இருப்பதுதான். ஆனால் இது மட்டுமே காரணம் அல்ல!

நமது ரூபாயின் மதிப்பு குறைந்து வருவது அதிமுக்கியமான ஒரு காரணம். முன்பு ஒரு டாலருக்குப் பத்து ரூபாய் தந்து வந்த இடத்தில் இன்று பதினாறு ரூபாய்க்கும் அதிகமாகத் தர வேண்டியிருக்கிறது. ரூபாயின் மதிப்பு மேலும் வீழ்ச்சி அடைந்து வருகிறது. இதற்கு ஏற்ப நமது அந்நியக் கடனும் நமது முயற்சி ஏதுமின்றி தன்னால் உயர்ந்து விடுகிறது! அதாவது, அந்நியக் கடனுக்கு நாம் வட்டி தருவது தவிர, ரூபாயின் மதிப்பு இழப்பு காரணமாகக் கூடுதலாகும் கடனையும் சுமக்கிறோம்! அதற்கும் சேர்த்து வட்டி கொடுக்கிறோம்! அந்நியக் கடன் என்பது அப்பேர்ப்பட்ட ஒரு பகாசுரன்! நமது செல்வத்தையெல்லாம் விழுங்கி ஏப்பம் விட்டுக் கொண்டிருக்கும் அரக்கன்!

எனவே அந்நியக்கடன் சுமை குறைய இறக்குமதியைக் குறைத்து ஏற்றுமதியை அதிகரித்தால் போதாது. மற்ற நாட்டு நாணயங்களின் மதிப்புடன் போட்டி போடும் அளவில் நமது ரூபாயின் மதிப்பு குறையாமல் ஸ்திரப்படுத்த வேண்டும். இதைச் செய்யாமல் எவ்வளவுதான் ஏற்றுமதி செய்தாலும் விசேஷப் பயனிராது. ஏற்றுமதியாளருக்குச் சலுகைகள் பல தருவதில் அந்தச் சாரார் மட்டும் கொழுத்த பணக்காரர்களாவதுடன் சரி. நாட்டின் செல்வம் கப்பலேறிச் சென்று கொண்டிருக்கும்! மக்களுக்கு வறுமையிலிருந்து விடுதலை கிடைக்காது!

ரூபாயின் மதிப்பு ஸ்திரப்பட என்ன செய்வது? அரசின் ஆடம்பரமான, உற்பத்திக்கு உதவாத செலவினங்கள் குறைய வேண்டும். பற்றாக்குறை பட்ஜெட் கூடாது. நோட்டு அச்சடித்து பற்றாக்குறையை ஈடுசெய்து, பணப்புழக்கத்தை அதிகரித்து, பணவீக்கத்துக்கும் விலைவாசி உயர்வுக்கும் வழிவகுக்கக் கூடாது. கறுப்புப் பணம் விளையாடாதிருக்க அதற்கேற்ற கொள்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். வரி விதிப்பைக் குறைத்து, சேமிப்பு பெருகவும் அது, தொழிலகங்களில் முதலீடாகவும் வேலை வாய்ப்புகள் பெருகவும் வழிவகுக்க வேண்டும். தொழிலகங்களில் உற்பத்தி அதிகரிக்க, நமது தொழிலாளர்களின் வேலைத் திறனும் உயர வேண்டும். ஒரு காலத்தில், 'இந்தியாவில் கூலி குறைவு; எனவே அங்கு தொழில்களை ஆரம்பிப்பதில் ஆதாயம் இருக்கிறது' என்று அயல்நாட்டினரால் கருதப்பட்டது. இன்று அந்த எண்ணம் போய் விட்டது. கூலி அதிகரித்திருப்பது மட்டுமல்ல; செயல்திறனும் குறைவாக உள்ளது. ஜப்பானில் அல்லது அமெரிக்காவில் கூலி அதிகமாகத் தந்தாலும் ஊழியர்களின் உற்பத்தித் திறன் மிக அதிகமாக இருப்பதால் நல்ல லாபம் கிட்டுகிறது. இங்கு இந்தநிலைமைக்குக் காரணம், தொழிற்சங்கங்களில் அரசியல் ஊடுருவலும் தொழிலாளர்களுக்குப் போதிய கல்வியும் பயிற்சியும் தரப்படாததும் ஆகும். இதையெல்லாம் சீர் செய்தாக வேண்டும்.

உள்நாட்டுப் பொருளாதாரம், தொழில் வளர்ச்சி இவற்றில் வெற்றி பெறாமல் ஏற்றுமதி வர்த்தகத்தில் கொடிகட்டிப் பறந்து விடலாம் என்று நினைப்பது மடத்தனம். இது பொருளாதாரத்தில் ஆரம்பப் பாடம். இதைக் கூட அறியாதவர்கள் நம்மை ஆள்வது நமது துரதிர்ஷ்டம்.

---

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

# மேலான யோசனைகளுக்கு மேல்சபை

**எம். ஜி. ஆர்., தேவையற்றது எனக் கருதிக் கலைத்து விட்ட மேல் சபையைத் திரும்பவும் உருவாக்கப் போவதாக முதல்வர் கூறி வருகிறார். மேல் சபை என்பது எப்படி அமைய வேண்டும், அதன் பணிகள் என்ன? சி. எஸ். விளக்குகிறார்:**



• நாங்கள் மந்திரிகளாக இருந்த போது...

சட்டமன்றத்தில் பல துறைகளைச் சார்ந்த அறிஞர்கள் இடம்பெற முடியாததாகையால் மேல் சபையில் அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளித்து, அவர்களின் கருத்தைக் கேட்டு அரசு செயல்படுவது என்பது அந்தக் காலத்திலிருந்தே இருந்து வரும் நடைமுறை. பல துறைகளில் இருந்து மேல் சபைக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். உதாரணமாக உள்ளாட்சி நிறுவனங்களிலிருந்தும், ஆசிரியர்கள் சார்பாகவும், பட்டதாரிகள் சார்பாகவும், பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு வருவார்கள். அது மட்டுமல்லாமல் சிறந்த அறிஞர்களை — கல்வியாளர்களை அரசே கவர்னர் மூலம் நியமிக்கும். ஆனால் கழகங்களின் ஆட்சியின் போது மேல் சபையின் கோட்பாடே 'தீர்த்து' விட்டது. பல்லாண்டு காலம் உள்ளாட்சி நிறுவனங்களுக்குத் தேர்தல் நடக்காததால் அதிலிருந்து பிரதிநிதிகள் மேல் சபைக்கு வர முடியவில்லை; மேலும், தேர்தலில் தோற்றவர்கள், டிக்கெட் கிடைக்காதவர்கள், அரசியல் காரணங்களுக்காக மேல் சபை உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டார்கள்.

• அரசியல் ஆதாயங்களைக் கருதாமல்...



கலைஞர் மேல்சபையை மீண்டும் கொண்டு வரும் இந்த நேரத்தில் சில விஷயங்களை அவருக்குக் கூறிக் கொள்கிறேன். அந்தக் காலத்தில் நாங்கள் மந்திரிகளாக இருந்த போது சட்டமன்றத்தில் அவசர அவசரமாகப் 'பாஸ்' ஆகும் மசோதாக்கள் மேல் சபையில் பல அறிஞர்களால் அக்கு வேறு — ஆணிவேறாக அலசப்படும். காங்கிரஸ் சார்பில் அறிமுகப்படுத்தப்பட்ட கல்விக் கொள்கையில் லட்சுமணசாமி முதலியார் போன்ற அறிஞர்கள் கலந்து கொண்டு பல நல்ல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அவை அரசால் ஏற்கப்பட்டு, சட்டத்தில் சேர்க்கப்பட்டும் இருக்கின்றன. அதேபோல், நிலச்சீர்திருத்த மசோதா, பஞ்சாயத்து மசோதா போன்றவை, தீவிரமாக விவாதிக்கப்பட்டு இருக்கின்றன. பி. வி. ராஜமன்னார், டாக்டர் ஜான், ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் போன்றவர்கள் மேல் சபையை அலங்கரித்திருக்கிறார்கள். ஏன், ராஜாஜி மேலவை உறுப்பினராக இருந்து புத்திசாலித்தனமாகவும், சாதுரியமாகவும் அவையை நடத்திக் கொண்டு போனது நாட்டு மக்களுக்குத் தெரியும்.

கலைஞர் ஆட்சி பல நல்ல செயல்களைச் செய்து வருகிறது. கழகங்களின் பழைய ஆட்சிகளை விட மிகச் சிறப்பாக இருக்கிறது. மேல் சபை அமைக்கும் போதும் கலைஞர் அவசரப்பட்டு விடாமல், அரசியல் ஆதாயங்களைக் கருதாமல் அரசுக்கு நல்ல பல ஆலோசனைகளைத் தரக்கூடிய அறிஞர்களைக் கொண்டு அவையை நிரப்பினால், அவருக்கும் நன்மை; அரசுக்கும் நன்மை; மக்களுக்கும் நன்மை.

பேட்டி: **தில்லப்பா**

# வாய்ப் பூட்டு

"செண்பகத்திற்கும், நல்லதம்பி வாத்தியாருக்கும் ஒரு 'இதாம்'.'' ஊரே பேசிக் கொள்கிறது!

புருஷனை இழந்த எட்டாவது மாதத்தில் இப்படியொரு பயங்கர இடி தன் தலையில் விழும் என்று செண்பகம் கனவில் கூட நினைத்துப் பார்த்தது இல்லை.

இந்தச் 'சங்கதி' வாய்க்கால் வரப்பு, குளத்தங்கரை, ஊர்ச்சாவடி, முச்சந்தி என்று ஒரு வாரம், பத்து நாட்கள் கிசுகிசுக் கப்பட்டு, ஊரில் இருக்கும் ஒன்றிரண்டு நல்ல மனிதர்கள் கூட இரண்டு நாட்களா கச் செண்பகத்தைக் கண்டதும் ஒரு மாதிரி யாகப் பார்த்து விட்டு ஒதுங்கிப் போய் விடுகிறார்கள்.

செண்பகத்திற்கு அழுகை அழுகையாக வந்தது.

கடவுள் அவள் விதியோடுதானா விளை யாட வேண்டும்!

இந்த எட்டு மாதங்களில் ஒரு நாள் கூட செண்பகத்தின் அங்க அசைவுகளை நோட் டம் விடாத கண்கள் ஏதேனும் அந்த ஊரில் இருந்திருக்குமா?

ஆசை வார்த்தைகளைப் பேசி அவளை மோசம் செய்ய நினைக்காத ஆண்கள் யாரேனும் மிஞ்சியிருப்பார்களா?

ஆசா பாசங்களைப் பொசுக்கி விட்டு மரக் கட்டையாக வாழ்ந்து கொண்டிருப்ப வளை இச் சமூகம் ஏன்தான் சீண்டிப் பார்க்கிறதோ?



விஷ்ணுப்பிரியன்

இல்லாததை இருப்பது போலவும், பார்க்காததைப் பார்த்தது போலவும், கேட்காததைக் கேட்டது போலவும் பொய்யை மெய்யாக்கிப் பேச எப்படித்தான் இந்த மனிதப் பிறவிகளுக்குத் துணிவு பிறக்கிறதோ?

செண்பகத்தின் நெஞ்சில் கிளர்ந்தெழுந்த புயல் அகோரமாகிக் கொண்டிருந்தது. உள்ளக் குமுறல் எரிமலையாகித் தகித்தது.

'பாவம்... நல்லதம்பி வாத்தியார்... அவர் என்ன தப்பு செஞ்சார்...? அவரையும் என்னோடு இணைச்சுப் பேசுறீங்களே...! நல்லதம்பி வாத்தியார் இந்த ஊருக்கு விருந்தாளி மாதிரி வந்து தங்கி பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லித் தராரு... அவருக்குன்னு புள்ளை குட்டி எதுவும் கிடையாது. சின்னக் குழந்தையாட்டம் வெகுளித்தனமா பேசுவாரு... மத்தவங்க மாதிரி உள்ளே ஒண்ணு வச்சி வெளியெ ஒண்ணு பேச அவருக்குத் தெரியாது. நாக்குக்கு ருசியா இருந்தா ரெண்டு வாட்டியில்லே மூணு வாட்டி கூட வாய் கூசாம கேட்டு வாங்கிச் சாப்பிடுவாரு... சமையல் புடிக்கலேன்னா குறை சொல்லாம சிரிச்சுக்கிட்டே சாப்பிட்டுட்டு எழுந்திருச்சுடுவாரு... மத்தவங்க மாதிரி ருசி இருந்தாலும், இல்லாட்டியும் உழக்கு அரிசிச் சாதத்தை ஒரே மூச்சுல தின்னு தொலைக்கிற ஆத்மாவா அவரு....?' செண்பகம் மனத்துக்குள் புலம்பினாள்.

அவர் முதன் முதலில் தன் வீடு தேடி வந்தது பசுமையாக ஞாபகமிருந்தது:

"வாங்க சாரு... வாங்க...! சாருக்கு எந்த ஊரு...? இந்த ஊருக்குப் புதுசா உத்தியோகம் பாக்க வந்திருக்கீகளா...? இல்லே யாபாரம் விசயமா வந்திருக்கீகளா...? உள்ள வந்து உக்காருங்க... சாப்பிடுங்க..."

உச்சி வெயில் மண்டையைப் பிளந்து கொண்டிருந்தது. கையில் ஒரு சூட்கேசுடன் களைப்போடு தன் ஓட்டல் வாசலில் வந்து நின்ற அந்த முப்பது வயது இளைஞனைப் பார்த்த செண்பகம் வழக்கமான தன் வியாபார ரீதியான வார்த்தைகளால் அவனை வரவேற்றாள்.

"நான் இந்த ஊருக்குப் புதியவன்... வாத்தியார் வேலை பார்க்க வந்திருக்கேன்.. உங்க ஓட்டல்லே சாப்பிட்டுட்டு, பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிற நேரம் போக மத்த நேரத்தை எங்கயாச்சும் முடங்கிக் கிடந்து போக்கலாம்னு வந்திருக்கேம்மா...."

வாத்தியார் நல்லதம்பியின் சூதுவாதில்லாத சிறுபிள்ளைத்தனமான பதில் செண்பகத்திற்குச் சிரிப்பை வரவழைத்தது.

செண்பகம் கொடுத்த செம்புத் தண்ணீரில் காலையும், கையையும் கழுவி, முகம் அலம்பிய பின் தரையில் தனக்காக போடப்பட்டிருந்த வாழை இலை முன்பு அமர்ந்த வாத்தியார் நல்லதம்பி, சுத்தமான நெய் மணத்துடன் தன்னைக் கவர்ந்திழுத்த அந்தச் சாப்பாட்டை ஒரு பிடி பிடித்துவிட்டுத் திவ்யமான ஒரு விருந்துண்ட திருப்தியுடன் எழுந்தார்.

"சாப்பாடு ரொம்ப அருமை... இந்த மாதிரிச் சமையலை நான் இதுக்கு முன்னாடி எங்கேயும் சாப்பிட்டதில்லே... ஒரு பட்டிக்காட்டுக்கு வாத்தியாராப் போறோமே, எப்படி அங்கே காலம் தள்றதுன்னு பயந்துக்கிட்டு வந்தேன்... உங்க ஓட்டல்லே... மன்னிச்சுடுங்க... உங்க வீட்ல இந்தச் சமையலைச் சாப்பிட்ட பின்னாடி உங்க ஊர்லயே காலம் தள்ளிடலாம்ங்கிற முடிவுக்கு வந்துட்டேம்மா..."

நெஞ்சுச் சளி என்று பத்து நாட்களாக அவதிப்பட்டார் நல்லதம்பி வாத்தியார். மருந்து மாத்திரைகள் சாப்பிட்டும் பலனில்லை. கடைசியில் செண்பகம் செய்து கொடுத்த கஷாயத்தில்தான் குணமாகியது.

ஆடிப்பெருக்கன்று சேமியா பாயாசம் வைத்தாள் செண்பகம். "செண்பகம் பாயாசம் நல்லா இருக்கு... இன்னொரு டம்ளர் கொடேன்" என்று நல்லதம்பி வாத்தியார் பிரியமாகக் கேட்டார்.. பிரியப்பட்டுக் கேட்கிறாரே என்று செண்பகமும் கொடுத்தாள்.

பார்த்துக்கொண்டிருந்த ஊர், இரண்டை எட்டாக்கிப் பேசியது.

'உப்புன்னு சொன்னாலே பத்தியமா முறிஞ்சி போயிடும்...? விதவை ஒருத்தி பாவப்பட்டவங்களுக்கு உதவக் கூடாதுன்னா அதுல என்ன நியாயமிருக்கு? நான் நல்லதம்பி வாத்தியாருக்கு உதவுனதை ஏன் எல்லாரும் வித்தியாசமா பேசுறாங்க? அயோக்கியப் பசங்களுக்கு இடம் கொடுக்கலேங்கிற ஒரே கடுப்புலதானே நாக்குல நரம்பில்லாம பேசுறாங்க... பேசிட்டுப் போகட்டும்... என் மனச்சாட்சிக்கு நான் துரோகம் ஒண்ணும் பண்ணலியே... அப்புறம் ஏன் நான் இவங்களைப் பத்திக் கவலைப்படணும்...?'

---

**என் கணவரும் நானும் 10.8.89 அன்று விராலி மலை முருகன் கோயிலுக்குச் சென்றிருந்தோம். அடிவாரத்தில் ஒருவர் சிறு** பெட்டிக்கடை வைத்திருந்தார். "நான் இந்தக் கோவிலில் பரம்பரையாக நாதஸ்வரம் வாசிக்கிறேன். எனக்கும் இங்கு உள்ள மற்ற பணியாளர்களுக்கும் மாதச் சம்பளம் 'பத்தொன்பது காசு'" என்றார். நம்ப முடியாமல் நாங்கள், "உண்மையாகவா?" என்று பலமுறை கேட்டோம். அவர், "ஆம்" என்றார். இவர்களுக்கு யார் சம்பளக் கமிஷன் அமைப்பது; பரிந்துரை செய்வது?

— எம். ஆனந்தி.



— செண்பகம் மனத்தைத் தேற்றிக் கொண்டாள்.

ஒரு வாரம் சென்று, கெட்ட எண்ணத்துடன் தலைக்கிறுக்கு ஏறிப் போன ஒருவன் செண்பகத்திடம் சில்மிஷம் செய்ய, யதேச்சையாக வந்த வாத்தியார் நல்லதம்பி, அவனைத் தடுத்து, சூடாக நாலு வார்த்தைகள் கேட்கவும், காரியம் மிஞ்சி இருவரும் அடிதடியில் இறங்கும் அளவுக்கு விவகாரம் முற்றி விட்டது. நடக்கவிருந்த மல்யுத்தம் மற்றவர்கள் தலையிட்டால் நின்று போனது. ஆனால் அந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து செண்பகத்தையும், வாத்தியார் நல்லதம்பியையும் இணைத்துப் பேசப்படும் பேச்சுக்கள் மட்டும் அதிகரித்த வண்ணம் இருந்தன.

"கட்டின பெண்டாட்டியைக் காப்பாத்தப் போற புருசனாட்டம் இல்லே இந்த வாத்தியார் பயலுக்குச் செண்பகத்தைப் பத்திப் பேசுனா கோபம் பொத்துக்கிட்டு வருது..."

ஊராரின் இந்தப் பேச்சு செண்பகத்தின் மூளைக்குள் வண்டு ஒன்று புகுந்து துளைத்து தொந்தரவு கொடுப்பது போல் உறுத்திய வண்ணம் இருந்தது — 'பளிச்' என்று ஒரு மின்னல் வெட்டி வண்டைத் துரத்துகிறவரை....!

பளிச்சென்று வெள்ளையில் உடுத்தி வழக்கமான நேரத்துக்குச் செண்பகத்தின் சாப்பாட்டுக் கடை வாசலில் வந்து நின்ற வாத்தியாருக்கு ஒரே அதிர்ச்சி. செண்பகத்தைத் திட்டியபடியே, பல வாடிக்கையாளர்கள் திரும்பிக் கொண்டிருந்தார்கள். வாசலில் கரிக்கட்டியில் எழுதிய பலகை தொங்கியது. 'இன்று முதல் ஓட்டல் மூடப்பட்டது'.

"என்னம்மா! ஓட்டல்காரம்மா...! இப்படி ஒரு பெரிய குண்டா தூக்கிப் போட்டீங்க! இனிமே நாங்க சோத்துக்கு என்ன செய்யறது...? அட அதுதான் போகட்டும்; நீங்க பொழப்புக்கு என்ன செய்வீங்க...?" என்று செண்பகத்தை நோக்கி வேதனையோடு கேட்டார் நல்லதம்பி வாத்தியார்.

"இனிமேல் இந்த வீட்டில ஒருத்தர் மட்டும் மனத் திருப்தியோடு நான் சமைச்சுப் போடுறதைச் சாப்பிட்டா அதுவே எனக்குப் போதும் வாத்தியாரய்யா..."

"என்னம்மா சொல்றீங்க? அது எப்படி உங்களுக்குக் கட்டுப்படியாகும்...? வியாபாரம் நஷ்டமாயிடாதா?" — பதறினார் நல்லதம்பி வாத்தியார்.

"ஆனா அந்த நஷ்டத்துக்குக் கிடைக்கப் போற ஈடு ரொம்ப அருமையாச்சே... நான் செஞ்ச காரியம் இன்னுமா புரியலே வாத்தியாரய்யா உங்களுக்கு...?" என்ற செண்பகத்தின் நாணம் கலந்த அழகிய கண்களில் நீர் திரையிட்டிருந்தது.

அவளை முதன் முறையாக ஏறிட்டுப் பார்த்த நல்லதம்பி வாத்தியாரின் கண்கள் கண்ணாடி போல் அதே உணர்ச்சிகளைப் பிரதிபலித்தன.



## அருள்வாக்கு

மில் துணி பகிஷ்காரம் பண்ணிக் கதரை அபிவிருத்தி பண்ண வேண்டுமென்று காந்தி தீவிரமாக இருந்த காலம். சீமையிலிருந்துதான் அப்போது மில் துணி வரும். ஆகையினால் மில் துணி பகிஷ்காரம் என்பதில், 'ஒரு கல்லில் இரண்டு மாங்காய்' என்கிற மாதிரி இரண்டு லக்ஷ்யங்கள் பூர்த்தி ஆயின. ஸ்வதேசியத்தை ஆதரித்து விதேசியத்தை, பகிஷ்கரிப்பது என்பது ஒன்று; Man Power ஐ (மனித சக்தியை) ஆதரித்து மெஷின் பவரை எதிர்ப்பது இன்னொன்று.

இந்தக் கொள்கையில் எனக்கும் அபிமானம் உண்டு. அப்போது ராமேச்வர யாத்திரை போயிருந்தோம். இந்த நல்ல சமயத்தில் மடத்துச் சிப்பந்திகளையெல்லாம் ஆலைத் துணியை விட்டுவிட்டுக் கதர் உடுத்தும் பழக்கத்தை மேற்கொள்ளச் செய்ய வேண்டும் என்று தோன்றிற்று. அக்காலத்திலே அங்கங்கே மில் துணிகளைச் சொக்கப் பானை மாதிரி கொளுத்தி ஸ்வதேசி அபிமானிகள் விழா நடத்துவது வழக்கம். எனக்கென்னவோ அசேதனமான துணிதான் என்றாலும் அதைக் கூட நெருப்பிலே போட்டுக் கொளுத்துவது என்றால் ஹிம்சை மாதிரி தோன்றிற்று. இப்படியில்லாமல் ஸாத்விகமாக, குளிர்ச்சியாக 'ஜல சமாதி' என்று சொல்கிறார்களே, அப்படி ஆலையில் உற்பத்தியான வஸ்திரங்களை ஸமுத்திரத்தில் போட்டுவிட்டு (மடத்துச் சிப்பந்திகள்) எல்லாரையும் கதர் கட்டிக் கொள்ளும்படி பண்ணலாமென்று நினைத்தேன். அப்படியே தனுஷ்கோடியில் எல்லாரும் ஸ்நானம் செய்தவுடன் மில் துணி உடுத்திக் கொண்டிருந்தவர்கள் அதை ஸமுத்திரத்திலே போட்டு விட்டுக் கதர் கட்டிக் கொள்ள ஆரம்பித்தார்கள். மதுரையிலிருந்து இதற்காக நிறையக் கதர் வஸ்திரங்கள் தருவித்திருந்தோம். தலா இரண்டு ஜோடி கதர் சோமனும் (வேஷ்டியும்) மேல் வேஷ்டியும் கொடுத்தது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய ஸ்வாமிகள்.

அடுத்த நூற்றாண்டு 7

# கம்ப்யூட்டர் மூலக் களவு!

சென்ற வாரம் கடைசியில் சொன்ன வசதிக்கு இ.எஃப்.டி. (EFD) எலக்ட்ரானிக் ஃபண்ட் ட்ரான்ஸ்ஃபர் (Electronic Fund Transfer) என்று பெயர். எலக்ட்ரானிக்ஸ் மூலமாக நிதிமாற்றம் என்பது இப்போதே அமெரிக்காவில் உள்ளது. அடுத்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் நம் நாட்டிலும் நிச்சயமாக வரப் போவதற்கான அறிகுறிகள் யாவும் உள்ளன.

இந்த வசதிகளுக்கெல்லாம் அடிப்படை செய்தித் தொடர்பு. கம்ப்யூட்டர்கள் கம்ப்யூட்டர்களுடன் தெளிவாகப் பேசிக் கொள்ளும் வசதி.

'பேசிக் கொள்ளும்' என்பது ஒரு பேச்சுக்குத்தான் சொல்வது! அவை குரல் போட்டுப் பேசுவதில்லை. பைனரியாக, முன்பு சொன்னாற் போல 1,0க்களாகத்தான் செய்தி பரிமாறிக் கொள்கின்றன. அதுவும், பண விவகாரம் என்பதால் இந்த செய்திப் பரிமாற்றம் மிகவும் நம்பகமாக இருக்க வேண்டியது அவசியம். அதற்காக ஒரு கம்ப்யூட்டரும் மற்றொரு கம்ப்யூட்டரும் தொடர்பு கொள்வதற்கான செய்தி வடிவங்களையெல்லாம் மிகவும் நுட்பமாக, ஜாக்கிரதையாக அமைத்திருக்கிறார்கள். தவறுகள் நிகழவே சாத்தியமில்லாமல் புத்திசாலித்தனமான பற்பல முறைபாடுகள் வைத்திருக்கிறார்கள். இத்தனை பத்திர ஏற்பாடு இருந்தும், வங்கி கம்ப்யூட்டர்களை ஏமாற்றிக் கொள்ளையடிப்பது மேல் நாட்டில் இப்போதே, ஓர் ஆரோக்கியமான பொழுதுபோக்கு! 'வைட் காலர் க்ரைம்' (White Collar Crime) என்று — ஏமாற்றும் ஒரு புதிய விற்பன்னர்களின் கோஷ்டியே வந்திருக்கிறது. கம்ப்யூட்டர் தெரிந்த பாங்கி சிப்பந்தி ஒருவர் கம்ப்யூட்டர் மூலம் தன் பெயரில் ஒரு கணக்கு ஆரம்பித்து, கூட்டல் பெருக்கலின் போது லேசாக மிஞ்சும் கடைசி தசமஸ்தான பைசாக் கணக்கை மட்டும் தன் அக்கவுண்டில் போட்டுக் கொண்டு, கோடீஸ்வரரானார்! ஆறு வருஷமாக அவர் தந்திரத்தை யாரும் கண்டு பிடிக்காமல், கடைசியில் அவரே பொறுக்காமல் அதைப் பற்றிப் பெருமையாகப் பேசிக் கொள்ள, மாட்டிக் கொண்டு ஜெயிலுக்குப் போனார்! கம்ப்யூட்டர் க்ரைம் என்பதைப் பற்றி மற்றொரு சந்தர்ப்பத்தில் சொல்கிறேன்.


இன்று நம் நாட்டில் பரவிக் கொண்டிருக்கும் எலக்ட்ரானிக் டிஜிட்டல் எக்ஸ்சேஞ்சுகளில் தனி மனித சுதந்திரத்தை ஆக்கிரமிக்கும் வசதிகள் எவ்வெவை என்று பார்க்கலாம். ஒவ்வொரு நாளும் யார் யாருக்குக் 'கால்' போச்சு, எப்போது, எத்தனை நிமிஷம் என்கிற செய்தி நம் டெலிஃபோன் எக்ஸ்சேஞ்சுகளில் இப்போதும் இருக்கிறது. இதனால் எத்தனை சௌகரியம் பாருங்கள்! அதிகப்படியாக போன் பில் வந்தது என்கிற புகாரே இல்லை. புட்டு புட்டு வைத்து விடும். அதே சமயம் உங்கள் மனைவி அல்லது மகன் யார் யாருக்கு போன் பண்ணினார்கள் என்பது உங்களுக்குத் தெரிய வரலாம். அதே போல் நீங்கள் யார் யாருக்கு போன் பண்ணுகிறீர்கள் என்பதும்! நல்லதொரு குடும்பத்தில் அதனால் உபத்திரவம் ஏதும் இல்லைதான்.

ஆனால் இந்தத் தகவல் நிஜமாகவே நன்மைபயக்கக் கூடியதுதானா? என்பதை யோசித்துப் பாருங்கள்.... ஒவ்வொரு மனிதனும் ஒரு தனிப்பட்ட தீவு என்பார்கள். அந்தத் தீவுத்தன்மையை இழப்பதில் பலருக்கு இஷ்டமிருக்காது. முற்றிலும் இணைக்கப்பட்ட சமுதாயம் (Wired Society) என்பது விரும்பத்தக்கதல்ல.

முன்னேற்றத்தின் சாபக்கேடுகள் அவை! இவைகளை டெக்னாலஜியை வைத்துக் கொண்டு சற்று நிவாரணம் செய்ய முடியும். என் நண்பர் ரொம்ப பிரபலமானவர். ஒரு காலகட்டத்தில் அதிகப்படியாக அவர் மனைவிக்கு பயமுறுத்தல் போன் கால்கள் வந்து கொண்டிருந்தன. அந்தப் பெண் ரொம்பப் பயந்து போய், அவர்களை எப்படி தடுப்பது என்று கேட்டார்.

அன்றைய டெக்னாலஜியில் ஸ்டரோஜர் வகை எக்ஸ்சேஞ்சுகள் அதிகம் இருந்ததால்

சுஜாதா




* தொலை தூரத் தொடர்பில் லேட்டஸ்ட்: ஜப்பான் என். இ. ஸி. நிறுவன ஸாட்டிலைட் டெலி வகுப்பறை. ஸாட்டிலைட் மூலம் வரும் பாடங்கள் டோக்கியோவிலுள்ள ஸ்டுடியோவிலிருந்து தூர கிராமங்களில் உள்ள மூன்று வகுப்பறைகளுக்கு அனுப்பப்படுகிறது. நம் டீ.வி.யில் யூ. ஜி. ஸி. பாடங்கள் இந்த முறையில்தான் ஒளிபரப்பாகின்றன. ஒரு முக்கியமான வித்தியாசம் — ஜப்பான் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஆடியோ விடியோ தொடர்பு உண்டு. கேள்விகள் கேட்டு, பதில் பெறலாம்.

---

காலை ட்ரேஸ் பண்ணுவது கஷ்டம். நண்பர்கள் தெரிந்தவர்களிடம் ஏதாவது சங்கேத முறை வைத்துக் கொள்ளுங்கள். ஒரு தடவை கூப்பிட்டு விட்டு ரிங் தொடங்கின உடனே நிறுத்தி விட்டு, மறுமுறை கூப்பிட்டால் நண்பர் என்று தெரிந்து கொள்ளலாம். இவ்வாறுதான் உபாயம் சொல்ல முடிந்ததே தவிர, டெக்னாலஜி வழியாக ஏதும் சொல்ல முடியவில்லை. ஆனால் இன்றைய எலக்ட்ரானிக் எக்ஸ்சேஞ்சுகளில் எந்த நம்பரிலிருந்து போன் வந்தது என்று கண்டுபிடிப்பது சாத்தியம். இதுவே ஒரு முன்னேற்றம்.

நாளைய போன்களில் வரப்போகும் வசதிகளில், நண்பர்கள் கூப்பிட்டால் மட்டும் வேறுவிதமாக மணியடிக்கும் போன்கள் வரப் போகின்றன.

அது மட்டும் இன்றி, நண்பர்களின் குரலை அடையாளம் கண்டுபிடித்து ஒரு சிலருக்கு மட்டுமே பதில் சொல்லக்கூடிய டெலிபோன்களும் வரப்போகின்றன!

இந்த 'வாய்ஸ் ரெகாக்னிஷன்' **(Voice Recognition)** என்பது பற்றி அடுத்த இதழில் சொல்லுமுன் போன வாரமே க்விஸ் விட்டுப் போயிற்றல்லவா? அதனால் இந்த வாரம் கொஞ்சம் விஸ்தாரமானது... (டிஸ்கவர் பத்திரிகையிலிருந்து) ஒன்பது கேள்விகள். பரிசு ரூ. 100:

1. சிவகாமியின் சபதம் புத்தகத்தில் 100ஆம் பக்கத்திலிருந்து 203ஆம் பக்கம் வரை தொடர்ந்து படித்தீர்கள். மொத்தம் எத்தனை பக்கம் படித்தீர்கள்?

2. 203 அங்குல நீளமுள்ள ஒரு கயிற்றை 100 சம துண்டுகளாக வெட்ட வேண்டும். எத்தனை வெட்டு?

3. நகைக் கடைக்காரரிடம் 203 தங்கச் செயின்கள். ஒவ்வொன்றிலும் 100 கணைகள் **(links)**. அதை ஒரே செயினாக மாற்ற விரும்புகிறார். எத்தனை கணைகளைப் பிரித்துச் சேர்க்க வேண்டும்?

4. ஒரு கடிகாரம் நாலு அடிக்க நாற்பது செகண்டு ஆகிறது. பன்னிரண்டு அடிக்க?

5. ஒன்றிலிருந்து நூறு வரை ஒன்பது வரும் நம்பர்கள் எத்தனை?

6. நூறுக்கு நூறு சதுர அடி பிளாட்டில் பத்து அடி இடைவெளியில் சுற்றிலும் போஸ்ட் நட்டால் மொத்தம் எத்தனை போஸ்ட்?

7. 2048 நாணயங்கள் உள்ளன உங்களிடம். அதில் ஒன்று செல்லாது. (அதாவது எடை குறைவு) ஒரே ஒரு தராசு. படிக்கல் ஏதும் கிடையாது. குறைந்தபட்சம் எத்தனை முறை எடை போட்டுக் கள்ள நாணயத்தைக் கண்டுபிடிக்க முடியும்?

8. ராத்திரி பன்னிரண்டு மணியிலிருந்து பகல் பன்னிரண்டு வரை எத்தனை முறை பெரிய முள் சின்ன முள்ளைக் கடக்கிறது?

9. ஒன்றிலிருந்து நூறு வரை கூட்ட ஒரே ஒரு பெருக்கல் போதும். அது என்ன?

விடைகளை அனுப்பக் கடைசித் தேதி: 18.9.89.

(தொடரும்)

# இங்கு

கி.பி. 1992 ஆம் ஆண்டில் செப்டம்பர் மாதத்தில் ஒரு நாள் — மதிய வேளை. அங்கு ஒரு லட்சத்தி இருபதாயிரத்து எழுநூற்றி ஒன்பது பேர் இருந்தனர், என்றது கம்பூட்டர். அவர்களில்தான் எத்தனை நிறம்! கறுப்பு, கருஞ்சிவப்பு, வெறுஞ் சிவப்பு, கோதுமை சிவப்பு, சோகை பிடித்த மாதிரி வெள்ளை, உடம்பு பூரா பச்சைக் குத்திக் கொண்டு இலை போல் பசுமையாய் ஒருவன், ஏன்! உடம்பு பூரா கரடிமாதிரி உடை அணிந்து கூட ஒருவன்!

அவர்கள் டிரெம்பெட், சாக்ஸபோன், பாங்கோஸ், டிரம், பெரிய ஜால்ரா, என்று கையில் கிடைத்த வாத்தியத்தை அள்ளிக் கொண்டு வந்து சப்தமெழுப்பிக் கொண்டிருந்தனர். கையில் ஒன்றும் இல்லாதவர்கள் பக்கத்தில் இருந்தவர்களின் முதுகில் வாசிக்க முயற்சி செய்தனர்.

பார்சிலோனா நகரத்தில் 26வது ஒலிம்பிக் நடைபெறும் ஒலிம்பிக் ஸ்டேடியத்தில் தான் அவர்கள் அப்போது கூடி இருந்தனர். ஸ்டேடியத்தைத் தவிர நகரத்திலும் கூட மக்கள் இருக்கிறார்களா என்று சந்தேகம் வந்தது — அவ்வளவு கூட்டம்! ஆனால் நம் கவலையெல்லாம் 'அவன்' ஜெயிக்க வேண்டும் என்பதே! 'அவன்' ஓர் இந்தியன், மணிக்கொடி வெங்கடேச சுந்தர் என்கிற 25 வயது எம். வி. சுந்தர்.

அவன் இப்பொழுது "கால்சிரோவா" மலையடிவாரத்தில் உள்ள ஒரு ரோட்டில் மற்ற நாட்டுக்காரர்களுடன் ஓடிக் கொண்டிருக்கிறான். இன்னும் சிறிது நேரத்தில் அவர்கள் இந்த ஸ்டேடியத்துள் நுழைவார்கள்.

தொண்ணூற்றி ஐந்து நிமிடங்களுக்கு முன்னால் ஒலிம்பிக் மாரத்தான் ஓட்டப் பந்தயம் ஆரம்பித்தபோது சுந்தரையும் சேர்த்து 81 பேர் கிளம்பினார்கள். ஒரு பிரபலமில்லாத அரசியல் கட்சியின் ஊர்வலம் போல் அவர்கள் புறப்பட்டார்கள். ஆனால் இப்போது முடியப் போகும் நேரத்தில் வெற்றியின் விளிம்பில் இருப்பவர்கள் பத்து பேர் தான்.

இதோ அந்த ஓட்ட வீரர்கள் ஒலிம்பிக் ஸ்டேடியத்திற்குள் நுழைந்து விட்டார்கள். அவர்கள் ஓட வேண்டிய 42195 மீட்டரில் இன்னும் 800 மீட்டரே உள்ளது. 356 என்ற எண் அணிந்த சுந்தர் மூன்றாம் இடத்தில் ஓடிக் கொண்டிருக்கிறான்.

அவன் முன்னால் இரண்டு பேர் இருக்கிறார்கள். ஓடவேண்டியது இன்னும் 600 மீட்டர். சுந்தர் இன்னும் மூன்றாம் இடம் தான். இன்னும் 430 மீட்டர்.

சுந்தர் இப்போது ஏஹில் என்ற கிழக்கு ஜெர்மனிக்காரனை முந்த முயற்சி செய்கிறான். அவர்களின் இத்தனை வருட உழைப்பையும் வெளிக்கொண்டு மூவரும் ஓடுகின்றனர்.

380 மீட்டர். சுந்தர் அந்த ஜெர்மனிக்காரனைத் தாண்டியே விட்டான்.

"விடுவேனா பார்!" என்று ஜெர்மனிக்காரன் துரத்த இன்னும் 300 மீட்டர்.

இரண்டாம் இடத்தில் உள்ள சுந்தருக்கும் முன்னால் உள்ள எப்-பாஸ்டர் என்ற அமெரிக்கனுக்கும் இடையே உள்ள தூரம் 1 மீட்டர்.

இன்னும் 270 மீட்டர்.

அவர்களின் இடைவெளி அரை மீட்டராகக் குறைய இன்னும் 200 மீட்டர்.

அவர்கள் இடைவெளி இல்லாமல் சம நிலையில் உள்ளனர்.

இந்தியனா? அமெரிக்கனா? என்ற நிலை.

100 மீட்டர்.

50 மீட்டர்.

அவர்கள் இருவரும் காதலர்கள் போல் ஒரே சீராக ஓடிக் கொண்டிருக்கின்றனர்.

45, 40 என்று குறைந்து, இன்னும் பதின் மூன்று மீட்டர் இருக்க, சுந்தர் தன் உச்ச வேகத்திற்கு இன்னும் இன்னும் சக்தி கொடுத்து அமெரிக்கனை முந்தி மிக வேகமாக ஓடி, இதோ அந்த வெற்றி.

ஆம், அந்த இந்தியன் வென்று விட்டான். அவனால் தன் வேகத்தைக் குறைக்க முடியாமல் இன்னும் 25 மீட்டர் ஓடித்தான் கீழே விழுந்தான்.

தோற்ற அமெரிக்கன் கைதூக்கிக் கை கொடுத்தான்.

இரண்டு மணி நேரம், 6 நிமிடம், 18 நொடி என்ற புதிய சரித்திரத்தை, சாதனையை அவன் படைத்து விட்டான்.

அவனை வெற்றி மேடையில் நடுவில் நிறுத்தி, இந்திய தேசிய கீதம் முழங்க, ஒரு வெண்ணுடை அணிந்த பெண், அழகான வட்ட தட்டில் பட்டில் வைத்துத் தங்கப் பதக்கம் கொண்டு வர, ஸ்பானிய தேசத்து ரிடையரான ஒலிம்பிக் வீரர் அதை அணிவித்தார்.

பல பேர் கைகொடுத்தார்கள். சில பேர் கையெழுத்துக் கேட்டார்கள். பலர் இந்தியா எங்கிருக்கிறது என்று படத்தில் தேடினார்கள். பலர் க்ளிக், க்ளிக், க்ளிக் என்று அவனைப் படம் எடுத்துத் தள்ளினார்கள்.

அவனைச் சுற்றி எத்தனை பேர்? எத்தனை பத்திரிகையாளர்கள்? எத்தனை கேள்விகள்? எத்தனை புகைப்படங்கள்?

நேற்று வரை, ஏன், இரண்டு மணி நேரம் முன்பு வரை கூட அவன் சாதாரணமானவன்.



இனிமேல் அவன்தான் அவர்களுக்கு "நாயகன்."

கண்கள் கலங்க அவர்களிடம் தப்பித்துத் தன்னுடைய அறைக்குப் போக முயற்சி செய்து ஒரு வழியாக வெளிவந்தான்.

அவன் வேகமாக வரும்பொழுது கேமரா மாலை அணிந்த ஒரு பெண், "மிஸ்டர் சுந்தர் நீங்கள் பாரத் சமாசாருக்காக ஒரு பிரத்தியேகப் பேட்டி தர முடியுமா?" என்றாள். ஆங்கிலத்தில் "முடியாது" எனச் சொல்ல நினைத்து, "மிஸ், நான் இப்பொழுது பேட்டி கொடுக்கும் மனநிலையில் இல்லை. முடிந்தால் மாலை 5 மணிக்கு மாண்டுஜியில் உள்ள ஒலிம்பிக் கிராம அறைக்கு வாருங்கள். அறை எண் 871 மூன்றாவது பிளாக்," என்று கூறிச் சென்று விட்டான்.

**பெ**ல்லை அழுத்தினாள்...

திறந்த சுந்தர் சுத்தமான ஆடையணிந்து அழகாய் இருந்தான்.

"வெல்கம். சொன்ன நேரத்திற்கு வந்து விட்டீர்களே! உட்காருங்கள்" என்றான், அங்கிருந்த சோபாவைக் காட்டி.

"தேங்க்ஸ்" என்றாள். அவளுக்கு 26 வயது இருக்கலாம். "உங்கள் பெயர் என்ன சொன்னீர்கள்? காப்பி சாப்பிடுகிறீர்களா?"

"பேர் மீரா நாராயணன். பாரத் சமாசாரின் ஸ்போர்ட்ஸ் ரிப்போர்ட்டர். காப்பி பிறகு சாப்பிடுகிறேன், பேட்டியை ஆரம்பிப்போமா?"

"லவ்லி நேம், சரி, பேட்டியை ஆரம்பிப்போம்."

'டிரப்.' டேப் சுழல ஆரம்பித்தது.

"உங்கள் வெற்றிக்குக் காரணமென்ன?"

"என் உழைப்புதான்..."

"உழைப்பு மட்டும் இருக்க முடியாது, உதவியவர்களும் இருப்பார்களே?"

"அப்படிப் பார்த்தால் நான் நன்றி சொல்ல வேண்டியது இந்திய அரசாங்கத்துக்குத்தான்!"

"அவர்கள் என்ன உதவி செய்தார்கள்?"

"ஒரு உதவியும் செய்யவில்லை, அதனால்தான்."

"வாட்?"

"ஒரு உதவியும் செய்யவில்லை. அதனால் தான் ஜெயித்தேன்."

"பின் எதற்கு நன்றி கூறினீர்கள்?"

"எனக்கு எந்த மந்திரியும், மாமனாரோ நண்பரோ கிடையாது. எனக்கு ஒரு பஞ்சாயத்துத் தலைவரைக் கூடத் தெரியாது... என் உறவினர் யாரும் ஐ.ஏ.எஸ். அதிகாரி இல்லை.

"இருந்தும் ஏதோ ஒரு விதத்தில் என் திறமை மீது நம்பிக்கை வைத்து என்னை அனுப்பினார்களே அதற்குத்தான். அந்த நம்



"வாங்க! வாங்க!"



"ஒரு சின்ன கப் காப்பி...?"

பிக்கை வீண் போகவில்லை.

" — இங்கு பாருங்கள், பிரசிடென்ட், பிரைம் மினிஸ்டர், சீப் மினிஸ்டர் என்று பலரும் அனுப்பிய கேபிள்கள்."

"உங்களுக்கு கோச் யார்?"

"அவர் பெயர் டி. வி. நடராஜன். இப்பொழுது சென்னையில் இருக்கிறார்."

"உங்களுக்கு மாரத்தான் போட்டியில் பங்கு பெற ஆர்வம் எப்படி ஏற்பட்டது?"

"எனக்குப் பிறந்தது முதலே இதில்தான் ஆர்வம் என்று பொய் சொல்ல விரும்பவில்லை. நான்கு வருடங்களாகத்தான் ஆர்வம் ஏற்பட்டது. பென் ஜான்சனால் பரபரப்பாக்கப்பட்ட சியோல் ஒலிம்பிக்கின் போது நான் சாதாரண பார்வையாளனாகத்தான் இருந்தேன்."

"பின் எப்படி இந்த மகத்தான மாறுதல்?"

"சொல்கிறேன்... டாக்டர் மூர்த்தியைப் போல் பெரிய ஸர்ஜனாக வரவேண்டும் என்று நினைத்தேன். பதினேழாவது வயது வரை அந்த ஆசை இருந்தது. இப்பொழுது கூட நீங்கள் கும்பகோணம் டவுன் ஹைஸ்கூலில் போய்க் கேட்டுப் பாருங்கள். நான் படித்தஏழுவருடங்களும்நான்தான்கிளாசில் ஃபர்ஸ்ட். பிளேகிரவுண்ட் எந்தத் திசை என்று கூடத் தெரியாமல் படிப்பு, படிப்பு, படிப்புதான்...!"

"பின் ஏன் டாக்டராக முடியவில்லை?"

"அதுதான் என் விதி! ஹையர் செகண்டரியில் கூட 91% நான் பெற்றேன். என் கூடப் படித்த என் உயிர் நண்பன் செந்தில் நாதன் பெற்றது 85% தான். அவன் கூட ஏழு வருடம் படித்திருந்தாலும் அவன் என்ன ஜாதி என்று எனக்குத் தெரியாது. அவனுக்கு மெடிக்கல் காலேஜில் சீட் கிடைத்த பிறகு தான் அவன் பிற்பட்ட ஜாதியைச் சேர்ந்தவன் என்று தெரிந்தது. எனக்கு அங்கு சீட் கிடைக்கவில்லை. அவன் ஜாதியில்

## ஷாலினி தங்கை ஷர்மிலி

நிமிஷத்துக்கு ஒரு டிரஸ் மாற்றிக் கொள்ளும் ஷர்மிலி, ஷாலினியின் தங்கை. வயது இரண்டு. எஸ். ஏ. சந்திரசேகர் படம் மூலமாய் சினிமாப் பிரவேசம் ஆகிவிட்டது!

— மௌஷ்மி.



"என்னை மாதிரியேவா...? அப்படின்னா நல்லாத்தான் இருந்திருக்கும்!"



"எப்படி இருந்துச்க, டேஸ்ட்?"

ஏதோ ஓர் உட்பிரிவைக் காட்டி மெடிக்கல் காலேஜில் சேர்ந்து விட்டான். எனக்குக் கிடைக்காததற்குக் காரணம் என் திறமையின்மை அல்ல! பணமின்மையும் ஜாதியும் தான்.''

''பின் எப்படி விளையாட்டுக்குப் புகுந்தீர்கள்?''

''அந்தத் தோல்விக்குப் பிறகு எனக்கு ஒரு தாழ்வு மனப்பான்மை வந்துவிட்டது. நாம் என்ன படித்தாலும், என்ன முயன்றாலும், நம்மை விடத் திறமை குறைவானவர்கள் ஜாதியைக் காட்டி முன்னேறுகிறார்களே என்று. அதே மாதிரி நான் பி. எஸ்ஸி. படித்தவுடன் பேங்க் இண்டர்வியூ ரயில்வே இண்டர்வியூ என்று எங்கு போனாலும், இதே ஜாதியினால்தான் எனக்கு வேலை தரப்படவில்லை. எந்தக் குற்றமும் செய்யாததற்கு இப்படியொரு தண்டனை! பணியின்மையால் நாங்கள் பொருளாதாரத்தில் தாழ்ந்து தான் இருந்தோம். நான் இந்த மாதிரி மனம் தளர்ந்து இருந்த போதுதான் சியோல் ஒலிம்பிக்கை டீ. வி. யில் பார்க்கச் சந்தர்ப்பம் கிடைத்தது.''

''டீ. வி. யில் ஒலிம்பிக்கைப் பார்த்ததினால் இந்த மாற்றமா?''

''ஆமாம்'' என்று சிரித்தான். ''அதில் போன முறை நீச்சல் போட்டியில் மாமிர் பியாரண்டி -என்ற அமெரிக்கன் வெற்றி பெறுவான் என்று நினைக்கையில் திடீரென்று சூரினாம் என்ற சிறு நாட்டைச் சேர்ந்த நெஸ்டி என்பவன் ஜெயித்தான். அவன் வெற்றி பெற்ற பிறகுதான் அந்த நாடு கூடப் பிரபலமாயிற்று தெரியுமா?

''அவன் 'எங்கள் நாடு முன்னேறாத நாடு' என்று எந்தச் சலுகையும் கேட்கவில்லை. விளையாட்டுப் போட்டிகளில் தான் யாரும் யாரையும் கெஞ்சுவது கிடையாது.

''நான் எத்தியோப்பியாக்காரன். என் நாடு பசி பஞ்சத்தால் வாடும் நாடு அதனால் நான் 100 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் 60 மீட்டர் ஓடுகிறேன் பரிசு கொடுத்து விடுங்கள் என்றோ அல்லது நீச்சல் போட்டியில் எல்லோரும் பட்டர் ஃப்ளை ஸ்டைலில் நீந்தும் போது நான் ஃப்ரீஸ்டைல் செய்கிறேன் என்றோ கெஞ்சுவது கிடையாது.

''துப்பாக்கி சுடும் போட்டியில் நேற்று வென்றானே ஒரு ஐஸ்லாந்துக்காரன், அவனுக்கு வலது கால் கிடையாது, தெரியுமா? இருந்தும் அவனுக்கும் கால் உள்ளவனுக்கும் ஒரே விதிமுறைதான்.

''திறமை, 100 சதவிகிதம் திறமைக்கு மட்டுமே இங்கு மதிப்புக் கொடுக்கிறார்கள். அதனால்தான் இதில் ஈடுபட்டேன். வெற்றி பெற்றேன்.''

''நீங்கள் மாரத்தானைத் தேர்ந்தெடுத்ததற்கு என்ன காரணம்?''

''மாரத்தானுக்குத்தான உடல் வலிமையைவிட மனவலிமை அதிகமாக வேண்டும். 42 கிலோ மீட்டரை முடிக்கும் மனஉறுதி வேண்டும். இதைத் தவிர, வெல்லும் இச்சை வேண்டும். எனக்கு வெல்லும் இச்சை அதிகமாக இருந்தது. மனமும், உடலும் ஒருங்கிணைந்துச் செயல்பட்டால்தான் வெல்ல முடியும். வாழ்வில் பெற்ற மற்ற தோல்விகளுக்கும் மனவேதனைகளுக்கும் ஒரே வடிகால் பயிற்சிதான். போன தேசிய விளையாட்டில் கூட நான் தோற்றேன். இந்த முறை இதில் வென்றேன். காரணம்என் இச்சையும் அந்தத்தோல்வியில் துவளாத மனமும்தான்.''

''நீங்கள் சொன்ன அனைத்தையும் வெளியிடலாமா?''

''இது என்ன, நான் கும்பகோணத்துத் தெருக்களில் நாய் துரத்தப் பயிற்சி செய்ததை எழுதுங்கள், மெரீனா மணலில் கால்கள் புதையப் புதையத் தினமும் 2½ மணி நேரம் ஓடியதை எழுதுங்கள். உங்கள் பத்திரிகைக்குச் சுவாரஸ்யம் வேண்டும். என்றால் என் காதல் தோல்வியைச் சொல்கிறேன், எழுதுங்கள். செந்திலுக்கு மெடிக்கல் காலேஜில் சீட் கிடைத்தபோது மூன்று நாள் ஓர் ஓட்டலில் எடுபிடி வேலை செய்ததை எழுதுங்கள். ஷூ வாங்கக் காசில்லாமல் சோலபட் மாதிரி வெறுங்காலில் ஓடியதை எழுதுங்கள். தற்கொலை செய்து கொள்ள விரும்பிப் பின் தைரியமில்லாமல் திரும்பியதையும் வேணுமானால் எழுதுங்கள்.''

''போதும், நன்றி, இதுவே மூன்று காலம் வரும்''

''நாம் பிரிவதற்கு முன் ஒரு வார்த்தை ..உங்களுக்கு இசையில் ஈடுபாடு உண்டா?'' என்றான் அவன்.

''உண்டு, கர்நாடக சங்கீதத்தில்.''

''நல்லது, எனக்கு 'ஆபா' ரொம்பப் பிடிக்கும். அவர்களின்''தி வின்னர் டேக்ஸ் இட் ஆல் தி லூசர் ஸ்டாண்ட்ஸ் ஸ்மால்''என்ற வரி மிகவும் பிடிக்கும்'' அந்த வரியைப் போல் தான் எங்கும் யாரும் தோற்றவர்களைச் சிந்துவதில்லை. அவன் தோற்றதற்கு எடுத்துக் கொண்ட முயற்சிகள் கஷ்டங்கள் வெளியே தெரிவதில்லை. என்னையே எடுத்துக் கொள்ளுங்கள். நேற்று வரை என்னை யாருக்கும் தெரியாது. இன்று எத்தனை கேள்விகள்! ஒரு ஜப்பான் கம்பெனி, ஒரு மணி நேரம் நிற்காமல் ஓடும் ஒரு மிக்ஸிக்கு விளம்பரம் தர முடியுமா என்கிறது!''


''அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?''

''ஓர் உதவி செய்ய வேண்டும். இந்தப் போட்டியில் நான்காவதாக வந்தானே ஓர் ஈரான்காரன் — அவனையும் பேட்டி கண்டு என் பேட்டியோடு வெளியிடுங்கள். ஏனென்றால் அவன் தோல்விதான் எனக்கு வெற்றியைத் தந்தது. நன்றி!''

அவன் சிரித்து ஆச்சரியத்துடன் பிரிந்தான்.



திருடர்: உங்க படத்திலே வில்லன் யாரு?
டைரக்டர்: கால்ஷீட் கொடுத்துட்டு கரெக்டா வராத ஹீரோதான்!
— ஆம்பூர் பரந்தாமன்.




[redacted]

# உங்கள் பால்காரர் இரவு 10 மணிக்கு பால் கொண்டு தருவாரா?




உங்கள் மகன் இரவு வெகுநேரம் படிக்க விரும்புகிறான். அவனுக்கு காப்பி வேண்டும். பாட்டியோ இரவு சாப்பாட்டுக்குப் பதிலாக பால் வேண்டும் என்கிறார். அந்த நேரத்தில் எங்கு சென்று பால் வாங்குவீர்கள்? அமுல் மில்க் பவுடர் கைவசம் வீட்டில் வைத்திருங்கள். கவலையே இருக்காது. பால் தாமதமாக வராது. தீர்ந்து போகாது. திரிந்தும் போகாது.

அமுல் மில்க் பவுடர் கொண்டு தூய்மையான, ஆடை நிறைந்த பாலை நொடியில் தயாரித்து விடலாம். அப்படியே அருந்தலாம். தேனீர், காப்பி, தயிர், மோர், பாயசம், கஸ்டர்ட், கேக், ரஸகுல்லா... எது வேண்டுமோ தயாரிக்கலாம்.




## அமுல் மில்க் பவுடர்

RADEUS/AMP/1-88-TAM

**வீட்டினுள் இயங்கும் ஒரு பால்பண்ணை.**

விற்பனைக்கு விடுப்போர் : குஜராத் கோ. ஆப்பரேடிவ் மில்க் மார்கெடிங் ஃபெடரேஷன் லிட்., ஆனந்த் 388 001

FLOOD



# ஸ்ரீபெட்

## 'COMPANION PREMIUM'

**குளிர்பதனப் பெட்டிக்குள் வைத்துக் கொள்ளக்கூடிய அகலமான ஃப்ரிட்ஜ் பாட்டில்கள்.**

1½ லிட்டர் நீர் கொள்ளக்கூடிய, நேர்த்தியான வடிவம் கொண்ட பாட்டில்கள்.

மிகவும் சாதுர்யமான முறையில் தயாரிக்கப்பட்டிருக்கும் இப்பாட்டில்கள் 165 லிட்டர் குளிர்பதனப் பெட்டிக்குள் 6 பாட்டில்களை பக்கவாட்டில் எளிதாக அடுக்கி வைக்கலாம். 36 தம்ளர் குளிர்நீரை சேமிப்பில் வைக்கலாம்!

பழச்சாறு, 1 கிலோ சமையல் எண்ணெய் ஆகியவற்றையும் பத்திரப்படுத்த இப்புட்டிகள் மிகவும் ஏற்றவை. நிரப்புவதற்கு வசதியாக சற்று அகலமான வாயினைக் கொண்டவை.

ஸ்ரீபெட் பாட்டில்களும், ஜாடிகளும் கண்ணாடிபோல உள்ளேயிருப்பதை பளிச்சென்று காண்பிப்பவை. உடையாதவை. உணவுப் பொருட்களைப் பத்திரப்படுத்து வதற்கு ஏற்ற தகுதியும் தரமும் வாய்ந்தவை. நெடியற்றவை. கனமில்லாதவை. உபயோகிக்க வசதியானவை.

60 டிகிரி செண்டிகிரேட் வரை உஷ்ணத்தைத் தாங்கக் கூடியவை.



பெட் இண்டஸ்ட்ரியல் கன்ஸ்யூமர்
பாக்கேஜ் பிரைவேட் லிமிடெட்,
3வது மாடி, மூகாம்பிகா
காம்ப்ளெக்ஸ்,
4, லேடி தேசிகாச்சாரி சாலை,
மயிலாப்பூர், சென்னை - 600 004.
போன்: 73768/74960/73038.

ADWAVE PET 3821 TAM A




## அத்தியாயம் 27

## "நில் இங்கே!"

பாதாளச் சிறையைப் பற்றிக் கூறியதும் சின்னப் பழுவேட்டரையருக்குப் பழைய நினைவுகள் வந்தன. சம்பிரதாய மரியாதைப் பேச்சை மறந்து விட்டுக் கூறினார்:— "ஆமாம்; நீ ஒரு தடவை பாதாளச் சிறைக்குப் போயிருக்கிறாய். இளையபிராட்டியுடன் சென்றாய். உளவு அறிய வந்து தப்பி ஓடி விட்ட ஒற்றன் ஒருவனைப் பற்றித் தகவல் தெரிந்து கொள்ளப் போனீர்கள், இல்லையா?"

"இல்லை, ஐயா! தாங்கள் சொல்வது சரியல்ல. நாங்கள் அன்று பாதாளச் சிறைக்குப் போனது ஒற்றனைப் பற்றி அறிந்து கொள்வதற்காக அல்ல. பட்டத்து இளவரசர் ஆதித்த கரிகாலர் ஓலையுடன் அனுப்பியிருந்த தூதரைப் பற்றித் தெரிந்து கொள்ளப் போனோம்."

"அப்படி நீங்கள் எண்ணிக் கொண்டு போனீர்கள். அவன் ஒற்றனா, தூதனா என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்? நீ ஏதும் அறியாத சிறு பெண். உன்னோடு அதைப் பற்றி விவாதித்துப் பயனில்லை. நீங்கள் போனதுதான் போனீர்களே! அவனைப் பற்றி ஏதாவது தெரிந்து கொண்டீர்களா?"

"இல்லை. நாங்கள் எவனைப் பார்க்கப் போனோமோ, அவன் உங்களுக்குக் கூடத் தெரியாமல் விடுதலையாகிப் போய் விட்டான். பழுவூர் இளையராணி நந்தினி தேவியின் கட்டளை எங்களை முந்திக் கொண்டு விட்டது. பாவம்! நீங்கள்தான் என்ன செய்வீர்கள்?"

சின்னப் பழுவேட்டரையர் உதடுகளைக் கடித்துக் கொண்டார். தமது எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல் தம் தமையனார் இளையராணிக்கு அதிக இடம் கொடுத்து வந்தது இத்தகைய இளம் பெண்களுக்குக் கூட அல்லவா ஏச்சாகப் போய் விட்டது? இவ்விதம் தமது உள்ளத்தில் தோன்றிய அவமான உணர்ச்சியை வெளியில் காட்டிக் கொள்ளாமல், "உங்கள் பங்குக்கு நீங்களும் ஓர் அரைப் பைத்தியக்காரனை விடுதலை செய்தீர்கள்!" என்றார்.

"ஐயா! அரைப் பைத்தியம் என்று புஷ்ப சேவை செய்து வரும் சேந்தன் அமுதனைத் தானே சொல்கிறீர்கள்? அவரை அன்று விடுதலை செய்ததினால் இந்தச் சோழ நாடு எவ்வளவு பெரிய நன்மை அடைந்தது என்பதை அறிந்தால் ஆச்சரியப்பட்டுப் போவீர்கள்!"

"பெண்ணே! எனக்கு ஆச்சரியம் இனி ஒன்றிலுமே ஏற்படப் போவதில்லை. இந்தச்

அமரர் **கல்கி**

சோழ ராஜ்யம் யார் யாருக்கெல்லாம் நன்றிக்கடன் பட்டிருக்கிறது என்பதை நினைத்து ஆச்சரியப்பட்டுப் பட்டு எனக்கு அலுத்துப் போய் விட்டது. நீ கூட இப்போது ஏதோ ஒரு முக்கியமான நன்மையைச் சோழ நாட்டுக்குச் செய்வதற்காகத் தான் வந்திருக்கிறாய் அல்லவா?''

''ஆம், ஐயா! முக்கியமான காரியம் இல்லாவிட்டால் தங்கள் தமையனார் அனுப்பியிருப்பாரா? அதிலும் ஒன்றும் அறியாத அபலைப் பெண்ணாகிய என்னை அனுப்பியிருப்பாரா?''

''என் தமையனாருக்குப் புத்திசாலித்தனம் அதிகரித்துக் கொண்டுதான் வருகிறது. உன்னை அனுப்பியதிலிருந்தே அது தெரிகிறது. நீ கொண்டு வந்த செய்தியைச் சீக்கிரம் சொல்லி விடு!''

''பாண்டிய நாட்டுச் சதிகாரர்களைப் பற்றி அலட்சியமாயிருந்தது தவறு என்று தங்களிடம் கூறும்படி சொன்னார். வீரபாண்டியனுடைய ஆபத்துதவிகள் சிலர் உண்மையாகவே பயங்கரச் சதி செய்து வருகிறார்கள்; சோழ குலத்தைப் பழி வாங்க இன்று கெடு வைத்திருக்கிறார்கள்; சக்கரவர்த்தியைப் பத்திரமாய்ப் பாதுகாக்க வேண்டும் என்று எச்சரிக்கும்படி கூறினார்...''

இதைக் கேட்ட காலாந்தக கண்டர் நகைத்தார். ''இந்தப் பிரமாதமான செய்தியைத் தானா சொல்லி அனுப்பினார்? ஒருவேளை உன் பெரிய தகப்பனார் படை எடுத்து வரப் போவதைப் பற்றித்தான் தகவல் தெரிந்து சொல்லி அனுப்பினாரோ என்று பார்த்தேன். அவர் வெளியிலிருந்து கொடும்பாளூர் சைன்யத்தைப் பார்த்துக் கொண்டால், நான் கோட்டைக்குள்ளே சக்கரவர்த்திக்கு ஏதும் நேராமல் பார்த்துக் கொள்கிறேன். அதைப் பற்றி அவரும், நீயும், இளையபிராட்டியும் கூடக் கவலைப் பட வேண்டியதில்லை!'' என்றார்.

''ஐயா! தாங்கள் இப்படி அலட்சியமாகக் கருதுவீர்கள் என்று தெரிந்து மேலும் ஒரு விஷயம் சொல்லி அனுப்பியிருக்கிறார். பழுவூர் இளையராணியின் அரண்மனைக்கு அடிக்கடி யாரோ மந்திரவாதி ஒருவன் வந்து போனது பற்றித் தாங்கள் எச்சரிக்கை செய்தீர்களாம். அதற்கு அவர் செவி கொடாமல், தங்களைக் கோபித்துக் கொண்டாராம். 'தம்பி! பெருங்குற்றம் செய்து விட்டேன். அந்த மந்திரவாதி ரவிதாஸன் என்பவன்தான் பாண்டியச் சதிகாரன். வீரபாண்டியனுடைய ஆபத்துதவிகளின் தலைவன். சோழ குலத்தை வேரோடு கருவறுக்கக் கங்கணம் கட்டிக் கொண்டிருப்பவன். அவனுடைய ஆள் ஒருவன் இன்றைக்குச் சக்கரவர்த்தியின் மீது பழிவாங்க முயலுவான். அலட்சியம் வேண்டாம். சர்வ ஜாக்கிரதையுடனிருக்கவும்' — இதுவே பெரிய பழுவேட்டரையர் தங்களுக்கு அனுப்பிய செய்தி! என் கடமையை நான் செய்து விட்டேன்....''

காலாந்தக கண்டர் சிறிது திகைத்துத் தான் போய் விட்டார். இம்மாதிரி செய்தியைப் பெரியவரைத் தவிர வேறு யாரும் அனுப்பியிருக்க முடியாது.

''பெண்ணே! இது உண்மையானால் அவர் ஏன் இங்கு உடனே வரவில்லை? உன்னை எதற்காக அனுப்பினார்?....''

''என்னை அவர் அனுப்பவில்லை. அவர் இளையபிராட்டியிடம் கூறினார். இளையபிராட்டி என்னை அனுப்பி வைத்தார். ஆதித்த கரிகாலருக்கும் இன்றைக்கே ஆபத்து வர இருக்கிறது. ஆகையால் அவரைக் காப்பாற்ற அவர் திரும்பிப் போயிருக்கிறார்.''

''எங்கேயிருந்து? அவர் உங்களை எங்கே பார்த்தார்?''

''குடந்தையில் ஜோதிடர் வீட்டில் பார்த்தார். இன்னும் தங்களுக்குச் சந்தேகம் தெளியவில்லையானால் இதையும் கேளுங்கள். தங்கள் அண்ணன் படகில் கொள்ளிடத்தைத் தாண்டி வந்த போது புயல் அடித்துப் படகு கவிழ்ந்து விட்டது. தப்பிப் பிழைத்துக் கரையேறிப் பள்ளிப்படையில் படுத்திருந்த போது சதிகாரர்கள் பேசியதைக் கேட்டுத் தெரிந்து கொண்டார். ஐயா! இன்னமும் இங்கேயே நின்று பேசிக் கொண்டிருக்க வேண்டுமா? அல்லது அரண்மனைக்குப் போகலாமா?''

''பெண்ணே! நீ சொன்னதெல்லாம் உண்மையாகவே இருக்கட்டும். எப்பேர்ப்பட்ட சதிகாரனாயிருந்தாலும் கோட்டைக் காவலைக் கடந்து வர முடியாது. நீ பெண்ணாயிருப்பதினால்தான் உள்ளே வர விட்டேன்...''

''வெளியேயிருந்து வர வேண்டும் என்பது என்ன? சதிகாரர்கள் கோட்டைக்குள்ளேயே இருந்து விட்டால்...''

''ஒருநாளும் முடியாத காரியம்...''

''சரி; அது தங்கள் பொறுப்பு. என் கடமையை....''

''நிறைவேற்றி விட்டாய். இனி நீ திரும்பிப் போகலாம்.''

''இல்லை, ஐயா! என் கடமையில் ஒரு பாதியைத்தான் நிறைவேற்றியிருக்கிறேன். சக்கரவர்த்தியைப் பார்த்து இளையபிராட்டியின் செய்தியைச் சொல்லி விட்டால்

முழுதும் நிறைவேறியதாகும்....''

''அந்தச் செய்தியையும் என்னிடமே சொல்லி விடலாம்.''

''முடியாத காரியம். சக்கரவர்த்தியிடம் நேரில் தெரிவிக்கும்படி இளையபிராட்டியின் ஆக்ஞை. இதோ இளையபிராட்டியின் முத்திரை மோதிரம்!....''

''ஆ! முத்திரை மோதிரம் யார் யாரிடமோ வந்து விடுகிறது. இளையபிராட்டி தான் கொடுத்தாள் என்பது என்ன நிச்சயம்? உன் பெரிய தந்தை இந்தக் கோட்டையை முற்றுகைவிட்டிருக்கிறார். உன்னை எப்படி நம்புவது?...''

''ஓர் அபலைப் பெண்ணால் என்ன அபாயம் நேர்ந்து விடும் என்று பயப்படுகிறீர்கள்?''

''பெண்ணே! பழுவூர் வம்சத்தினர் பயம் என்பது இன்னதென்று அறிய மாட்டார்கள்.....''

''அப்படியானால் என்னை அரண்மனை வரையில் போக விடுங்கள். தாங்களும் கூட வாருங்கள்....''

''இன்றைக்கெல்லாம் சக்கரவர்த்தியின் மனக் கலக்கம் மிகவும் அதிகமாயிருக்கிறது....''

''அந்தக் கலக்கத்தைத் தீர்ப்பதற்குரிய செய்தியுடன் நான் வந்திருக்கிறேன், ஐயா! விஷயம் இன்னதென்று அறிந்தால் என்னைத் தடுத்துத் தாமதப்படுத்தியதற்காகத் தாங்களே பச்சாத்தாபப்படுவீர்கள்...''


சின்னப் பழுவேட்டரையர் சிறிது வியப்புக் குறி காட்டி, ''பெண்ணே! ஒருவேளை சின்ன இளவரசர் — பொன்னியின் செல்வரைப் பற்றிச் செய்தி கொண்டு வந்திருக்கிறாயா?'' என்றார்.

''ஆம், தளபதி!''

''ஆகா! சின்ன இளவரசர் சுகமாயிருக்கிறாரா? இப்போது எங்கே வந்து கொண்டிருக்கிறார்? அவருக்கு..... சதிகாரர்களால் அவருக்கும்....''

''ஆம்; பாண்டிய நாட்டுச் சதிகாரர்களால் அவருடைய உயிருக்கும் அபாயம் நேர இருந்தது. ஆனால் கடவுள் அருளால் விபத்து ஒன்றும் ஏற்படவில்லை. சௌக்கியமாயிருக்கிறார். இது தங்களுக்குச் சந்தோஷமளிக்கும் அல்லவா?''

''நல்ல கேள்வி! சின்ன இளவரசர் சௌக்கியமாயிருப்பது பற்றிச் சந்தோஷப்படாமல் துக்கப்படுவார்களா? வா! வா!



உன்னோடு வீண் பொழுது போக்க விரும்பவில்லை. அரண்மனைக்கு வந்து சக்கரவர்த்தியிடம் நேரில் சொல்ல வேண்டியதைச் சொல்லி விடு!''

இவ்விதம் கூறிச் சின்னப் பழுவேட்டரையர் தம் யானையை மேலே செலுத்தினார். இளவரசரைப் பற்றி அறிந்து கொள்ள அவருக்குப் பெரும் ஆவல் உண்டாயிற்று. அவருடைய மாப்பிள்ளை மதுராந்தகன் தஞ்சைச் சிம்மாசனம் ஏறுவதற்கு அருள்மொழிவர்மன் ஒரு போட்டி என்பதாக அவர் என்றும் கருதியதில்லை. சக்கரவர்த்திக்கு அந்த எண்ணமே இல்லை என்பதை அவர் அறிவார். அருள்மொழி தந்தை சொல்லைத் தட்டக் கூடியவனும் இல்லை. குந்தவை தலையிட்டு ஏதேனும் குளறல் செய்யாமலிருக்க வேண்டுமென்பது தான் கவலை. அவள் இப்போது ஏதேனும் சூழ்ச்சி தொடங்கியிருக்கிறாளா, என்ன? அருள்மொழியைத் தன் வசத்தில் வைத்துக் கொண்டு ஏதேனும் தந்தைக்குத் தாறுமாறான செய்தி அனுப்பியிருப்பாளா? இளவரசனைப் பற்றி இந்தக் கொடும்பாளூர்ப் பெண் உண்மையாகவே செய்தி கொண்டு வந்திருந்து சக்கரவர்த்தியிடம் கூறினால், அதை அவர் தம்மிடம் சொல்லாமல் இருக்க மாட்டார். அருள்மொழிவர்மரின் உத்தேசம் இன்னதுதான் என்று தெரிந்து கொண்டால், அதற்கேற்பத் தாம் செய்ய வேண்டியது பற்றித் தீர்மானித்துக் கொள்ளலாம் அல்லவா? அச் சமயத்தில் பூதி விக்கிரமகேசரி தஞ்சைக் கோட்டை மீது படை எடுத்து வந்திருக்கும் சதிகாரச் செயலைப் பற்றியும் சக்கரவர்த்தியிடம் தெரிவித்து விடலாம் அல்லவா?.....

இரண்டு யானைகளும் அரண்மனை வாசலில் வந்து நின்றன.

சின்னப் பழுவேட்டரையர் இலகுவாக யானை மீதிருந்து கீழே குதித்தார்.

இன்னொரு யானை மலை அசைவது போல் அசைந்து மண்டியிட்டுப் படுத்தது. இரண்டு பெண்களும் யானைப்பாகனும் கீழே இறங்கினார்கள்.

வாசற் காவலனை அழைத்துச் சின்னப் பழுவேட்டரையர் ஏதோ கூறினார். அவன் அரண்மனையின் முன் வாசலைத் திறந்து விட்டான்.

காலாந்தக கண்டருடைய மனத்தில் அவருடைய தமையனார் சொல்லி அனுப்பியதாக வானதி கூறிய செய்தி உறுத்திக் கொண்டிருந்தது. அதை அவர் அலட்சியம் செய்யப் பார்த்தும் முடியவில்லை. முக்கியமாக, மந்திரவாதி ரவிதாஸனைப் பற்றி

அறிந்தது அவருடைய மன அமைதியை மிகக் குலைத்தது. வீர பாண்டியரின் ஆபத்துதவிகளைப் பற்றி அவர் முன்னமே அறிந்திருந்தார். ஆனால் அவர்களுக்குத் தஞ்சாவூர்க் கோட்டைக்குள்ளேயே இடம் கிடைத்திருந்தது என்று அறியவில்லை. பழுவூர் இளையராணி மந்திரவாதியை அழைத்துப் பேசுவதெல்லாம் பெரிய பழுவேட்டரையரை மேலும் மேலும் தன் வசப்படுத்துவதற்காகவே என்று அவர் நம்பிக் கொண்டிருந்தார். அண்ணன் தம்பிகளுக்குள்ளே விரோதத்தை வளர்ப்பதும் அவளுடைய நோக்கமாயிருக்கலாம் என்று நினைத்தார். இப்போது இந்தப் பெண் சொல்வது சிறிது பீதிகரமான செய்தியாகத்தான் இருக்கிறது. ஆயினும், எந்த மந்திரவாதி அல்லது சதிகாரன் என்ன செய்து விட முடியும்? தம்முடைய அனுமதியின்றிச் சக்கரவர்த்தியின் அரண்மனைக்குள் ஓர் ஈயும் நுழைய முடியாது. சக்கரவர்த்தி வெளியிலே வருவதும் கிடையாது. இருந்தாலும் அரண்மனையைச் சுற்றிலும் இன்னும் கொஞ்சம் பாதுகாப்பைப் பலப்படுத்தி வைப்பது நல்லது. புயல் — வெள்ளம் என்று சொல்லிக் கொண்டும், முதன் மந்திரியைப் பார்ப்பதற்காக என்று சொல்லிக் கொண்டும் அதிகம் பேர் இரண்டு நாளாகக் கோட்டைக்குள் வந்திருந்தார்கள். அவர்கள் எல்லாரும் வெளியில் போய் விட்டார்களா என்று தெரியாது. இன்று பகலில் திடீரென்று கோட்டைக் கதவைச் சாத்தியதும் நல்லதாய்ப் போயிற்று. துர்நோக்கம் கொண்டவர்கள், — சந்தேகாஸ்பதமான மனிதர்கள், — யாராவது இந்தக் கோட்டைக்குள் வந்திருக்கிறார்களா என்று நன்றாகப் பரிசோதனை செய்து பார்த்து விடலாம்...



இவ்விதம், யானை மேல் அரண்மனையை நோக்கி வரும்போதே எண்ணமிட்டுக் கொண்டு வந்தார். அரண்மனை வாசலில் ஒரு பக்கத்தில் எப்போதும் ஆயத்தமாயிருந்த தம் ஆட்களைச் சமிக்ஞையால் அழைத்தார். அவர்களிடம் கோட்டையின் உட் பக்கம் முழுவதும் நன்றாய்த் தேடிச் சந்தேகாஸ்பதமாக யார் தென்பட்டாலும் பிடித்துக் கொண்டு வரும்படி கட்டளையிட்டார்.

பிறகு, வேளைக்காரப் படையாரிடம் அன்றிரவு முழுவதும் தூங்காமலே அரண்மனையையும் சுற்றுப் புறங்களையும் காவல் புரிய வேண்டுமென்று சொல்ல எண்ணி, அவர்களுடைய தலைவனை அனுப்பும்படி ஆக்ஞாபித்தார்.

இந்த நிலையில், யானையின் மேல் வந்த பெண்கள் என்ன ஆனார்கள் என்று திரும்பிப் பார்த்தார். அவர்கள் அப்போது அரண்மனை முன்புறத்து நிலா முற்றத்தைத் தாண்டி முதல் வாசற்படிக்கு அருகிலே போய்க் கொண்டிருந்தார்கள். ஆனால்,..... ஆனால்.... இவன் யார்? அவுர்களைத் தொடர்ந்து போகும் அந்த மூன்றாவது உருவம்? தலைப்பாகையைப் பார்த்தால், யானைப்பாகன் மாதிரி தோன்றியது! ஆகா! யானைப்பாகன் ஏன் தொடர்ந்து போகிறான்? அரண்மனைக்குள் அவனுக்கு என்ன வேலை? சக்கரவர்த்தியிடந்தான் அவனுக்கு என்ன காரியம்?

மிகப் பயங்கரமான ஓர் எண்ணம் அவர் மனத்தில் மின்னலைப் போல் தோன்றிச் சொல்ல முடியாத வேதனையை உண்டாக்கியது. கோபக் கனலை எழுப்பியது. ஒருவேளை இதில் ஏதேனும் சூழ்ச்சி இருக்குமோ? இவன்தான் சதிகாரனோ? இந்தப் பெண்களை ஏமாற்றி விட்டு, யானைப் பாகனைப் போல் வந்திருக்கிறானோ? தாமும் ஏமாந்து விட்டோமோ? தம் கண் முன்னால் சக்கரவர்த்தியைக் கொல்ல வந்த வீர பாண்டியனின் ஆபத்து உதவி அரண்மனைக்குள்ளே போகிறதா? காலாந்தக கண்டனுக்கு அவ்வளவு பெரிய அசட்




டுப் பட்டமா? அல்லது பூதிவிக்கிரமகேசரியின் சூழ்ச்சியில் சேர்ந்ததா?—எதுவாயிருந்தாலும் சரி, இதோ மறு கணத்தில் எல்லாம் தெரிந்து போய் விடுகிறது!

நாலே எட்டில் நிலா முற்றத்தைக் காலாந்தக கண்டர் கடந்து சென்று யானைப்பாகன் சமீபம் அடைந்தார். "அடே! நில் இங்கே!" என்று ஒரு கர்ஜனை செய்தார். "நீ ஏன் உள்ளே போகிறாய்? யானைப்பாகனுக்கு அரண்மனைக்குள் என்ன வேலை?" என்று கூறிக் கொண்டே, அவனுடைய ஒரு கரத்தைத் தமது வஜ்ராயுதம் போன்ற கைமுஷ்டியினால் பிடித்துக் கொண்டார்.

அவருடைய கோப கர்ஜனைக் குரலைக் கேட்டு விட்டு முன்னால் சென்ற இரு பெண்களும் திரும்பிப் பார்த்தார்கள். அவர்களுடைய முகங்கள் சிறிது பயம், வியப்பு, ஆர்வம் முதலிய உணர்ச்சிகளைப் பிரதிபலித்தன; அதே சமயத்தில் புன்னகை மலர்ந்தன. வானதி "ஐயா!... அவர்... அவர்..." என்று ஏதோ சொல்ல ஆரம்பித்துச் சிறிது தயங்கினாள்.

குரோதத்தின் சிகரத்தை அடைந்திருந்த சின்னப் பழுவேட்டரையர் அவளைத் திரும்பிப் பார்க்கவும் இல்லை; அவள் வார்த்தையைப் பொருட்படுத்திக் கேட்கவும் விரும்பவில்லை.

யானைப்பாகனுடைய தடுமாற்றத்திலிருந்து அவருடைய சந்தேகம் மேலும் மேலும் உறுதிப்பட்டது.


முன்னொரு தடவை தம்மை ஏமாற்றிவிட்டுத் தப்பி ஓடிப் போன வாணர் குலத்து வாலிபனோ என்ற விபரீத எண்ணம் அந்தக் கணத்தில் தோன்றியது. மறுபடியும் தம்மை ஏமாற்றி விட்டுப் போகலாம் என்று இவ்வளவு துணிச்சலுடன் வந்திருக்கிறானோ?....

பிடித்த பிடியை இன்னும் சிறிது கெட்டியாக்கிக் கொண்டு சின்னப் பழுவேட்டரையர் "அடா! உண்மையைச் சொல்! நீ யார்? யானைப்பாகன்தானா? அல்லது சதிகாரனா? முன்னொரு தடவை என்னிடமிருந்து தப்பிச் சென்ற ஒற்றனா? இம்முறை தப்ப முடியாது!" என்று சொல்லிக் கொண்டே, பிடித்த பிடியை விடாமல் 'யானைப்பாகன்' முகத்தைத் தம்மை நோக்கித் திருப்பினார்.

அரண்மனையின் முன் மண்டபத்தில் எரிந்த தீபங்களின் வெளிச்சம் இலேசாக அந்த 'யானைப்பாகனின்' கம்பீரமான முகத்தில் விழுந்தது.

"தளபதி! நான் யானைப்பாகன் கூடத்தான். தங்களிடமிருந்து என்றும் தப்பிச் சென்றதில்லை. தங்களிடம் என்னை ஒப்புக் கொடுக்கவே வந்திருக்கிறேன்!" என்றான் யானைப்பாகன்.

காலாந்தக கண்டர் அந்த முகத்தைப் பார்த்தார். அந்தக் குரலைக் கேட்டார். மேல் உலகம் ஏழும் இடிந்து அவர் தலைமேல் ஒருமிக்க விழுந்து விட்டது போலிருந்தது. அவ்விதமாகத் திகைத்துச் சித்திரப் பதுமை போல் நின்று விட்டார். கைப்பிடியை விடுவதற்குக் கூட அவருக்குத் தோன்றவில்லை. கைப்பிடி அதுவாகத் தளர்ந்து இளவரசர் அருள்மொழிவர்மரை விடுதலை செய்தது.



## அத்தியாயம் 28

# கோஷம் எழுந்தது!

இளவரசர் அருள்மொழிவர்மரின் அந்த இளம் பொன் முகத்தில் என்ன மாய மந்திர சக்திதான் இருந்ததோ, தெரியாது. இத்தனைக்கும் இளவரசர் அச்சமயம் முகத்தைச் சுளுக்கிக் கொள்ளவும் இல்லை. கோபத்தின் அறிகுறி சிறிது கூடக் காட்டவில்லை. வெண்ணெய் திருடி அகப்பட்டுக் கொண்ட கண்ணனைப் போல் குற்றத்தை ஒப்புக் கொள்ளும் பாவனை முகத்தில் தோன்றும்படி நின்றார். சின்னப் பழுவேட்டரையரிடம் குற்றம் கண்டுபிடித்துக் கடிந்து கொள்ளும் அறிகுறியோ, அவரை எதிர்த்துப் போராடும் நோக்கமோ அணுவளவும் அவர் முகத்தில் காணப்படவில்லை.

ஆயினும், அஞ்சா நெஞ்சமும் அளவிலா மனோதிடமும் வாய்ந்தவரான காலாந்தக கண்டரின் கை கால்கள் அந்தக் கணத்தில் வெடவெடத்து விட்டன. முகத்தில் வியர்வை அரும்பியது. இன்னது செய்கிறோம் என்று கூட அறியாமல் இரு கைகளையும் கூப்பி வணக்கம் செலுத்திய வாறு, "பொன்னியின் செல்வா! ஈழம் கொண்ட வீரா! சோழ நாட்டின் தவப் புதல்வா! இது என்ன கோலம்? இது என்ன காரியம்? இவ்விதம் தண்டிப்பதற்கு என்ன குற்றம் செய்தேன் நான்?... சற்று முன் நான் செய்த பிழையைப் பொறுத்துக் கருணை புரிய வேண்டும். 'மன்னித்தேன்' என்று அருள்வாக்குத் தர வேண்டும்... கண்ணிருந்தும் பாராத குருடனாகி விட்டேன்...." என்று நாத் தழுதழுக்கக் குரல் நடுங்கக் கூறினார்.

மேலும் இதே முறையில் பேசப் போனவரை இளவரசர் தடுத்து, "தளபதி! இது என்ன? தாங்களாவது, குற்றம் செய்வாவது? ஒன்றும் அறியாத இந்தச் சிறுவன் தங்களை மன்னிப்பதாவது?" என்றார்.

"தங்களைப் பிடித்து நிறுத்திய இந்தக் கையை வெட்டினாலும் போதிய தண்டனை ஆகாது. 'அடா' என்று அழைத்த என் நாவை அறுத்துப் போட்டாலும் போதாது....."

"தங்கள் வார்த்தைகள் என் காதில் நாராசமாக விழுகின்றன. போதும், நிறுத்துங்கள். தங்கள் பொறுப்பை நிறைவேற்றுவதற்காகத் தங்கள் கடமையைச் செய்தீர்கள். அதில் குற்றம் என்ன? தவறு என்னுடையது. நான் இந்த வேடத்தில் — யானைப் பாகனாக வருவேன் என்று...."

"நான் எதிர்பார்க்கவே இல்லைதான். இப்படித் தாங்கள் செய்யலாமா? எதற்காக? சோழ நாட்டின் மகா வீரரை இப்படியா நான் வரவேற்றிருக்க வேண்டும்? ஆசார உபசாரங்களுடன் முன் வாசலில் வந்து காத்திருந்து வெற்றி முரசுகள் எட்டுத் திக்கும் அதிரும்படி முழங்க வரவேற்றிருக்க மாட்டேனா?...."

"தாங்கள் அப்படிச் செய்வீர்கள் என்று அறிந்துதான் நான் இந்த வேஷத்தில் வந்தேன். அதற்கெல்லாம் இது சரியான நேரமல்ல. தங்களுக்குத் தெரியாதா? சதிகாரர்களின் தீய முயற்சிகளைப் பற்றிச் சற்று முன் கொடும்பாளூர் இளவரசி கூறினாள் அல்லவா? அது உண்மையாக இருக்கலாமென்றே எனக்கும் தோன்றுகிறது..."

"இளவரசே! என்னையும் அந்தப் பாண்டியச் சதிகாரர்களுடன் சேர்த்து விட்டீர்களா?....."

"கடவுளே! என் தந்தை சக்கரவர்த்தியைப் பாதுகாப்பதற்குத் தாங்கள் செய்திருக்கும் ஏற்பாடுகளைப் பார்த்து மனத்திற்குள் மகிழ்ச்சியடைந்து கொண்டிருக்கிறேன். முதலில் என் தந்தையைப் பார்த்து விட்டு, பிறகு...."

"ஐயா! சக்கரவர்த்தியைத் தாங்கள் பார்க்கக் கூடாதென்று நான் தடுத்து விடுவேன் என்று நினைத்தீர்களா? அத்தகைய பாவி நான் என்று யாரேனும் தங்களுக்குச் சொல்லியிருந்தால்...."

"ஒருநாளும் நான் நம்பியிருக்க மாட்டேன், தளபதி!"

"பின் ஏன் இந்த வேஷம்?"

"வேறு முறையில் நான் கோட்டைக்குள் வந்திருக்க முடியுமா, யோசியுங்கள்! கோட்டையைச் சுற்றித் தென்திசைச் சேனைகள் வந்து சூழ்ந்திருக்கின்றன. பெரிய வேளாரும் வந்திருக்கிறார். எதற்காக வந்திருக்கிறார் என்று தங்களுக்குத் தெரிந்திருக்கும்..."

"கோட்டைக் கதவுகளை நான் மூடச் செய்தது நியாயமே அல்லவா? அதில் ஏதேனும் குற்றம் உண்டா?"

"ரொம்ப நியாயம். பெரிய வேளாரின் புத்தி கெட்டுப் போயிருக்கிறது. அவரால் நான் கோட்டைக்குள் வருவது தடைப்படும் என்றுதான் இந்த வேடத்தில் வந்தேன். அவர் மகளையும் அழைத்துக் கொண்டு வந்தேன். நல்லவேளையாக அவர் என்னைக்

கவனிக்கவில்லை. தங்களுடைய கூர்மையான கண்கள் கண்டுபிடித்து விட்டன...''

''என் கண்கள் மூடிப் போயிருந்தன. அதனாலேதான் பார்த்தவுடன் தெரிந்து கொள்ளவில்லை. தங்களை யானைப் பாகன் என்று எண்ணிக் கூறிய வார்த்தைகளைத் தாங்கள் கருணை கூர்ந்து மன்னித்து விடுங்கள்....''

''அவ்விதம் சொல்ல வேண்டாம். தாங்கள் வேறு, என் தந்தை வேறு என்றே நான் எண்ணவில்லை. என்னைச் சிறைப்படுத்திக் கையோடு கொண்டு வருவதற்காகத் தாங்கள் ஆட்களை அனுப்பியிருந்தீர்கள்....''

''கடவுளே! இது என்ன வார்த்தை? நானா சிறைப்படுத்த ஆட்களை அனுப்பினேன்? தங்களை உடனே பார்க்க வேண்டும் என்பதற்காகத் தங்கள் தந்தை — சக்கரவர்த்தி — அனுப்பினார்....!''


''அது எனக்குத் தெரியாதா தளபதி! இலங்கையில் நான் இருந்த போது அவர்கள் வந்தார்கள். 'சக்கரவர்த்தியின் கட்டளை அல்ல; பழுவேட்டரையர்களின் கட்டளை' என்று என் அருகில் இருந்தவர்கள் சொன்னார்கள்....''

''எங்கள் விரோதிகள் அப்படிச் சொல்லியிருப்பார்கள்....''

''நான் அவர்களுக்கு 'என் தந்தையின் கட்டளை எப்படியோ, அப்படியே பழுவேட்டரையர்களின் கட்டளையும் என் சிரமேல் கொள்ளத்தக்கது' என்று கூறினேன். கடலையும் புயலையும் மழையையும் வெள்ளத்தையும் தாண்டி வந்தேன். அரண்மனையின் முன் வாசலைத் தாண்டி உள்ளே போனதும் தங்கள் விருப்பத்தைத் தெரிந்து கொள்ளலாம் என்று எண்ணினேன். தங்கள் கட்டளையின்றி என் தந்தையைப் பார்க்கவும் நான் விரும்பவில்லை....''

''இளவரசே! இன்னும் என்னைச் சோதிக்கிறீர்களா? தங்கள் தந்தையைத் தாங்கள் சந்திப்பதற்கு நான் என்ன கட்டளையிடுவது? தங்களுடன் வரச் சொன்னால் வருகிறேன். இங்கேயே நிற்கச் சொன்னால் நின்று விடுகிறேன்! இளவரசரின் விருப்பமே என் சிரசின் மேல் சூடும் கட்டளை!'' என்று பணிவுடன் கூறினார் பழுவேட்டரையர்.

''தளபதி! தாங்கள் இங்கேயே நிற்க வேண்டித்தான் நேரும் போலிருக்கிறது. அதிக நேரம் நாம் இங்கு நின்று பேசிக் கொண்டிருந்து விட்டோம். அதோ பாருங்கள்!'' என்றார் இளவரசர்.



சின்னப் பழுவேட்டரையர் திரும்பிப் பார்த்தார். சற்று முன் தூரத்தில் நின்ற அவருடைய ஆட்கள் எல்லாம் நெருங்கி வந்திருப்பதைக் கண்டார். அவர்கள் மட்டுமல்ல; அரண்மனை வாசற் காவலர்களும் வந்து விட்டார்கள். இன்னும் தூரத்திலே நின்ற வேளைக்காரப் படையினரிலும் சிலர் பிரிந்து வந்து கொண்டிருந்தார்கள்.

அருகில் வந்து விட்டவர்கள் அனைவரும் பொன்னியின் செல்வரைக் கண் கொட்டாத ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். சின்னப் பழுவேட்டரையர் திரும்பிப் பார்த்த நேரத்தில், இளவரசரின் திருமுகத்தில் விளக்கு வெளிச்சம் நன்றாக விழுந்து மிகப் பிரகாசமாகத் தெரிந்தது.

வீரர்களில் ஒருவன் ''வாழ்க இளவரசர்!'' என்றான். ''வாழ்க பொன்னியின் செல்வன்!'' என்றான் இன்னொருவன்.

''மகிந்தனைப் புறங்கண்டு ஈழம் கொண்ட வீராதி வீரன் வாழ்க!'' என்றான் மற்றொருவன்.

இந்தக் குரல்களைக் கேட்டவுடன் வேளைக்காரப் படையினர் அனைவரும் அங்கு விரைந்து வரத் தொடங்கினார்கள்.

பற்பல குரல்களிலிருந்து ''வாழ்க பொன்னியின் செல்வன்!'' என்ற வாழ்த்தொலிகள் எழுந்தன.

அரண்மனை வாசலானபடியாலும், சின்னப் பழுவேட்டரையர் அங்கிருந்தபடியாலும் அந்த ஒலி மிக மெல்லியதாகத்தான் அப்போது எழுந்தது. இளந் தென்றற் காற்று புதிதாகத் தளிர்த்த அரசமரத்தின் மீது அடிக்குங்கால் ஏற்படும் 'சல சலப்பு'ச் சத்தத்தைப் போலத்தான் கேட்டது. நேரமாக ஆக, நாள் ஆக ஆக, அந்த மெல்லிய ஒலி எப்படி வளர்ந்து, வளர்ந்து, பெரிதாகி மகா சமுத்திரத்தின் ஆயிரமாயிரம் அலைகளின் ஆரவாரத்தையும் மிஞ்சிய மாபெரும் கோஷமாயிற்று என்பதைப் பின்வரும் அத்தியாயங்களில் பார்ப்போம்.

''தளபதி! நாம் இங்கே நின்று பேசியது தவறாகப் போயிற்று. அரண்மனைக்குள்ளே பிரவேசிக்கும் வரையில் நான் என்னைத் தெரியப்படுத்திக் கொள்ள விரும்பாததின் காரணம் இப்போது தெரிகிறது அல்லவா?'' என்று இளவரசர் கேட்டார்.

''தெரிகிறது, அரசே! நான் இவர்களுக்குச் சமாதானம் சொல்லி விட்டு வருகிறேன். தாங்கள் தயவு செய்து விரைந்து உள்ளே செல்லுங்கள்!'' என்றார் காலாந்தக கண்டர்.

(தொடரும்)

# சிவப்பு நாடா

ஊரை விட்டு அப்பிராணியாய் ஒதுங்கியிருந்த ரயில்வே கிராஸிங் பக்கத்தில் அநியாயத்துக்குக் கூட்டம். அசாதாரண சூழ்நிலை போலத் தெரிந்தது. ஏதோ அசம்பாவிதம் நடந்திருக்க வேண்டும். சாதாரணமாய் அங்கு ஈ காக்கைகூடத் தட்டுப்படாது.

இறங்கி சைக்கிளை நிறுத்தினான், சந்திரன். மொத்த ஜனமும் எதனையும் சட்டை பண்ணாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. கூட்டத்தை விலக்கி முன்னே சென்றான். பார்வையில் 'அது' பட்டதும் பதற்றத்தில் உடம்பு முழுக்க ஒரு சிலிர்ப்பு.

தண்டவாளத்தை ஒட்டின சரிவில் சல்லிக் கற்களின் பரப்பில் 'அது' ஈ மொய்க்கக் குப்புறக் கவிழ்ந்து கிடந்தது.

மிஞ்சிப் போனால் முப்பது வயது இருக்கும். பழுப்பு நிறத்தில் சட்டை. பச்சை நிறத்தில் கைலி. உரமேறிய உடம்பு. பின் மண்டையில் செமத்தியான அடி. ரத்தம் கசிந்து, தலையை நனைத்து, தரையில் வழிந்து உறைந்திருந்தது. ஆவேசத்தோடு, பற்கள் இறுகியிருக்க, வாய் கோணியிருந்தது. முகத்தில் மூர்க்கம் முழுசாய் இருந்தது.

பரிச்சயமில்லாத முகம். நிச்சயம் அயலூராகத்தான் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் இந்நேரம் வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு அழ ஒரு கூட்டம் தயாராகிவிட்டிருக்கும்.

என்ன நடந்தது? எப்படி நடந்தது? யாருக்கும் தெரியவில்லை. அதற்காக வாய் பொத்திக் கொண்டும் இருக்கவில்லை. சந்தடிச் சாக்கில் கதை பண்ணத் தொடங்கினர். முதலில் போலீஸுக்குச் சொல்லியாக வேண்டும். அதை யாராவது செய்தார்களா?

பக்கத்தில் நின்றவரிடம் கேட்டான். "போலீஸுக்குச் சொல்லியாச்சா?"

"இல்லை!"

"ஏன்?"

"யாரு போய்ச் சொல்றது? சொன்னா சொன்னவங்களை நோண்டிப்புடுவாங்களே?"

"கிராம முன்சீப் எதுக்கு இருக்காரு? அவரு சொல்லலாமில்லே?"

"அவரு ஊர்லே இல்லே. சொந்த ஊருக்குப் போயிருக்காரு."

"பஞ்சாயத்துப் பிரஸிடெண்ட் என்ன ஆனாரு?"

"அவரும் இல்லே. ஏதோ சோலியா மெட்ராசுக்குப் போயிருக்காரு."

அவன் மறுபடி 'அதைப்' பார்த்தான். துல்லியமாகக் கவனிக்கையில் துர்நாற்றம் வருவது தெரிந்தது. எத்தனை நாட்களாக இப்படிக் கிடக்கிறதோ? அவர்கள் வர எத்தனை நாட்களாகுமோ? அதுவரை 'அது' அப்படியே கிடக்க வேண்டியதுதானா?

'சனியன் தொலையட்டும்' என்று நகர முடியவில்லை. தானே கூடப் போலீஸுக்குச் சொல்லலாம். கேஸ் பதிவாகி விட்டால் பெரிய தொல்லை. கண்ட நேரத்துக்கு அழைப்பு வரும். விசாரணை நடக்கும். கேள்வி கேட்டுக் கேள்வி கேட்டு உயிரோடு தோலை உரித்து விடுவார்கள்.

அதிர்ஷ்டவசமாய் சப்–இன்ஸ்பெக்டர் இருந்தார்.



"வணக்கம் ஸார்" என்றான்.

தலையைச் சரித்து ஓரக் கண்ணால் பார்த்தார். அற்ப ஜந்துவைப் பார்க்கிற மாதிரி.

"ம். என்ன வேணும்?"

"வந்து... ரயில்வே கிராஸிங் பக்கத்தில் ஒரு பிணம் கெடக்கு ஸார்..."

"பிணமா?" அதிர்ந்தார். எஸ். ஐ. தடபுடலாய் நிமிர்ந்து நேராய் உட்கார்ந்தார். மிடுக்கோடு கேட்டார். "ஆணா? பெண்ணா?"

"ஆண் ஸார்."

"என்ன வயசு இருக்கும்?"

"முப்பது வயசு இருக்கும்."

"உன் கண்ணால பார்த்தியா?"

"ஆமா ஸார். நேரா அங்கிருந்துதான் வர்றேன்."

"அப்ப ஒரு கம்ப்ளெய்ண்ட் எழுதிக் கொடு."

உள்ளேயிருந்த ரைட்டர் பேப்பர் பேனா எடுத்து வந்தார். எழுதிக் கொடுத்தான்.

**சை**க்கிளில் போய் இறங்கினதும் போலீஸுக்குப் பயந்து கூட்டம் சிதறி ஓடியது.

எஸ். ஐ. 'அதை' நோக்கிக் கம்பீரமாக

# மீனாதாஸ்

நடந்தார். பின்பக்கமாகக் கைகளைக் கட்டிக் கொண்டு சற்றுத் தொலைவில் நின்றபடி உற்றுப் பார்த்தார். சுற்றுப்புறத்தைப் பார்வையால் அளந்தார். பின்பு வேடிக்கை பார்த்த ஜனங்களை வெறித்தார். குனிந்து எதையோ ஆராய்ந்தார். சட்டென அவர் முகத்தில் பிறை மாதிரி பிரகாசம்.

திரும்பிச் சந்திரனைப் பார்த்தார். இவனுக்கு விளங்கவில்லை. அதற்குள் என்ன கண்டுவிட முடியும்? ஒருவேளை இது 'பிரச்னையற்றப் பிரேதமா? அப்படியானால் சரி. காலாகாலத்தில் காரியம் முடியும். வீணான அலைச்சல் இருக்காது.

ஆவலோடு அருகில் சென்றான். "சிரமம் ஒண்ணும் இருக்காதே ஸார்?"

"சிரமமே இல்லை. நா இங்க வந்தது வேஸ்ட்!"

"என்ன ஸார் சொல்றீங்க?"

"இது எங்க ஏரியா கிடையாதுப்பா. தண்டவாளத்துக்குத் தெற்குப் பகுதிதான் எங்க ஏரியா. பாடி, தண்டவாளத்துக்கு வடக்கே இருக்கு. அது நார்த் போலீஸ் ஸ்டேஷனைச் சேர்ந்தது. நீ அங்கேதான் போய் கம்ப்ளெய்ண்ட் கொடுக்கணும். நாங்க ஒண்

**போட்டிக் கதை — 3**



ணும் செய்றதுக்கில்லே.''

எஸ். ஐ. நடந்து கொண்டே சொன்னார். மறு நிமிடம் அவர்கள் அங்கு வந்த சுவடு இல்லை.

இவனுக்குப் பெருத்த ஏமாற்றம். சமாளிக்கத் 'தில்லு' வேண்டும்' என்று மனத்தைத் திடப்படுத்திக் கொண்டான். எஸ். ஐ. சொன்னது சரி. தண்டவாளத்துக்கு வடக்கே தான் 'அது' கிடந்தது.

மனசுக்குள் மறுபடியும் உத்வேகம். சைக்கிளை எடுத்தான் இந்த முறை நார்த் போலீஸ் ஸ்டேஷன்.

ரைட்டர் மட்டும் இருந்தார். விஷயத்தைச் சொன்னதும் "அப்ப, இதுக்கு கம்ப்ளெய்ண்ட் கொடுக்க வந்தியா?" என்றார் பரிதாபமாய்.

''ஆமா ஸார். என்ன விஷயம்?''

''எஸ். ஐ. யும் இல்லே. பி. சி. யும் இல்லே. அடுத்த வாரம் மதுரையிலே பிரைம் மினிஸ்டர் விசிட் இருக்கு. பந்தோபஸ்து சம்பந்தமாப் போயிருக்காங்க.''

''இப்ப என்ன ஸார் செய்யறது?''

''நாளைக்கு ஈவினிங் வா. அநேகமா வந்துருவாங்க.''

''அதுவரைக்கும்?''

''எங்க நாலெட்ஜுக்கு வராத மாதிரி இருந்தால் தேவலை. எஸ். ஐ. இல்லாம நான் ஒண்ணும் பண்ண முடியாது.'' கெஞ்சலாகச் சொன்னார் ரைட்டர். கும்பிடாத குறை. அவரிடம் என்ன சொல்லி என்ன ஆகும்? எரிச்சலோடு திரும்பி விட்டான்.

இப்போதுதான் பொறுப்பு அதிகமாயிற்று. இரவு 'அதைக்' காவல்காக்கவேண்டிய நிர்ப்பந்தம். இவ்வளவு தூரம் மெனக்கெட்டுவிட்டு ராத்திரியோடு ராத்திரி 'அது' காணாமல் போய்விட்டால் கஷ்டம்.

நண்பர்களைத் துணைக்கு அழைத்தான். திட்டிக் கொண்டே சம்மதித்தனர். பக்கத்திலிருந்த பம்ப்செட் கிணற்றிலிருந்து ஒயரை இழுத்து பல்ப் மாட்டி விடிய விடியக் காவல்.

மறுநாள் மத்தியானம். நார்த் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றான். நல்ல வேளை. எஸ். ஐ. வந்துவிட்டிருந்தார். இரண்டு கான்ஸ்டபிள்களை அழைத்துக் கொண்டு தயக்கமில்லாமல் புறப்பட்டு வந்தார்.

இன்றும் கூட்டத்திற்குக் குறைவில்லை. விஷயம் விரைவாகப் பரவிவிட்டிருந்தது. சுற்றுப் பட்டியிலிருந்தெல்லாம் வந்திருந்தார்கள். நிறைய பேரிடம் விசாரித்துப் பார்த்தாயிற்று. யாருக்கும் அடையாளம் தெரியவில்லை.

எஸ். ஐ. 'அதை'ச் சுற்றிச் சுற்றி வந்து பார்த்தார். ஒவ்வோர் இடத்திலும் நின்று

# ஐ.டி.பி.ஐ.

## முதலீட்டு வைப்புக் கணக்குத் திட்டம்



- கம்பெனிகள், பங்குடமை நிறுவனங்கள், தனிநபர் மற்றும் இந்து கூட்டுக் குடும்பங்களுக்கு, வருமான வரிச் சட்டம், 1961, பிரிவு எண்-32 AB-ன் கீழ் ''வியாபாரம் அல்லது தொழிலிலிருந்து வருமானம்'' எனும் தலைப்பில் கணக்காக்கப்படும் வருமானத்தின் மீது செலுத்த வேண்டிய வரியில் சலுகை.
- இத்திட்டத்தில் செலுத்தப்படும் வைப்புகள் வரிக்கு இலக்காகும் வருமானத்திலிருந்து 20% வரை தள்ளுபடிக்கு உட்படும்.
- இத்திட்டத்தில், வைப்புகள், வரிகொடுப்போரின் கணக்கு ஆண்டு முடிந்த 6 மாதத்திற்குள் அல்லது வரி மொழி சமர்ப்பிப்பதற்குள், இவையில் எது முதன்படியோ அதற்குள் செலுத்தப்பட வேண்டும்.
- வைப்புகள் அஞ்சல் மூலம் அனுப்பலாம்.
- முதலீடு செய்யப்பட்ட வைப்புகள் மீது ஆண்டொன்றுக்கு 10% வீதம், வரி கழிக்கப்படாமல், வட்டி ஏப்ரல் 1-ம் தேதி வைப்புக்காரரின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும். இவ் வட்டித் தொகையை வங்கியிலிருந்து எடுப்பதற்கு எவ்விதத் தடையுமில்லை.
- முதலீடு செய்த ஒரு ஆண்டுக்குப் பின், வைப்புத் தொகையை தொழில் அல்லது வியாபாரத்திற்குத் தேவையான இயந்திரங்கள், கம்ப்யூட்டர் போன்றவைவை வாங்கப் பயன் படுத்தலாம்.
- வெளியூர்க் காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவற்றை மாற்றுவதற்கான செலவை ஐடிபிஐ ஏற்றுக் கொள்ளும். காசோலை ஐடிபிஐக்குக் கிடைக்கும் நாள் வைப்புக் கணக்கின் முதல் நாளாகக் கருதப்படும்.
- Demand Draft-கள் வாங்கிய தேதியிலிருந்து 10 நாட்களுக்குள் ஐடிபிஐ-ல் பெறப்பட்டால்Draft வாங்கிய தேதிமுதல் வைப்புக் கணக்குத் தொடங்கப்படும்

Sobhagya-B/89 TAM

**இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் பாங்க் ஆப் இந்தியா**

ஐடிபிஐ டவர், கஃப் பரேட், கொலாபா, பம்பாய்-400 005.

நிதானமாய் யோசித்தார். தொடர்ந்து பார்த்தார். தீர்க்கமான பார்வை. தீவிரமான யோசனை. திடீரென மனத்தில் ஒரு மின்னல் ஓடிற்று. வேகமாகப் பக்கத்தில் வந்தார்.

"தம்பி! இதை நாங்க டீல் பண்ண முடியாதுப்பா. இது காம்ப்ளிகேட்டட் கேஸ். அங்கே பாரு. பாடி எங்கே கெடக்குன்னு?"

"அது... தண்டவாளத்துக்கு வடக்கே தான் ஸார் இருக்கு."

"நல்லா பாரு. வடக்குப் பக்கத்தில் தண்டவாளத்தை ஒட்டின ஜல்லியிலே கெடக்கு. ஒண்ணு, இது ரயில்லே அடிபட்டிருக்கணும். அல்லது ரயில்லேர்ந்து விழுந்திருக்கணும். இந்த மாதிரி கேஸை ரயில்வே போலீஸ்தான் டீல் பண்ண முடியும். நீ அங்கே போய் அவங்களை காண்டாக்ட் பண்ணு."

எஸ். ஐ. தோரணையோடு சொல்லிவிட்டுப் போய் விட்டார்.

அடுத்த பதினைந்தாவது நிமிடம் இவன் ரயில்வே போலீஸ் ஸ்டேஷனில் இருந்தான். விஷயத்தைச் சொன்னான். கான்ஸ்டபிள் மிரண்டு போய் குவார்ட்டர்ஸிலிருந்த எஸ். ஐ. யை அழைத்து வந்தார்.

எஸ். ஐ. க்கு ஆச்சரியம். அதிர்ச்சி. நம்ப முடியாமல் கேட்டார். "எந்த ரயில்வே கிராஸிங்?"

"கரிசல்குளம் ரயில்வே கிராஸிங் ஸார்."

"இந்தா இருக்கே, கூப்புடுற தூரத்தில். இந்தக் கரிசல்குளமா?"

"அங்கேதான் ஸார்."

"என்னப்பா இது, கொடுமையா இருக்கு! ரெண்டு நாளாகுதுங்கறே. இப்ப வரைக்கும் ஒரு பய வந்து சொல்லலையே!"

இவனுக்கு ஓரளவு நம்பிக்கை வந்தது. இவரிடம் கொஞ்சம் கடமையுணர்ச்சி இருக்கிற மாதிரி தெரிந்தது. இந்த முறை ஏமாற்றம் இருக்காது என்று தெம்பு வந்தது.

ஸ்பாட்டுக்கு வந்ததும் எஸ். ஐ. யிடம் ஏகச் சுறுசுறுப்பு. கான்ஸ்டபிள் டார்ச் அடித்து உதவினார். எஸ். ஐ. கர்சீப்பால் மூக்கைப் பொத்திக் கொண்டே மிகக் கவனமாக 'அதை' நோட்டம் விட்டார். கண்ணை உறுத்தின ஒவ்வொரு விஷயத்தையும் மனத்தில் குறித்துக் கொண்டார். 'எப்படி, எதனால்?' என்று அலசின போது ஒரு தீர்மானத்துக்கு வர முடிந்தது. சைகை செய்து சந்திரனை அழைத்தார்.

"தம்பி! இந்த ஆளு ரயில்ல அடிபடவோ ரயில்லேர்ந்து கீழே விழவோ சான்ஸே இல்லை. பாடிய பார்த்தாலே நல்லாத் தெரியுது. இது வேற மாதிரியான சாவுதான். அது எப்படி நடந்திருக்கும்னு நான் கெஸ் பண்ணிச் சொல்றது தப்பு. என்னைப் பொறுத்தவரைக்கும் இந்தக் கேஸைத் தொட முடியாது. அதனாலே நீ நார்த் போலீஸ் ஸ்டேஷன்லதான் கம்ப்ளெய்ண்ட் கொடுத்தாகணும். இதை அவங்கதான் டீல் பண்ணியாகணும்."

அவர் முத்தாய்ப்பாய்ச் சொல்லி விட்டார்.

மீண்டும் நார்த் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றான். எஸ். ஐ. சிவில் டிரஸ்ஸில் எங்கோ புறப்பட்டுக்கொண்டிருந்தார். ரைட்டரிடம் விசாரித்ததில் மதுரைக்கு என்று தெரிய வந்தது.

"வணக்கம் ஸார்" என்றான். எஸ். ஐ. விநோதமாகத் திரும்பினார். அடையாளம் கண்டு கொண்டார்.

"என்ன?"

"அந்த பாடி விஷயம் ஸார்..."

"அதான் சொல்லிட்டேனே நான் பார்க்க முடியாதுன்னு..."

"ரயில்வே போலீஸ் நீங்கதான் பார்க்கணும்னு சொல்லிட்டாங்க ஸார்."

"அட, அவங்க யாரு என்னைப் பார்க்கச் சொல்றதுக்கு?" சிலிர்த்தார். கோபத்தில் முகம் கொதித்தது. மீசையைத் திருகினார். "சரி... இப்ப உனக்கு என்ன செய்யணும்...?"

"அந்த பாடியை எடுத்துரணும் ஸார்."

"அப்படியா? செத்துக் கிடக்கிறது உன் மாமனா மச்சானா?"

"யாருமில்லே ஸார்..."

"அண்ணனா? தம்பியா?"

"யாருன்னே தெரியாது ஸார்."

"பின்னே என்னடா வெளக்கெண்

**இது என்ன?**

அ) ஷேக்ஸ்பியர் காலத்து நாடகங்களில் வரும் ஒரு பாத்திரம்?

ஆ) இதிகாச காலத்துக் கடவுள்?


இ) ஒரு பேய்க் கதைக்கு வரையப்பட்ட ஒரு படம்?

ஈ) மூன்றும் இல்லை!

விடை 42 ஆம் பக்கம்.



# யாரந்த பவானி...!


யாரந்த பவானி... இவர்கள் எல்லோருக்கும் அவள்தானா? அவள் என்ன சகலகலா வல்லியா?
நான்தான் பவானி! 'மங்கையர் மலர்'ஐத் தொடர்ந்து படிக்கிறவள் நான். அதில வாழ்க்கைக்குத் தேவையான அத்தனை விஷயங்களும் வருது... அத்தனையையும் படிக்கிறேன். அதனால எல்லோருக்கும் நல்ல தோழியா மாறிட்டேன் நான்!

**40 ஆம் பக்கத்துப் புதிர் விடை:**

**பத்தொன்பதாம் நூற்றாண்டு இறுதி வரை ஐரோப்பாவை அச்சுறுத்தி, உயிர்ப் பலி கொண்ட 'பிளேக்' நோயின் கொடுமையிலிருந்து, தப்புவதற்காக அந்தக் காலத்து ஜெர்மானிய டாக்டர்கள் அணிந்த பாதுகாப்பு முகமூடி உடை! கண்ணுக்கான ஓட்டைகளைக் கண்ணாடி மறைக்க மூக்குப் பகுதியில் ஸெண்ட் மணத்தது!**

**— வெஸ்.**

ணெய். சும்மா தொண தொணன்னுக்கிட்டு. பேசாம உன் சோலியைப் மட்டும் பார்த்துக்கிட்டுப் போடா!''

அவர் இவனை அலட்சியப்படுத்திவிட்டு பஸ் ஸ்டாப்பைப் பார்க்க நடந்தார்.

வெறுத்துப் போய் வீடு திரும்பினான். அன்றிரவு தூக்கம் வரவில்லை. முன் வைத்த காலைப் பின் வைத்தது மட்டுமல்லாமல் குப்புற விழுந்து மூக்கை உடைத்துக் கொண்ட மாதிரி அவமானமாக இருந்தது.

**கா**லை. புரண்டு படுத்த போது யாரோ அப்பாவிடம் பேசிக் கொண்டிருப்பது காதில் விழுந்தது. மெட்ராஸ் போன பஞ்சாயத்து பிரஸிடெண்ட் திரும்பி விட்ட செய்தியைச் சொல்லிக் கொண்டிருந்தார். இவனுக்குச் சந்தோஷமாக இருந்தது. துள்ளி எழுந்தான். முகம் கழுவிக் கொண்டு தெருவுக்கு வந்த போது திகைப்பாக இருந்தது.

அங்கங்கே கூட்டம். கலவரத்தோடு பேசிக் கொண்டிருந்தனர். எல்லோரிடமும் பீதி. சில முகங்கள் வெளிறியிருந்தன. இவன் என்னவென்று அறிந்து கொள்ளத் துடிக்க, ரவி ஓடி வந்தான்.

''போச்சுடா. நாம பட்ட கஷ்டமெல்லாம் வேஸ்ட்டுடா! போச்சுடா.''

''என்ன? என்ன?''

''பாடியைக் காணோம்டா!''

''காணோமா?''

''ஆமாண்டா. ராத்திரியோட ராத்திரியாக் காணாமப் போயிடுச்சு. அநேகமா இது கொலையாத்தான் இருக்கணும். கொன்னவன் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கிட்டுப் பாடியைக் கடத்திக்கிட்டுப் போயிருப்பான். விஷயம்விருட்டுன்னு ஊர் ஊராப் பரவிடுச்சு. கொலைகாரன் இந்த ஏரியாவில்தான் இருக்கணும்னுட்டு ஜனங்க பயந்துக்கிட்டு இருக்காங்க.''

இவனுக்குத் துக்கமாக இருந்தது. எது நடந்துவிடக் கூடாது என்பதில் ஜாக்கிரதையாக இருந்தானோ அது நடந்தே விட்டது.

**அ**ன்று மாலைப் பத்திரிகையிலும் செய்தி வந்துவிட்டது. தலைப்புச் செய்தியே இதுதான். 'பிணத்தைக் காணவில்லை — போலீஸ் அலட்சியம் — மக்கள் பீதி' என்று கொட்டைக் கொட்டை எழுத்துக்களில் பக்கத்தில் போட்டோ வேறு. 'பிணம் இருந்த இடம் இதுதான்' என்ற அம்புக் குறியுடன்.

கலெக்டர் கண்ணில் இது பட்டிருக்க வேண்டும். அவர் எஸ். பி. யை விசாரிக்க, எஸ். பி. பேந்தப் பேந்த விழித்தார். எஸ். பி. டி. எஸ். பி. யை விசாரிக்க டி. எஸ். பி. தலையும் புரியாமல் வாலும் புரியாமல் தத்தளித்தார். டி. எஸ். பி. இன்ஸ்பெக்டரை விரட்ட, இன்ஸ்பெக்டர் எஸ். ஐ. யைத் திட்ட, உடனே டாக்ஸி பிடித்து இரண்டு கான்ஸ்டபிள்களுடன் கரிசல்குளத்தில் வந்து இறங்கினார் எஸ். ஐ.

டீக்கடைக்கு வெளியில் நின்று டீ குடித்துக் கொண்டிருந்தான் சந்திரன். கான்ஸ்டபிள்கள் அருகிலிருந்தவர்களிடம், ''சந்திரன் யாரு?'' என்று விசாரித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து இவனே எஸ். ஐ. யை நெருங்கினான்.

எஸ். ஐ. இவனைப் பார்த்ததும் உறுமினார். ''நீதானேடா அன்னைக்கி கம்ப்ளெய்ண்ட் கொடுத்தது?''

''ஆமா ஸார்.''

''பேப்பருக்கு நீதான் நியூஸ் கொடுத்தியா?''

''இல்லே ஸார்.''

''இல்லே?''

''சத்தியமா இல்லே ஸார்.''

''பாடியை எங்கேடா காணோம்?''

இவன் திகைத்தான். இதென்ன கேள்வி சம்பந்தமில்லாமல்? குதிரை வண்டிக்காரனிடம் அங்குசம் இருக்கிறதா என்று கேட்கிற மாதிரி.

''எனக்குத் தெரியாது ஸார்.''

''பல்லைக் கழட்டிருவேன் படவா. பக்கத்தில வாடா!''

இவன் அருகில் போனான்.

''உண்மையைச் சொன்னா உயிரோடு தப்பிச்சே! இல்லே, அடி வாங்கியே செத்துருவே. ஒளிக்காமே சொல்லு. பாடியை என்ன பண்ணினே? எரிச்சியா? புதைச்சியா?''

இவன் ஒரேயடியாக வெலவெலத்துப் போனான். ''சார்... வந்து... நீங்க சொல்றது...''

''ராஸ்கல். உங்கிட்டே கொஞ்சிக்கிட்டிருந்தா பதில் வராது. உன்னை ஸ்டேஷன்ல வச்சிக் கேட்கிற விதத்திலே கேட்டுக்கிறேன்.''

எஸ். ஐ. அவனுடைய சட்டையை முரட்டுத்தனமாகப் பிடித்து இழுத்து டாக்ஸி இருந்த பக்கம் தள்ளினார். கீழே தடுமாறி விழப் போனவனை கான்ஸ்டபிள்கள் பிடித்து டாக்ஸியில் ஏற்றினர்.

அங்கங்கே நின்றிருந்த கூட்டம் டாக்ஸி போவதை வாய் பிளந்தபடி பார்த்துக் கொண்டிருந்தது.

# இரண்டாவது சூரியன்

## 7

அழட்டும் என்றுதான் தோன்றிற்று. அழுது ஓயட்டும் என்று யோசனை வந்தது. அவள் பசியில் அழவில்லை. பரிதாபத்தில் 'அழுகிறாள் என்பது தெரிந்து விட்டது.

''யாருமே கேட்கலையே காலைலேர்ந்து... சாப்பிட்டியாடின்னு நீ கேட்கிறியே.. அந்தப் பாவி கேட்கலையே'' என்று பொங்குகிறது. பொங்கட்டும்! மனசு பொங்கி, அழுது அமைதியான பின் உண்மையான வயிற்றுப் பசி வரும். அப்போது கண் கேட்கும். பசிக்குதே என்று முகம் சொல்லும்.

இப்போது அணைத்துக் கொண்டால் சாய்ந்து கொள்ளத் தோன்றி விடும். ''பசி தாங்கிடுவேன். பாவிங்க கேட்காத துரத்தினாங்களே அதுதான் தாங்கலை...'' என்று பொய் வரும். பசிதான் தாங்க முடியாதது. பசிக்காக எது வேண்டுமானாலும் தாங்கலாம். தாங்க முடியும்.

''கோர்ட்டிலேயே நாலு மணி ஆயிடுச்சு. நீ அடிச்சியா அவனைன்னு ஜட்ஜு கேட்டாரு. அவ குடிச்சுட்டு எங்கேயோ வுழுந்துட்டாப்பலன்னான். ஜட்ஜு திரும்பி என்னிய பார்த்தாரு.

''நான் கதறிட்டேன். 'ஐயா, நான் படிக்காதவ தாங்க. ஆனா நீங்க வச்சிருக்கற அத்தினி புஸ்தகத்து மேலயும் சத்தியம் பண்றேன். நாலு குடும்பத்துக்குப் பூ கட்டற இந்தக் கை மேல சாட்சியா சொல்றேன் சாமி. நான் குடிச்சதே இல்லீங்க. இந்தக் கயவாளி குடிச்சுட்டு வந்து அடிச்சான். ஏண்டி கோர்ட்டுக்குப் போறன்னு அடிச்சான்' அப்படின்னேன்.

''பத்து நிமிஷத்துல சொல்லிட்டாங்க. இனிமே நீ அவனுக்குப் பொண்டாட்டி இல்லை. உனக்கு அவன் புருஷன் இல்லை. உனக்கு விடுதலைன்னுட்டாங்க.

''அவளைத் தொட்டே... ஆறு மாசம் உள்ளே போட்டுருவேன்னு மிரட்டினாரு. தாலி கழட்டி ஜட்ஜு மேஜை மேல் வச்சுட்டுத் தரைல விழுந்து கும்பிட்டுட்டு விருவிருன்னு நடந்து சிந்தாதரிப்பேட்டை வந்துட்டேன். இப்ப நீ வாடகை கொடுத்தாலும் இந்தக் குடிசைக்கு அவன்தான் ஓனரு. நீ வெளியே போயிடுன்னாங்க. நாலு பேரைக் கூட்டி நியாயம் கேட்டேன். இங்கே இருந்து ஏம்மா அடிபடறே? எங்கனா போயிடுன்னுட்டாங்க.

''எங்க போறதுன்னு யோசனையா சோறு துன்ன உட்காந்தேன். எட்டித் தட்டு உதைச்சான். இத்தினிக்கும் அது முந்தாநேத்தி சோறும்மா. நொச நொசன்னு கிடந்தது. அதத் தின்றது கூட அந்தாளுக்குப் பொறுக்கலை. ச்சீ போடான்னு புடவை துணிமணியைச் சுருட்டிக்கினு வந்துட்டேன். எங்க போறதுன்னு தெரியலை, பார்த்தசாரதி கோயில் வாசல்ல வந்து படுத்துட்டேன். பசி மயக்கம், அசதி... கண்ணை இழுத்துக்கினு போச்சு. எழுப்பி இங்க படுக்கக் கூடாது போனுட்டாங்க.

''உன் கார்டு இருந்துதா... சரி பார்க்கலாம்னு இங்க வந்துட்டேன். சோறு துன்னவும் முடியலை. துன்னாத இருக்கவும் முடியலை. அப்படி ஒரு வேதனை. நீ கேட்டியா ஒன்னு பொத்துக்கிச்சு.''

''இப்படி கேட்டதுக்கெல்லாம் அழுதின்னா எப்பதான் மத்த வேலை நடக்கறது?''

''என்ன வேலை போ. செத்துடலாம் போல இருக்கு.''


''சாவ முடியுமா உன்னால?''

''முடியலையே!''

''எதுக்கு சாவணும் நீ?''

''செத்துட்டா பசிக்காது. எவனும் தலைமுடியப் புடிச்சு அடிக்க மாட்டான். குடிக்க துட்டு குடுன்னு அறைய மாட்டான்.''

''சாவறவ எதுக்கு கோர்ட்டுக்குப் போன?''



''அவன் பொண்டாட்டியா சாகக் கூடாதுன்னுதான். அவன் கையால கொள்ளி வாங்கக் கூடாதுன்னுதான்.''

''அவன் பொண்டாட்டியில்லேன்னு ஆயிடுச்சு. அப்புறம் எதுக்கு சாவணும்?''

''இனி என்னம்மா... எச்ச பண்டம்தான. எவன் பொம்பளையா மதிப்பான். அசிங்கமா கேட்பான். அப்பப்ப வந்துட்டுப் போறேன்னுவான். ஒழுங்கா எவன் வச்சு குடித்தனம் பண்ணுவான். கவுறு கொடுக்கற கவுரதை போச்சே.''

''போட்டும்.''

''உனக்குத் தெரியலைம்மா. கவுறு இருந்தாலே அச்சப்படமாட்டானுங்க. இப்ப கவுறும் இல்லையா எவனைப் பார்த்தாலும் நாமதான் அச்சப்படணும்.''

''உன்னை மீறி என்ன நடக்கும்?''

''நடக்காது... எப்ப? எவன்டா அவன் என்னிய பார்த்துச் சீட்டி அடிக்கிறது தாலி கட்டின பொம்பளையா தெரியலையான்னு கேட்கலாம். இனி கேட்க முடியுமா? அதெல்லாம் விட...''

''ம்ம் சொல்லு...''

''நான் பூ விக்கிறவம்மா. நெத்தில பொட்டு வச்சுக் கவுறுல மஞ்ச தேச்சுப் பூ வாங்கறியாம்மான்னாதான் நிப்பாங்க.''

''உன்னை யார் பொட்டு வைக்க வேணாம்னது? கவுறு, பொட்டெல்லாம் பாத்தா பூ வாங்கறாங்க? சரி... பூ விக்க வேண்ணா மீனு விக்கறது.''

''பழக்கமில்லீங்களே. எட்டு வயசுல ஆரம்பிச்சேன். இந்த ஆனி வந்தா முப்பது வயசு. வேற எதுவும் பழக்கமில்லியேம்மா.''

''சாப்பிட வா'' — பானுமதி உள்ளே போனாள்.

''இங்க உட்காந்துக்கறேன். பழுசு இருந்தா போடு. போதும்.''

''உள்ள வா.''

''வேணாம்மா.''

''நான் இன்னும் சாப்பிடலை...''

''நீ சாப்பிட்ட பிறகு போடு.''

''நீ என்ன பிச்சைக்காரியா. பூ கட்டறது ஒரு கௌரவமான தொழில்தான்.... வா. உள்ளே வந்து உட்கார் சாப்பிடு.''

இரண்டு தட்டுகள் எடுத்து வைத்து விட்டு மறுபடி வெளியே வந்து தயங்கி நின்றவள் கைபிடித்து உள்ளே இழுத்து வந்தாள்.

சாதம் போட்டு ரசம் ஊற்றி அவள் எதிரே நகர்த்திய போது அவள் சோறு பிசைந்த விதம் வேறு மாதிரியாக இருந்தது. கிட்டத்தட்ட சட்டியில் சோறு பிசைகிற விதமாய் விரல் வழியே சோறு பிதுங்க அழுத்தி அழுத்திப் பிசைந்தாள். உருட்டி உருட்டி ஒரு கை சாப்பிட்டாள்.

''உன் பேர் என்ன?''

''முதல் கவளம் முழுங்கியவள சட்டென்று அதிசயமானாள். உனக்குத் தெரியாதா? நான் சொல்லலை? நாகம்மா... அதான் என் பேரு.''

''பொரியல் வைக்கட்டுமா?''

''வேணாம்மா.''

''சாப்பிடு.'' பானுமதியும் பரிமாறிக் கொண்டாள். ''இதோ பார். உருட்டிச் சாப்பிடாதே. இப்படி பிசைந்து நாலு விரல்ல எடுத்துக் கட்டை விரலால வாய்க்குத் தள்ளு.''

''ஐயோ எ ன க் கு இப்படித்தாம்மா பழக்கம்.''

''மாத்திக்கோ.''

இன்னும் சாதம் போட்டு மோர் பாத்திரம் தூக்க, மறுத்தாள்.

''ஏன்?''



பாலகுமாரன்

"எனக்குப் பிடிக்காதும்மா. மோர் சாப்பிட மாட்டேன்."

"அப்புறம்?"

"இன்னும் கொஞ்சம் ரசம் போடு."

"என் கூட இருந்துக்கிறியா?"

"இங்கியேவா?"

"உனக்குத் தான் இடம் இல்லைன்றியே.."

"வேற யாரும் ஒண்ணும் சொல்ல மாட்டாங்களா?"

"யாரு சொல்றது. என் புள்ளைங்கதான் சொல்லணும், நீ வேணுமா வேணமான்னு.."

"உனக்குச் சுமையாயிடாதா?"

"சுமை என்ன? நான் பள்ளிக் கூடம் போறேன். டீச்சர் வேலை. பசங்களைப் பார்த்துக்க. வீட்டு வேலை செய். எனக்கு உதவியா இரு, உனக்குப் பிடிச்சதுன்னா... இல்லை பூக்கட்டற வேலைவிட முடியாதுன்னாலும் சரி."

"வேற புழைப்பில்லை பூக்கட்டறேன். சட்டுன்னு இருக்கியான்னு கேட்டுட்டியே?"

"நீயும் அடிபட்டவ நானும் அடிபட்டவ."

"அடி தாங்காததான் நீயும் விடுதலை வாங்கினியா?"

"சொல்றேன். நீ என் கூட இருந்துடுறியா."

நாகம்மா தலைகுனிந்து யோசித்தாள். வெற்றுத்தட்டை இரண்டு நிமிடங்கள் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"ஏன் இதுக்கு இத்தினி யோசிக்கறே?"

"நான் யாரு என்னன்னு தெரியாத கை பிடிச்சு இழுத்து வந்து சோறு போடறியே... நம்பலாமா இப்படி?"

"ஏன் என்ன தப்பு?"

"நான் நல்லவளா கெட்டவளான்னே தெரியாது உனக்கு. நீ இல்லாதப்ப வீட்ல இருக்கிறதை எடுத்துக்கிட்டு....."

"எங்க ஓடுவே? என்ன இருக்கு எடுக்கறதுக்கு?

"குந்துமணிதான் எடுத்துட்டேன்னு வை. ஒழியட்டும்ன்னு தோணாது. குமுறும். நான் வீட்டு வேலையும் செய்தவ தாம்மா. 'ஏண்டி இங்க அஞ்சு ரூபா வச்சேனே பார்த்தியா'ன்னாங்க அன்னிக்கே நின்னுட்டேன். துட்டு கிடைச்சுடிச்சு, நல்லவ பாவம்ன்னு வாங்க; கிடைக்கலை, கெட்டவளோன்னு யோசிப்பாங்க. அஞ்சு ரூபா யாருக்கும் பெரிசில்லைதான். அப்புறம் எது காணம்னாலும் நாகம்மா பேருதான் ஞாபகம் வரும் எதுக்குப் பொல்லாப்பு?"

"சரி உனக்கு இஷ்டமில்லைன்னா, வேணாம்."

"இஷ்டமில்லைன்னு சொல்லலையம்மா. நான் சொல்லு தாங்காதவ."

"நான் கூடத்தான்."

"சரிப்பட்டு வருமா?"

"சரிப்பட்டு வரலைன்னா உன் வழி உனக்கு,என் வழி எனக்கு. இருக்கிற வரைக்கும் நான் இங்கற சோறும் உடுத்தற துணியும் உனக்குக் கிடைக்கும்."

"என்னைப் பூவிக்க போகாதேங்கிறியா?"

"நீதானே சொன்னே. நாலு வீட்ல கழுத்துக் கவுறு இல்லாத எப்படி ஏறி இறங்கிடுவேன்னு...."

"கஷ்டம்தான். பாத்திரம் எங்க போடறது?"

பானுமதியின் தட்டும் எடுத்துப் பின் பக்கம் போனாள். குத்திட்டு உட்கார்ந்து பவுடர் போட்டு அலம்பினாள். ஈரத் துணி போட்டுத் தரையில் உருட்டினாள்.

"மேஜை வாங்கிப் போடறதுதானே. பாதி பேர் வீட்ல மேஜைலதான் சோறு திங்கறாங்க."

"வாங்கணும். அரிசி பருப்புலேர்ந்து நளைக்குத்தான் கடைக்குப் போகணும். போய்ப் படு."

தன் படுக்கையை விரித்துவிட்டு நாகம்மாவுக்குப் பாயும் தலையணையும் எடுத்து வந்தாள். புடைவையை அவிழ்த்து விட்டு நைட்டிக்கு மாறினாள். இறுக்கிக் கொண்டிருந்த பாவாடை நாடாவும் உறுத்திக் கொண்டிருந்த முதுக்குக் கொக்கியும் விடுபட முற்றிலும் விடுதலையான சுகம் உடம்பில் பரவிற்று.

வாசலும் பின்கதவும் பூட்டி விட்டுப் படுத்த போது முதுகுத் தண்டு வலித்தது. நீட்டிச் சோம்பல் முறிக்க இன்னும் அதிகமாயிற்று.

கட்டை விரல் வைத்து அழுத்தியது போல் காலையிலிருந்தே இந்த வலி இருந்தது. வயதாகி விட்ட காரணமா?

ஒருவேளை இந்த வயது அலுப்பில்தான் இவளை இங்கே இருத்தி வைக்க முயலுகிறதோ. பெருக்கி, சுத்தம் செய்து, பாத்திரம் தேய்த்து எல்லா காரியத்தையும் எவளோ செய்ய, உத்தியோகத்துக்குப் போய் வீடு வந்து, ஆண் போல சாய்ந்து விடுகிற சுகம் கேட்கிறதோ?

என்ன கேட்பாள்? மாசம் இருநூறு கொடு என்றா?

தாங்குமா? மூன்று வேளை சோறு போட்டு இருநூறு ரூபாய் அதிகமில்லையா? மாடு பிடிக்கப் போகச், விலைபடியுமா பார்ப்போம் என்கிற தந்திரமா?

ஆனால் அவளும் யோசித்தாள்.

எதுக்கு இந்த வம்பு. சோறு கேட்ட பாவத்துக்கா, என்று யோசித்திருப்பாளோ. கூலியழ ஆள் பார்த்தால் தொண்டைக்

---

**மன்னர்:** வழக்கமாகப் பெய்யும் 'மாதம் மும்மாரி' இம்மாதம் பெய்யவில்லையே, ஏன்?

**அமைச்சர்:** போர்க்களம் சென்றிருக்கும் வீரர்களுக்கு அவர்களுடைய மனைவியர் மேகங்களையெல்லாம் தூதாக அனுப்பி விட்டனர் மன்னவா!

— சுரம்.




பால் நலம்.
சுவை வளம்.
NUTRINE
மில்க் பிஸ்கெட்ஸ்
இப்போது
புதிய, கண்கவர் பேக்கிலே!
nutrine
Milk Biscuits
Mudra:Blr:NB:219:89:TAM

குழியில் விரல் வைக்கிறாளே என்கிற எண்ணமோ.

ஆனால் ஆள் வேண்டும். ஒரு துணை வேண்டும். குழந்தைகள் அலையாது வீட்டுக்குள் வந்து ஒதுங்க ஒரு நபர் வேண்டும். இவள் சரியென்றால் நன்றாய் இருக்கும். சரிப்பட்டு வந்தால் பல வேதனைகள் குறையும்.

**எ**ல்லா புருஷனும் இப்படித்தான் யோசிப்பானோ. மாடு பிடிச்சுருக்கணும். விலை படியணும். என்ன விலை? மூன்று வேளை சோறு. தீபாவளிக்குப் புடைவை மாசாந்திர செலவுக்குக்காக. பொண்டாட்டி என்கிற பட்டம்.

நான் அப்படித்தான் இருந்தேன். வேலைக் காரியகத்தான் இருந்தேன். என்னுடைய ஆயிரத்தி தொண்ணூற்றி சொச்சமும் கையில் கொடுத்துவிட்டு பஸ்ஸுக்குக் காசு எண்ணி வாங்கினேன். இந்த வேலைக்காரி கூட யோசித்தாள். நாளைக் காலையில் சரிப்படாதும்மா, என்று கிளம்பினாலும் கிளம்புவாள். நான் யோசிக்கவேயில்லை. சம்பாதிப்பதை புருஷன் கிட்ட கொடுக்கறது தானே பண்பு என்று இருந்தேன்.

என்னவோ ஒரு பயம். இனம் தெரியாத பயம். ஆண் என்கிற உடனே ஒரு பயம். கூட எப்படி பத்து பைசா கேட்பது என்கிற பயம். என் காசு, என் உழைப்பு இருப்பினும் அவனிடம் அதைக் கேட்க ஒரு கலக்கம்.

நாலு ரூபாய் நாற்பது பைசாவோடு பர்ஸ் பஸ்ஸில் தொலைந்து போய்விட்டது, என்று சொன்ன போது தரித்திரம் பிடிச்ச நாயே என்று திட்டினான். எவனையாவது பராக்கு பார்த்துக்கிட்டு வந்திருப்பே என்று இளக்காரம் செய்தான். என்ன என்று முறைத்த போது பளீரென்று அரைந்தான்.

பையனின் புத்தகப்பையை அடுக்கின போது பர்ஸ் அடியில் இருந்தது. எடுத்துக் கொண்டு போய்க் கிணற்றில் எறிந்தாள். கிடைச்சுடுச்சு என்றால் அதற்கும் கத்துவான்.

**அ**வனுக்குச் சரிகை போட்ட பச்சை சால்வை போர்த்தினார்கள். நாற்காலி முதுகில் போட்டு விட்டுச் சிலம்பின் கதை சொன்னான். கூட்டம் முடிந்து வர, சால்வை விட்டுப் போனது நினைவுக்கு வந்தது. மறுபடி போய்த் தேடியும் கிடைக்கவில்லை. விசாரித்தும், யார் எடுத்தார்கள் என்று தெரியவில்லை. வாய்க்கு வந்தபடி கூட்டம் நடத்தியவர்களைத் திட்டிக் கொண்டிருந்தான்.

"சால்வை போர்த்தின பேமானியே ஆள் வச்சு அமுக்திட்டிருப்பான். மறுபடி எவனுக்காவது போர்த்துவான். அவன் கிட்டயும் அமுக்திட்டு..... வருஷத்துக்குப் பன்னெண்டு சால்வை ரோஜாப்பூ மாலைன்னு கணக்கு எழுதுவானுங்க."

மாலையில் ஒரு மாணவன் சால்வை எடுத்துவர முகம் மலர்ந்து போயிற்று. "கூட்டம் முடிஞ்சவுடனே மடிச்சு நீட்டினேன் ஐயா. அப்புறம் வாங்கிக்கிறேன் னீங்க. சட்டுன்னு வண்டியேறிப் போய்ட் டீங்க. உங்க விலாசம் விசாரிச்சு எடுத்துக் கிட்டு வரேன்."

"தம்பி என்ன பண்றிங்க?"

"எஸ் எஸ் எல் சி படிக்கறேங்க."

"நல்லது. புலவர் சொத்து திருடியிருந்தா படிப்பு வராது. தினம் இதுமாதிரி யாராவது துண்டு போர்த்தறாங்க. துண்டு முக்கியமில்லை. எனக்குப்போர்த்தினதைஉங்களால வீட்டுக்கு எடுத்துக்கிட்டுப் போக முடியலை பாருங்க... அதான் என் தமிழின் வேகம். போய் வாங்க." அந்தப் பிள்ளை மூஞ்சி செத்துத் திரும்பிற்று. ஆறு ரூபாய் கைத்தறி துண்டானாலும் மடித்து வைத்துக் கொள்கிற வழக்கம் வந்தது.

ஒரு நாள் தலைவருக்குப் போர்த்தின சால்வையை வாங்கி, அவருக்கு அருகே மடித்து வைத்துவிட்டு, அவர் எழுந்ததும் லபக்கென்று வாரித் தன் மாணவனிடம் கொடுத்து, தொலைவில் நிற்க வைத்து, தலைவர் கிளம்பியதும் பையனிடமிருந்து சால்வையைக் கேட்டு வாங்கி வீடு வந்து பிரித்து எம்பிராய்டரி வியந்து, ட்ரேட் மார்க் பார்த்து, 'இவருக்கு மட்டும் இப்படி சால்வை போர்த்தறானுங்க இனிமே எவனாவது கைத்தறி துண்டு போடட்டும்! போத்தறப்பவே ஏன் இதுக்கு மேலே தமிழுக்குச் செலவு செய்ய முடியாதான்னு கேட்கறேன்.' சங்கல்பம் பண்ணிக் கொண்டான்.

பீரோவில் ஒரு தட்டு முழுக்க எம்பிராய்டரி சால்வை அடைத்திருந்தது.

'**இ**ந்த வீட்டில் ஒரு சால்வை கூட இல்லை!' பானுமதி நினைத்துக் கொண்டாள்.

'யம்மா' — வராந்தாவில் நாகம்மாவின் குரல் கேட்டது. பானுமதி எழுந்து உட்கார்ந்தாள்.

'தாயே என்னை இப்படி சோதிக்கறியேடி!' மறுபடி குரல் வந்தது. 'கொன்னுடு! என்னைக் குத்தி கொன்னுடு!' — பானுமதி விளக்குப் போட்டுக் கலவரமாய் எட்டிப் பார்த்தாள்.

தூக்கத்தில் அழும் நாகம்மாவைப் பார்க்கத் துக்கமாய் இருந்தது.

(தொடரும்)

"ஏன் வருத்தமாக இருக்கிறாய்?"



"டிக்ஷனரி வாங்குவதற்குப் பணம் அனுப்பச் சொன்னால் வீட்டிலிருந்து டிக்ஷனரி வாங்கி அனுப்பி விட்டார்களே!"

— சந்திரா.



# அம்மாடியோவ்!

இந்தப் படத்தைப் பாருங்கள்! இந்த இரு ஜெர்மானிய சாம்பியன்களுக்குப் பதிலாக, நம் ஊர் தயிர் வடை தேசிகன் மேல் உசிலை மணி உட்கார்ந்து கொண்டு போஸ் கொடுத்தால் எப்படி இருக்கும்?

உசிலைமணியிடம் படத்தைக் காட்டிய போது, "பேஷ்! பேஷ்! படம் ரொம்ப நன்னா இருக்கு! இந்த மாதிரி போஸ் கொடுத்தா எனக்கு ஒண்ணும் பிராப்ளம் இல்லை. பாவம் தயிர்வடை! எத்தனை எலும்பு உன் உடம்புலன்னு கேட்டா, 'நானூத்தி அம்பத்தாறு'ன்னு சொல்லுவான். (எலும்பு கன்னாபின்னான்னு உடைஞ்சு போயிடுமே!) இப்ப மாம்பலத்துல ஒண்டிக் கட்டையா தேமேன்னு இருக்கிறவன், புத்தூருக்குப் பர்மனெண்டா ஜாகையை மாத்திக்க வேண்டியதுதான்" என்றார்.

படத்தைப் பார்த்த தயிர்வடை தேசிகன், "இந்த மாதிரி போட்டோவுக்குப் போஸ் கொடுக்க நான் ரெடி. ஆனா ஒரு கண்டிஷன்! சினிமாவுல, கமல் கைல நின்னுக்கிட்டு, ஸ்ரீதேவி டான்ஸ் ஆடறா மாதிரி டிரிக் ஷாட்டா எடுக்கணும். என் மேல நிஜமாலுமே ஏறி உட்கார்ந்து எடுக்கணும்னா, ஐயா அம்பேல்!"

— மௌஷ்மி.

படம், நன்றி: ஜெர்மன் நியூஸ்.





ராஜ்மோகன் காந்தி

# "ராஜாஜியைக் கைது செய்!"

௬

இந்தியா — பாகிஸ்தான் உறவு மேலும் சீர்கெட்டு வந்தது. சீனாவும் பாகிஸ்தானும் நெருங்கி வந்தன. 1965 மே மாதத்தில் பாகிஸ்தான் ராணுவம் இந்திய எல்லையைக் கடந்து குஜராத்தின் வடக்குப் பகுதியான கட்ச் பிரதேசத்தில் நுழைந்தது. வேறு பலரைப் போலவே ஸி. ஆரும் ஆக்கிரமிப்பை உடனடியாகத் தடுத்து எதிரியைத் தண்டிக்காமல் விட்டதற்காக இந்திய அரசைக் குறைகூறி வருந்தினார். 'இந்த நெருக்கடி நிலையில் அரசைக் குறை கூறி விமர்சிப்பது தவிர்க்கப்பட வேண்டும்' என்ற யோசனைகளை அவர் வன்மையாக எதிர்த்தார். ஷேக் அப்துல்லா மீண்டும் கைது செய்யப்பட்ட போது, "இந்த நடவடிக்கையில் தர்மநியாயமும் இல்லை; ராஜதந்திரமும் இல்லை," என்று கூறி அரசைத் தாக்கினார். "நான் சொல்வதைக் கேளுங்கள்; ஷேக் அப்துல்லா இந்தியாவின் நண்பரேயன்றி விரோதியல்ல" என்று மக்களுக்கு எடுத்துரைத்தார். ஜே. பி. யும் இது போன்ற சொற்களையே பேசினார். ஆனால் இந்த இருவரது கருத்தும் வலிமையற்ற மிகச் சிறுபான்மையினரின் கருத்தாக விளங்கியது.

சில காலம் சென்று ஏராளமான பாகிஸ்தான் வீரர்கள் மாறுவேடத்தில் காஷ்மீரின் போர் நிறுத்த எல்லைக் கோட்டினைத் தாண்டி ஊடுருவினர். இதைத் தொடர்ந்து மூன்று வாரங்கள் கடுமையான போர் நடந்தது. இந்தியச் சிப்பாய்களும் விமானிகளும் தீரத்துடன் போரிட்டு 1962 — இல் தாங்கள் இழந்திருந்த பெருமையைத் திரும்பப் பெற்றனர். பாகிஸ்தானியரும் பிடிவாதமாகத் தான் சண்டை போட்டனர். ஆனால் அவர்களுடைய பாட்டன் டாங்குகளும் அதிவேக விமானங்களும் நமது வீரர்களின், மற்றும் வி. மா னிகளின் ஆற்றல் காரணமாகச் சர்வநாசமடைந்தன. பாதுகாப்பு முயற்சிக்கு ஸி. ஆரின் ஆதரவு உடனடியாகவும் முழு மனத்துடனும் கிட்டியது. அத்துடன் பராக்கிரமம் மிக்க நமது வீரர்களையும் அவர்களுடைய தளபதிகளையும் அவர் மனப்பூர்வமாகப் பாராட்டி வாழ்த்தினார்.

அமெரிக்காவும், ருஷ்யாவும் ஆதரவுதர, ஐ. நா. சபை, இந்தியா — பாகிஸ்தானிடையே போர் நிறுத்தத்தை உருவாக்கியது.

சீனாதான் பாகிஸ்தானைத் தூண்டிவிட்டுப் படையெடுக்கச் செய்தது என்று நம்பிய ஸி. ஆர்., சீனா கொடுக்கும் தொல்லை நீண்ட காலம் தொடரும்; தொலைநோக்குடன் பிரச்னையை அணுக வேண்டும் என்று கருதினார். போர் நிறுத்தத்தைத் தொடர்ந்து, 'இந்தியா — பாகிஸ்தான் நல்லுறவு பலப்பட வேண்டும்' என்றார். சீனாவின் அச்சுறுத்தல்களைச் சமாளிக்க இதுவே சிறந்த வழி என்பதால் காஷ்மீர் பிரச்னையில் இந்தியா பிடிவாதமாக இருப்பது குறுகிய நோக்காகும் என்றார்: "விஞ்ஞானத்தில் கூட முடிவான உண்மைகள் என்று கருதப்பட்டவை பின்னால் மேலும் பல ஆராய்ச்சிகள் நடந்ததன் விளைவாக மாறுதல்களுக்கு உள்ளாகியுள்ளன. அவ்வாறிருக்க அரசியல் வாழ்வின் தீர்த்துப் போன உண்மைகளைப் பிடிவாதமாகக் கட்டிக் கொண்டு அழ வேண்டாம்."

* சதாசிவம்: "மண்டியிட்டு மன்னிப்புக் கோருவார் என்று எதிர்பார்க்காதீர்கள்!"



இவ்வாறு எழுதியதற்காக ஸி. ஆரின் வீட்டினெதிரே ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. அவரைக் கைது செய்ய வேண்டும் என்ற கூக்குரல் எழுந்தது. சுயராஜ்யாவில் அவர் பதில் அளித்தார்:

''எவ்வளவுதான் நான் நிர்ப்பந்திக்கப்பட்டாலும் சரி, சுய நிர்ணய உரிமை என்ற கொள்கையில் எனக்கு உள்ள நம்பிக்கையை என்னால் விட்டுக் கொடுக்க முடியாது. அதற்கு என் மனச்சாட்சி இடம் தராது. இந்தக் கொள்கையின் அடிப்படையில்தான் இந்தியாவின் சுதந்திரம் உருவாயிற்று.....

''பாகிஸ்தான் விட்ட சவாலுக்கு நாம் ராணுவ ரீதியில் பதிலடி கொடுத்தோம். அது சரியான காரியம். வெற்றிகரமாக முடிந்த நடவடிக்கை. பலவந்தத் தாக்குதலுக்கு நாம் அடிபணியக் கூடாது. ஆனால் அதே நேரத்தில் நாம் அடிப்படையான தார்மீக நெறிகளுக்கு விசுவாசமாகவும் இருக்க வேண்டும்.'' (30.10.65)

தமக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட, ஸி. ஆர். ஒரு வாய்ப்பை அரசுக்கு அளித்திருக்கிறார் என்பதாக நம்பியவர்கள் பக்தவத்சலத்திடம் பேச, அவரும் அக் கருத்தை ஏற்றுச் செயல்படலானார். இந்தியா பாதுகாப்புச் சட்டத்தின் அடிப்படையில் சுயராஜ்யாவின் பதிப்பாளர் சதாசிவம் மீதும் ஆசிரியர் போதன் ஜோஸப் மீதும் வழக்குத் தொடரப்பட்டது. சதாசிவத்தின் மனைவி எம். எஸ். சுப்புலக்ஷ்மி, இந்திய ராணுவ வீரர்களின் நல்வாழ்வுக்காகத் தமது பாட்டுத் திறத்தால் ஏராளமான தொகைகளைச் சேகரித்து அளித்து வந்தார் என்பது கூட மறக்கப்பட்டது. இந்தியாவின் எல்லைக் கோடுகள், அதில் அடங்கிய பிரதேசங்கள் குறித்து மக்களின் மனத்தில் சந்தேகக் கேள்விகள் எழக் கூடிய விதமாக ஸி. ஆரின் கட்டுரைகள் அமைந்திருப்பதாக அரசுத் தரப்பில் கூறப்பட்டது.

ஸி. ஆர். இந்த நடவடிக்கையை எதிர்த்தும் ஆட்சேபித்தும் பக்தவத்சலம், டாக்டர் ராதாகிருஷ்ணன், லால்பகதூர் சாஸ்திரி, மற்றும் உள்துறை அமைச்சர் நந்தா ஆகியோருக்குக் கடிதங்கள் எழுதினார்: ''கட்டுரைகள் எழுதியவன் நானிருக்க என்மீது நடவடிக்கை எடுக்காமல் பிறர் மீது ஏன் பாய்கிறீர்கள்? எனக்கு வாய்பூட்டுப் போட எண்ணுகிறீர்கள் என்ற உண்மையை உலகின் பார்வையிலிருந்து இதுபோன்ற தந்திரங்களால் மறைத்து விட முடியாது!''

டில்லிக்குப் போன பக்தவத்சலத்துடன் நந்தா பேசிய பிறகு, நந்தா ஸி. ஆருக்கு ஒரு யோசனை கூறினார். அதன்படி, சதாசிவம் பக்தவத்சலத்தைச் சந்தித்துப் பிரச்னைக்குத் தீர்வு காணலாம்!

''சதாசிவம் மண்டியிட்டு மன்னிப்பைக் கோரிப் பெறுவார் என்று எதிர்பார்க்காதீர்கள்'' என்று கூறி, நந்தாவின் யோசனையை நிராகரித்தார் ஸி. ஆர். உயர்நீதி மன்றத்தையோ அல்லது உச்சநீதி மன்றத்தையோ தாம் அணுக வேண்டியிருக்கும் என்று கோடி காட்டினார்.

ராஜாஜிக்கு வாய்பூட்டு போடுவதன் பின்விளைவுகள் என்னவாக இருக்கும் என்பதைச் சென்னை அரசை விட மத்திய அரசு சரியாகப் புரிந்து கொண்டது. தொடரப்பட்ட வழக்குகளை வாபஸ் பெறுமாறு பக்தவத்சலத்தைக் கேட்டுக் கொண்டது.

''அரசின் கருத்துக்களுடன் மாறுபட்டு எதிர்ப்புத் தெரிவிப்பதற்கு உள்ள சுதந்திரம் — கருத்துச் சுதந்திரம் — இன்று வெற்றி பெற்றிருப்பதாகக் கருதுகிறேன்'' என்றார் ஸி. ஆர்.


இதில் வேடிக்கை என்னவென்றால், ராஜாஜியின் எந்தக் கட்டுரையை எதிர்த்து மாநில அரசு வழக்குத் தொடுத்ததோ, அதே கட்டுரை, பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியின் கவனத்தைக் கவர்ந்து, அவரிடம் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது; இந்தியா—பாகிஸ்தான் உடன்படிக்கைக்கும் வழி வகுத்தது என்பதுதான்!

(தொடரும்)




* நந்தா: ''சதாசிவம் பக்தவத்சலத்தைச் சந்திக்கலாமே?''

* நம் வீரர்களால் வீழ்த்தப்பட்ட ஒரு 'பாட்டன்' டாங்கு.



# Essar invites you to share in India's second largest



- This international-scale project, with the world's latest technology, is India's largest 100% export oriented unit.
- International market for Essar's line of steel products is currently over 20 times the plant's capacity and is projected to grow at 4.5% every year.
- 25% of the production is permitted to be sold in the large and growing domestic market. The balance could also be sold in India, to importers against valid import licences.
- Total foreign exchange earnings in the first five years of operations are estimated at over US $ 1500 million (approx. Rs.2500 crores.)
- Profits from this plant will be totally tax free. The project qualifies for a host of other concessions such as duty-free imports of capital equiment, raw materials, etc.

**And now, you can invest in a Fully Convertible Debenture Issue with a built-in promise of sustained growth and high profitability- ESSAR STEEL BONDS.**

# சின்னப் பொண்ணு

**வெளி** 'காம்பவுண்டு கேட்'டைத் திறந்து உள்ளே நுழையுமுன்பே தெரிந்துவிட்டது ரமணனுக்கு.

வீட்டில் ஏதோ சண்டை.

வீட்டுச் சுவர்களை, தோட்டத்தை, வேலியைத் தாண்டித் தெருவில் வந்து கேட்டது இரைச்சல்.

நாள் பிறப்பதே இவர்களுக்குச் சண்டை போடத்தானோ என்று தோன்றும் அவனுக்கு. ஒரு சண்டை முடிந்து, மற்றது ஆரம்பிக்கும் வரையில் எல்லோரும் ஏதோ ஒன்றுக்காகக் காத்துக் கொண்டிருப்பார்கள்.

— அடுத்த மெயில் வரக் காத்திருக்கும், வெறிச்சோடிய பிளாட்பாரப் போர்ட்டர்களைப் போல.

செருப்புக்களைக் கழற்றி உதறி, ஸ்டாண்டில் வைக்கும் போது... வராந்தா முழுவதுமாகச் சிதறிக் கிடந்த பல செருப்புக்களையும் பொறுக்கி, ஜோடி சேர்த்து ஸ்டாண்டில் வைத்தான். தரை முழுதும் செருப்புக்கள் உதிர்த்த தெரு மண்.

சுற்றும் முற்றும் பார்த்தான்.

மூலையில் ஒரு பழைய துணி. எடுத்து, மண்ணைத் திரட்டி, கதவு மூலையில் ஒதுக்கி...

சட்டென்று கூச்சலின் அடர்த்தி குறைந்து.

குனிந்த தலையுடன் சின்னப் பொண்ணு வெளியே வந்தாள். பாவாடை, (சித்தியின் உள் பாவாடை). சட்டை (பாட்டியின் முடிச்சுப் போடும் சட்டை) தொள தொளப்பு போதாதென, வீசினாற் போல வெளேரென்று உடம்பு முழுவதும் ஏதோ மாவு. அங்கே இங்கே குனிந்து தேடியவள், ரமணன் பெருக்கவென உபயோகித்த துணியை எடுத்து உதறி... அடடா....!

இது அவளுடைய கவுனா? அடடா.... என்னவென்று சொல்ல மாட்டாமல் வயிற்றைப் பிசைந்தது.

''என்னாச்சு ரமணனுக்கு... இன்னைக்கின்னு இவ்வளவு லேட்டு! வேளையிலே வந்தா, மெஷினுக்கு ஒரு மிதி சைக்கிள்ல போயிட்டு வந்திருக்கலாம். கார்த்தால காலேஜுக்குப் போறப்ப, 'சீக்கிரமா வாடா'ன்னு நான் சொல்லி அனுப்பலை. அதான்...''

— சித்தி சரோஜாவின் குரல். அவள் சுபாவம் அப்படித்தான்.

— மாத முதல் தேதி ''மளிகைச் சாமான் வாங்கிப் போடணும்'' என்பாள். இரண்டு நாட்கள் சென்று, ''நான் சொல்லாம போனா, இன்னைக்கி அஞ்சரைப் பெட்டி காலி'' என்பாள். ரமணன் ஒட்டடைக் கம்பை எடுக்கிற போது, ''ரமணா ஒரு மாசமா ஒட்டடை சேர்ந்து போச்சே. அடிச்சுச் சுத்தம் பண்ணுடா. அதான் நீ உயரமா இருக்கியே'' என்பாள். இவள் சொல்லித்தான் வீடு சுத்தமானாற் போல இரண்டு நாட்கள் சலிப்பு, பேச்சு தொடரும்.

''ம்....? எங்கேயாவது சிநேகிதானோட அரட்டை அடிச்சுட்டு வருவான்... சீக்கிரமா வந்தா, அப்படி, இப்படி, தப்பித் தவறி வேலை வெச்சுட்டா....? எல்லாம் வளரும் போதே தில்லுமுல்லு கத்துக்கறதுக. எங்கை சோறு... யாரைச் சொல்லி என்ன?'' — இது சாவித்திரி பெரியம்மா.

''வரட்டும் படுவா. வயசுப் பிள்ளையா லட்சணமா வீட்டுக்கு ஒத்தாசையா இல்



உஷா தேவி

வாம..... தண்டத்துக்கா இ ரு க் க ா ன் வீட்ல?'' — தாத்தா.

ஆளாளுக்கு இன்னொரு 'பெக்' அடிக்க ஆரம்பிக்கிற உற்சாகத்துடன் ஒரு ரவுண்டு தொடங்குவதைப் பொறுக்க மாட்டாமல், அவசரமாய் நுழைந்தான் ரமணன்.

ஜாடைப் பார்வைகள் பரிமாறப்பட, காப்பி தரப்பட்டது.

''தாத்தா, உங்க போஸ்ட் ஆபீஸ் வேலை ஓவர்.''

சில்லறையை ஒப்படைத்தான்.

''சித்தி, ஹோமியோபதி டாக்டர், நாளைக்கி 'டாண்'னு அஞ்சு மணிக்கு வரச் சொன்னார். இந்தாங்க உங்க டோக்கன். மீதி ரூபா...''

''பெரியம்மா, கடைல ஜலஜாவோட ஷூவை மாத்திக்க மாட்டேன்னுட்டான். ரொம்ப அழுக்காயிடுத்தாம். 'கான்வாஸ்' பிஞ்சது அவன் தப்பு இல்லையாம்... முருகன்ல நீங்க 'அப்ரூவல்'ல எடுத்த புடைவையைத் திருப்பிட்டு, பேரை அடிச்சுட்டேன்.''



தன் தோள் பையிலிருந்து, ஒரு ஜதை அழுக்கு ஷூ, சீட்டு, ரசீது என்று வெளியே எடுத்து அடுக்க...

மூவர் முகமும் எப்படி வழியும் என நிமிர்ந்து பார்க்க வொட்டாமல் அவனை ஏதோ நாகரிகம் தடுத்தது.

''ஏண்டா ரமணா, இந்தக் கன்றாவியெல்லாம் தூக்கிண்டு காலேஜ் போறயா? பசங்க சதாய்ச்சுடுவாங்களே... உங்க பெரியம்மாவுக்கு வாரம் தவறினாலும் ஜம்பமா போயி, 'முருகன்'ல ஜவுளி அள்ளிண்டு வரணும். கைக்கு வந்ததுமே, சரோஜா, பக்கத்து வீட்டு மாமி எல்லாம் சுவாரசியமில்லாம பார்த்தான்னா, திருப்பி உட்டுடணும். கடைக்காரன் பாரு, நாளைக்கே ஓர் ஆளைப் போட்டுடப் போறான், 'அப்ரூவல்' புடைவைன்னு கேட்டா வாய் மேலேயே போட.....''

— பெரியப்பா, ஹைகோர்ட் சேம்பரில் பேசுவது போல் கலகலக்க,

தாத்தா, ''அவன் ஏண்டா ஆள் போடறான்? இவாளாலதானே அவன் தெருவுக்குத் தெரு அடைச்சு, ஏ.ஸி.யாவே எழைச்சுக் கடை கட்டறான்! 'ரிட்டர்ன்' ஆகிற பொடவையை அடுத்த அரை மணியிலே, பக்கத்து வீட்டுப் பொண் வாங்கிண்டு போக வருவான்னு தெரியாதா அவனுக்கு!'' என்றார்.

ரமணனுக்கு, முதல், கடைசியான இரு தோசைகளைத் தட்டில் வைத்து, மிளகாய்ப் பொடி போட்டு, எண்ணெய் வேணுமாடா' என்றபடி பெரியம்மா வந்தாள். தலையைப் பக்கவாட்டில் ஆட்டி விட்டு, தோசையைத் தின்ன ஆரம்பித்தான்.

**தோ**ட்டத்தில் செடிகளுக்குத் தண்ணீர் விடும் போது, பாட்டி அவசரமாய்க் குறுகுறுவென நடந்து வந்தாள்.

''ஏண்டா நன்னா ப டி க் க ற ய ா? இந்தா...'' — கையில் திணித்த பட்சணம் கசகசத்தது.

உலர்ந்த திராட்சை போல் சுருங்கிய தோல் கையைப் பிடித்து, கிணற்றடி மேடையில் அமர்த்தினான்.

''இந்த வீட்ல நீயுந்தானே பேரன்! ஏண்டா எப்பப்பாரு எடுபிடி வேலை? உன்னை இப்படி காமிச்சுக் குடுத்துட்டு உன் அப்பனும், அம்மாவும் ஒண்ணா போய்ச் சேரணுமா? ....இந்த வயசுல இத்தனை வியாதியோட, நான் இருக்கணுமா ரமணா.'' குச்சியாய் உலர்ந்தகைகள் தடவிக்கொடுக்க, ஈரம் கசிந்த வார்த்தைகள் நெஞ்சை நனைக்க....

''பாட்டி, இன்னொரு உருண்டை தரயா?''

''பேஷா, தரேண்டா கண்ணு. மாலாடு புடிச்சிருக்கா ஒனக்கு? உங்கப்பனுக்கு உசிரு.''

''இல்லே பாட்டி. சி ன் ன ப் பொண்ணு பாவம். சாயங்காலம் அர்ச்சனை போல இருக்கே? டிபன் 'கட்'....''

''அடப்பாவமே... அதுக்காக வயத்துக்கு வஞ்சனை பண்ணுவானோ? அரிசி, கோதுமை, உப்புமா குரணை, வறுத்த பயறுன்னு, பத்து வயசு குட்டி கிட்ட, நாலு நிலுக் குடுத்தனுப்புவானோ மிஷினுக்கு....? அரிசி மாவுல விழுந்த எலி குஞ்சு மாதிரி வந்து நிக்கறது. அவ்வளவுதான். ஒங்க தாத்தா வேறே. கெக்க பிக்கன்னுண்டு, மாட்டுப் பொண்கள்கிட்ட குழைஞ்சுண்டு, ஒத்து ஊதிண்டு.. ஆன வயசுக்குப் புத்தி போறது பாரு! பாவம்டா, அந்தக் குட்டி! ஷண்முகத்துகிட்ட முட்டிண்டேன். 'எங்கை சளைச்சுப் போச்சுடா. உம் பொண்ணை விடாதே'ன்னு. முந்தி, கிராமத்துலேர்ந்து தன் தங்கைகளை எங்கிட்ட விட்டான். கல்யாண போதுலே, காதை, மூக்கை ரொப்பி, பட்டுப் புடைவை, பாத்திரம்னு எடுத்துத் தந்தேன். பழங்கதையெ நினைச்சு இதை வுட்டுட்டுப் போயிட்டான்....

''.....உன்னை வேறே இப்படி உங்கப்பன் விட்டுட்டுப் போயிட்டான். ரமணா கண்ணு. எல்லாம் பொறுத்துக்கோ. நல்ல படிப்பு. இன்னும் கொஞ்ச காலம். பெரிய வேலை யாயிட்டா.....!! ஒரு வழி அடச்ச தெய்வம், ஒரு வழி தொறக்கும்டா.... நீ கிளாஸ்ல பஸ்டாமேடா செல்லம்?

''பெரியப்பன்கிட்ட கொஞ்சம் கூழைக் கும்பிடு போடுடா. அப்பத்தான் தன் வக்கீல் புத்தியெக் காட்டாம, உங்கப்பனுக்கான பங்கை உனக்கு வுடுவான். ஆமா... ஏதோ இந்த வீட்டை இடிச்சு ஃப்ளாட் கட்டறதா பேசிக்கறாப் போல! ஏனாம்?''

பாட்டிக்கு பயங்கர சூட்சுமம்.

எல்லோருமாய்க் கூடிப் பேசும் போது, சில சமயம் இவனைக் கண்டால் மௌன மாகிப் போகும் மந்திரம், ரமணனுக்கு அப்போதுதான் உதித்தது.

''பெரியப்பா பேசிண்டே போவாரு. மனசுல ஒண்ணும் கிடையாது பாட்டி.''

''ஆனா உன் பெரியம்மா அப்படி இல்லேடா.''

வீட்டுக்குள்ளிருந்து குபீரெனக் கூச்சல்.

ஜலஜாவின் அழுகை, காதைப் பிளந்தது.

பெரியம்மா முறையிட்டுக் கொண்டிருந்தாள்.

''பத்து வருஷம் விரதமிருந்து நான் பெத்த பொண்ணைக் கண்டா, யாருக்கும் கரிக்கறது. பத்து வயசுக் கொழந்தை தேமேன்னு கெடக்கு.''

''ஆமாமா... இத்தனை வயசுக்கு அதை நடக்கக் கூடவா பழக்கலை நீ...? எப்பப் பாரு கட்டில்ல சாஞ்சுண்டு காமிக்ஸ்... ஏய் ஜலஜா... செவ்வாய், வெள்ளி தவறாம அழுணும் உனக்கு! உன் வயசு சின்னப் பொண்ணு பாரு.... உன்ல பாதி வளர்த்தி. எப்படி சுறுசுறுப்பா இருக்கு...?'' — பெரியப்பா வெகுளி. யதார்த்தவாதி.

''இல்லே பெரியப்பா. ஜலஜாதான் என் கிட்டே 'சின்னப் பொண்ணு நன்னாவே ரூமைப் பெருக்கித் துடைக்கலை. அடிச்



# இதயத்தைத் திருடிய பனி!

'இதயத்தைத் திருடாதே' படத்தின் கேமரா மேன் ஸ்ரீராம் சொன்னார்: ''மணிரத்தினத்துக்கு, மலைவாச ஸ்தலத்தைக் களமாய் வைத்து, ஹீரோ, ஹீரோயின் போல பனியையும் பாத்திரமாக்கிப் படம் எடுக்க வேண்டும் என்ற ஆசை ஐந்தாறு ஆண்டுகளாகவே உண்டு. அதன் விளைவுதான் ''கீதாஞ்சலி'' — அதன் தமிழ் டப்பிங் 'இதயத்தைத் திருடாதே'.

''படத்தில் இடம்பெறும் பனிப்புகை காட்சிகள் எல்லாமே, காலை ஆறு மணி முதல் ஏழு மணி வரைதான் எடுக்கப் பட்டன. இதற்கென காலை மூன்றரைக்கெல்லாம் எழுந்து படப்பிடிப்பிற்குத் தயாராகி விடுவோம்.''

''புகைமண்டலக் காட்சிகள் அனைத்துமே இயற்கை இல்லை. செயற்கையும் சேர்க்கப்பட்டுள்ளது என்று பேசிக் கொள்கிறார்களே?''

''பெரும்பாலான காட்சிகளில் நிஜமான பனிப் புகை மண்டலம்தான் வருகிறது. ஆனால் இயற்கையை நமக்குத் தேவையானபோதெல்லாம், தேவையான படியெல்லாம் பயன்படுத்திக் கொள்வது சாத்தியமில்லையே! அதனால் சிற்சில காட்சிகளில் மட்டும் செயற்கையாய் பனிப்புகையை உருவாக்கிக் கொண்டோம். செயற்கையாய் உருவாக்க பனிப்புகை (ஃபாக்) மெஷின் என்று ஒன்று இருக்கிறது. அதே போல, படத்தில் இடம்பெறும் மார்க்கெட், ஊட்டியில் இருக்கும் நிஜ மார்க்கெட் இல்லை. செட்தான். ஆனால் தோட்டா தரணி மிகத் தத்ருபமாய் அமைத்தார். அதை யாரும் கண்டுபிடித்ததாகத் தெரியவில்லை!

சந்திப்பு: ஜூலி.




**நீங்கள்** வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற விருப்பம் உடையவரா? ஓரளவு கல்வித்தகுதியிருந்தும், உங்களால் மற்றவர்களிடம் ஆங்கிலத்தில் சரளமாகப் பேசமுடியவில்லையா? ஆங்கில மொழியில் போதிய பயிற்சியின்மையினால் உங்களது முன்னேற்றம் தடைபடுகிறதா? மற்றவர்கள் பேசுவதை ஓரளவு புரிந்து கொண்டாலும், அவர்களிடம் ஆங்கிலத்தில் பேசினால் ஏதாவது தவறாகப் பேசிவிடுவோமோ என்று தயக்கமாக இருக்கிறதா?

ஆங்கிலத்தில் பேச வேண்டும் என்ற ஆர்வத்தில் பல வழிகளில் முயன்றும், பல புத்தகங்களைப் படித்தும் நீங்கள் எதிர்பார்க்கும் முன்னேற்றம் ஏற்படவில்லையே என்று வேதனைப் படுகிறீர்களா?

கவலையை விடுங்கள் ....
இதோ ஒரு பயனுள்ள பயிற்சி முறை
உங்களுக்காக.

தமிழகத்தின் தலைசிறந்த கல்வி நிலையம் என்ற தனிப்புகழ் பெற்ற விவேகானந்தா கல்வி நிலையத்தினர் அளிக்கும் ஓர் எளிய பயிற்சி முறையை நீங்கள் மேற்கொண்டால் தயக்கமின்றி ஆங்கிலத்தில் சரளமாக உரையாடவும், இலக்கணப் பிழையின்றி கடிதங்கள், கட்டுரைகள் எழுதவும் உங்களால் முடியும்.

வீட்டிலிருந்தபடியே ஓய்வு நேரத்தில் தபால் மூலம் இப்பயிற்சியை மேற்கொள்ளலாம். நேர்முகப்பயிற்சி பெற விரும்புவோருக்கு தனிவகுப்புகள் நடத்தப்படுகின்றன.

இப்பயிற்சியில் சேர்ந்து பயன் பெற வேண்டும் என்ற உங்களது விருப்பத்தை ஒரு போஸ்ட் கார்டில் எழுதி கீழ்கண்ட முகவரிக்கு அனுப்புங்கள்.

இப்பயிற்சியில் சேருவதற்கான விண்ணப்ப மனுவையும், மற்ற விபரங்களையும் உடனே அனுப்பி வைக்கிறோம்.

ஆங்கிலத்தில் பேச வேண்டும் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற உங்களது நீண்ட நாளைய விருப்பம் நிறைவேற இன்றே உங்கள் முயற்சி துவங்கட்டும்.

நீங்கள் தொடர்பு கொள்ள
வேண்டிய முகவரி

**விவேகானந்தா கல்வி நிலையம்**
த.பெ.எண். 4986,
9, மேட்லி ரோடு, தி.நகர்,
சென்னை-600 017.

NAGA



விஞ்ஞானப் பரிசோதனைகளுக்காக எலி, குரங்கு போன்ற பிராணிகள் கொடுரமான முறையில் சித்திரவதை செய்யப்படுவதைத் தடுக்க ஒரு சட்டம் கொண்டுவர மேற்கு ஜெர்மனி அரசு திட்டமிட்டுள்ளது.

— ஜெர்மன் ட்ரிப்யூன்.

தகவல்: சீதா பஞ்க.

கட்டு வாடா'ன்னா...'' — சித்தப்பாவின் பையன் சேகர், எட்டாம் வகுப்பு சிரோமணி விவரிக்க, தன் தொந்தி குலுங்கச் சிரித்தார் பெரியப்பா.

''நீ என்னடா அடியாளா? ஜலஜா நீ என்னடி ஜட்ஜ்மெண்ட் தர்றது? அதான் உங்கம்மாக்களே சின்னப் பொண்ணுக்குச் சரியா மண்டகப்படி குடுத்திருப்பாளே?''

''— இந்த மனுஷன் ஒருத்தர் போறும்டியம்மா, நம்மளை சந்நிதியில் நிறுத்த.''

— பெரியவள் அலுத்துக் கொண்டாள்.

இரவு பத்தரை மணிக்காக, கதவுகளைப் பூட்டி, சரிபார்க்கப் போன போது, சின்னப் பொண்ணு சாப்பிட்டு, பாத்திரங்களைத் துலக்கி விட்டு, தன் மாவு உடைகளை அலசிக் கொண்டிருந்தாள், நாளைய மாற்றுத் துணிக்காக.

''சின்னப் பொண்ணு. பேசாம உங்கப்பாவோட கிராமத்துக்குப் போயிடு.''

நாணி, கோணி, வெண் பற்கள் பளீரிட, அந்த கறுத்த சிறுமி கூறினாள்.

''நாளையிலேர்ந்து நா எப்புடி செய்யறேன் பாரு அண்ணா! எங்கப்பாருதான் 'என்ன ஆனாலுஞ்சரி. அங்கியே இரு. பெரிய அம்மா செஞ்சு அனுப்புவாங்க'ன்னியிருக்காரு. இங்க டீ.வி. பாக்கலாம். காப்பி குடிக்கலாம். எங்க ஊர்ல எலெட்ரி லைட்டு கெடையாது. இருட்டினா படுக்கணும்... குளிக்கக் கூட ரெண்டு கல் போயி மண் பானைல தண்ணி சேந்திதா வரணும்...''

பதில் கூறத் தெரியாமல் விழித்து விட்டு விரைந்து வந்து, விட்ட இடத்தில் படிக்க வாரம்பித்தான் ரமணன்.

''முடியாது. போடி. ஸ்டுப்பிட். இடியட்....''

கையில் கார்டுடன் சின்னப் பொண்ணு சேகரிடம் கெஞ்சிக் கொண்டிருந்தாள்.

''என்னடா இங்கே?''

''ரமண அண்ணா. பக்கத்து வீட்டு ஆயா வரலையாம். இவ அப்பாவுக்கு லெட்டர் எழுதணுமாம். ஜலஜாவுக்குத் தமிழ் எழுதத் தெரியாது. 'என் தயவு வேணும்ல? அப்ப நேத்திக்கி ஏன் அழுது, கோழி மூட்டினா?''

''சரி சரி. எங்கிட்ட குடு.

''....ம் ....நா சமத்தா வேலை பாக்குறேன். அம்மா, அண்ணா எல்லாம்... ஆசையா இருக்காங்க....'' — கடிதம் தொடர்ந்தது.

முகத்தின் சருமத்துக்குக் கீழே குறும்பு படர்ந்தாற்போல....

பெரியம்மா சொல்வது போல் 'திரிசமன்'.

''பால் கார்டு இன்னைக்கு இல்லியாம். ஞாயித்துக் கெழமையாம்'' — வந்து அக்கறையாய்ச் சொல்வாள்.

''ம்.... இன்னிக்கு விட்டா என்னிக்குத் தராளோ? நான் போய்க் கேட்டாதான் இங்க வேலை நடக்கும்'' சித்தி அங்கலாய்ப்பாள்.

மதியத்துக்கு மேல் ஆயா வந்து 'கார்டு' கேட்கும் போது விஷயம் வெளிப்படும்.

''ஏம்மா இன்னைக்கிதானே நம்ம தேதி? ....ரெண்டு கூவா வெச்சி அழுவா, கருக்கா குடுத்தாங்களே!''

பெரியம்மாவும், சித்தியும் தொண்டை விடைக்கக் கத்துவதை, பரிதாப முகத்துடன் பார்த்து நிற்கும் சின்னப் பொண்ணின் முகத்தில் இதே திருப்தி, குறும்பு போர்வையிடும்.

திரிசமன்தான் அவள்.

அந்த ஞாயிறு, பாட்டியுடன் மாங்காடு போய் வந்தால், வீடு கலகல.

ஷண்முகம் வந்திருந்தான். ஒரு கையில் பை, மறு கையில் சின்னப் பொண்ணு.

''பெரியம்மா, துப்பு இல்லை அவளுக்கு'' என, அவன் தலையில் ஒரு நெத்து நெத்த,

''என்னமோ ஷண்முகம், எம் புள்ளை மாதிரி பார்த்துண்டேன்.'' சித்தி கூற, மறு குட்டு விழுந்தது சின்னப் பொண்ணுக்கு.

''பாருங்கம்மா, இந்தப் பொண்ணை! படுதிசல்! 'இங்க இருக்க முடியலை. உடனே வந்து அழைச்சுண்டு போ'ன்னு அப்பனுக்கு எழுதி இருக்கு?''

''உங்க செல்லம் போறாதுன்னு, பசங்களோட விளையாடிண்டு டீ.வி. பார்த்துண்டு இருந்திட்டு....''

— ''அதுக்கு ஏண்டி சம்பளத்தைக் குடுத்து வீட்ல ஒண்ணு எக்ஸ்ட்ரா....? ஷண்முகம் நீ நல்ல வேளைல அழைச்சுண்டு போடா. 'சைல்ட் லேபர்'ன்னு இவாளைப் புடிச்சுண்டு போயிடுவான் ஜெயில்ல... பட்டணத்து வேலைக்காரா கிட்டே திண்டாடட்டும். குட்டி அருமை தெரியும் அப்ப.'' — பெரியப்பா படு யதார்த்தம்.

அர்ச்சனைகளுக்கும், அப்பனின் நெத்தல்களுக்கும் நடுவே பளீரெனக் கரு விழிகளால் சின்னப் பொண்ணு ரமணனைப் பார்த்த பார்வையில் இருந்தது....

'நன்றியா?'

'பாவி, ஒரு கடிதாசி எழுதுன்னா, துரோகம் பண்ணிட்டயே' வா?

'அப்பாடா. நிம்மதி' யா?

அல்லது ஏமாற்றமா... ரமணனுக்கு ரிஸல்ட் புரியவில்லை.

"சுவையான சம்பவங்கள்" —

# " ஒரு கனவு நனவு ஆகியது"

முதல் உலக மகாயுத்தம் முடியும் தறுவாயில் திருச்சியில் பிறந்து, சென்னையில் மெட்ரிக் வரை படித்து, வாழ வழிதேடி வங்கம் சென்ற எண்ணற்ற தமிழர்களில் நானும் ஒருவன். 1970 ஆரம்பத்தில் வேலை நிமித்தமாக மீண்டும் தமிழகம் வந்த எனக்கு, உற்ற தோழர்கள் அற்றுப் போயினர்.

என்னை நானே ஒரு மனிதனாக உருவாக்கும் சோதனை முயற்சி எனக்காயிற்று! என் கனவுகள் பல. நல்ல குடும்பம், குழந்தைகளுக்கு நல்ல ஓர் உறுதியான எதிர்காலம் அமைய அவர்களுக்கு உருப்படியான படிப்பு, தவிர நானும் என் குடும்பமும் சேர்ந்து வாழ ஒரு வீடு. இதை அமைக்க நான் சம்பாதித்த மிகுந்த தொகையை வைத்து, என் பிற்கால வாழ்க்கைக்கு வழிகள் தேடி வந்த காலம் அது.

*1980* — இல் ஸ்ரீராம் சிட் பண்ட்ஸ், என் மனைவியின் உறவினர் மூலம் அறிமுகமானது. அந்தக் கால கட்டத்தில் சீட்டுக் கம்பெனிகளுக்கு நாட்டில் அவ்வளவு நல்ல பெயர் கிடையாது.

முதலில் ஒரு *10,000* ரூபாய்க்கு, அரைகுறை மனத்தோடு சேர்ந்தேன். ஒரு சரியான கால கட்டத்தில் வீடு கட்ட ஒரு மனை வாங்க முயன்ற போது, ஸ்ரீராமின் நினைவு வந்தது. கையில் இருக்கும் பணத்தோடு, ஸ்ரீராமில் சேர்த்த இரண்டு சீட்டுகளையும் தள்ளி எடுத்து, அசோக் நகரில் இருக்கும் வீட்டு மனையை வாங்கினேன். ஆனால் அதில் ஒரு சிறிய நல்ல வீட்டைக் கட்ட முடியும் என்ற நம்பிக்கை அப்போது இல்லை.

பிறகு சில மாதங்களில் என் தந்தை இறந்தார். மற்றொரு பொருளாதாரச் சிக்கல் ஏற்பட்ட அந்த நேரத்தில் நான் போட்ட லட்ச ரூபாய்ச் சீட்டுக்குப் பத்தாவது மாதக் குலுக்கலில் அதிர்ஷ்ட தேவதை என்னை நோக்கிப் புன்னகைத்தாள்.

அதில் கிடைத்த தொகையுடன் எனக்குப் 13 வருட உழைப்பின் பலனும் கிடைத்தது. இவைகளை வைத்து என் கனவு வீடு உருவானது. இன்னும் இரண்டு வருடங்களுக்குப் பிறகு என் கனவு மாளிகை எனதாகிவிடும். இந்த என் கனவை நினைவாக்கிய பெருமையில் ஸ்ரீராமுக்கும் பங்கு சேரும். அதை இந்த நேரத்தில் நன்றியுடன் சொல்லிக் கொள்ளப் பெருமைப்படுகிறேன்.

அது தவிர சரியான இடைவெளிகளில் நான் ஸ்ரீராமின் உதவியோடு, வீட்டின் பராமரிப்புச் செலவுக்குச் சீட்டு மூலம் பணம் கட்டி, எடுத்துச் சிரமமில்லாமல் சமாளித்து வருகிறேன். என் மூன்று குழந்தைகளின் படிப்பு, அவர்களின் திருமணம், வேலை ஆகியவற்றுக்கு ஸ்ரீராம் மூலம் மீண்டும் ஒரு ''கூடு கட்ட'' முயன்று வருகிறேன்.

அந்தக் கனவுகளும் நாளை ஒருவேளை பலித்துப் போகும்.

''ப்ரியாராஜ்,''
அசோக் நகர், சென்னை — 83.

## அத்தியாயம் 22
## தேடி வந்த துணை

"என்னடா ஊர்றே பேமானி.... கரைக்டா தெரியுமாடா உனக்கு விஷயம்? இல்லே எவனாச்சும் சொன்னதைக் கேட்டுக்கினு இங்கே வந்து ஊத்தறியா... நா... இது கண்டி பொய்யா இருந்தது, ஒன்ன செத்துப் போன உங்கப்பனாண்டயே அனுப்பி வெச்சிடுவேன்... சொல்லுடா!'' — செய்தி கொண்டு வந்தவனைச் சொல்லாலே சுட்டுக் கொண்டிருந்தான் டில்லி.

"ஐயோ, அண்ணே, சத்தியமாச் சொல்றேண்ணே... உன்னாண்ட எதுக்குண்ணே நான் பொய் சொல்லப் போறேன்... நான் என் கண்ணால பார்த்துட்டு இப்ப அங்கிருந்து பொறப்பட்டு வர்றேண்ணே.''

"மணிகண்டன் இப்ப எங்கேடா?''

"அவரு, 'நான் டில்லியண்ணன் ஊட்டாண்ட இருப்பேன்'னாருண்ணே...''

"அவன் இங்கே இன்னும் வரலே. நீ விஷயத்தை என்னாண்ட தெளிவாச் சொல்லு...''

"அண்ணே, இன்னிக்கிக் காலைலே மணிகண்டன் அண்ணன் ஊட்டாண்ட வந்து, என்னக் கூட இட்டுக்கினு குயில் குப்பத்துக்குப் போனாருண்ணே. அங்க நானும் அண்ணனும் நாயரு டீக் கடைக்குப் போய், ரெண்டு டீக்கு ஆர்டரு குடுத்துட்டுக் குந்திக்கினுருந்தோம். நான் டீ குடிச்சி முடிச்சதும் மணிகண்டண்ணே என்னாண்ட சிகரெட் வாங்கியாரச் சொல்லி அனுப்புனாரு. நான் வாங்கிக்கினு வந்ததும் நாயர் கடை பையன் கடையை விட்டு வெளில ஒரு டீயை எடுத்துக்கினு போனான். உடனே மணிகண்டண்ணன் என்னாண்டே அந்தப் பையன் எங்க போறான்னு பாக்கச் சொன்னாரு. நான் எட்டிப் பார்த்தப்ப அந்தப் பையன் டீ கிளாசை எடுத்துக்கினு நேரா தருமன்



# என் உயிர்த் தோழன்

**பாரதிராஜா**

ஊட்டுக்குப் போய்த் திண்ணையிலே படுத்திருந்த தருமனாண்ட குடுத்தான். அதுக்குள்ளாற அண்ணனே டீக்குக் காசைக் குடுத்துட்டு வெளில வந்தாரு. வந்தவரு, அந்தப் பையனையே பார்த்துக்கினு இருந்தாரு. அப்பாலே என்னாண்ட திரும்பி, ''டேய், கந்து உனுக்கு எதனாச்சும் வேலை கீதாடா?'' ன்னு கேட்டாரு... நான், ''இல்லேண்ணே''ன்னேன்... உடனே அவரு, ''சரி, அப்ப மத்தியானம் ஒரு மணிக்கா தருமன் தேனாம்பேட்டை ரிக்ஷா ஸ்டாண்ட்ல இருப்பான். அப்படி அவன் இருந்தான்னா அவன் கைலே ஒரு முக்கியமான மேட்டரு பேசணும்னு சொல்லி நேரா டில்லி ஊட்டாண்ட வரச் சொல்லுன்னாரு.'' சர்தான்னு சொல்லிட்டு நானும் கெளம்பி ஊட்டுக்குப் பூட்டேண்ணே.''

''அவரு சொன்னா மாதிரியே கரைக்டா ஒரு மணிக்கெல்லாம் ரிக்ஷா ஸ்டாண்டு மேலே தருமனைக் கண்டுக்கலாம்னு போனா அங்கே எந்த ரிக்ஷாவுமே ஸ்டாண்ட்லே இல்லேண்ணே. அட, இது இன்னாடாபேஜாருன்னுபக்கத்துலேவெசாரிச்சேன். அப்ப அங்க இருந்த 'பங்கு' கடைக்காரருதான் இந்த மாதிரி விஷயம்னு சொன்னாரு. அட இன்னாடா காலைல கூடப் பார்த்தோமே, இவரு எத்தையாச்சும் ஒளறப் போறாருன்னிட்டு நானே இஸ்டெயிட்டா குயில் குப்பத்துக்குப் போய்ப் பார்த்துட்டு வரப் போனேண்ணே. குப்பத்துக்குள்ளாற நொழையும் போதே சாவு மேளம் காதைக் கிய்ச்சுதுண்ணே, அட, கடைக்காரரு சொன்னது மெய்தாங்காட்டின்னு நெனச்சுக்கினே போனா, குப்பமே தருமன் ஊட்டாண்ட நின்னு அய்துக்கினு இருந்துச்சுண்ணே. கிட்டக்கப் போய்ப் பார்த்தா, பாடியெல்லாம் வெச்சி பாடைலே ஏத்தறதுக்கு எல்லாம் ரெடியாய்க்கினு இருந்தாங்க. எனக்குப் 'பக்'குன்னு ஆயிடுச்சிண்ணே. மேட்டரை மணிகண்டன் அண்ணனாண்ட சொல்ல ஓடி வந்தா நீங்க அவரு விஷயத்தை உங்களாண்ட சொல்லச் சொன்னதாச் சொன்னீங்க. அத்தான் உங்களாண்ட விஷயத்தைச் சொன்னேன். ஏன் எதுனாச்சும் பிரச்னையாண்ணே?''

— பொறுமையாகக் கேட்டவனைப் பிளக்க வேண்டும் போலப் பொத்துக் கொண்டு வந்தது டில்லிக்கு.

செய்தி கொண்டு வந்தவன் கூறியது அனைத்துமே ஒத்து வந்த டில்லிக்கு, உதைத்தது ஒரே விஷயந்தான் என்றாலும், அதுதான் முக்கியமான விஷயமே! சொன்னவன், ''செத்தது பொன்னம்மாள்,'' என்றான்!

அவர்கள் திட்டம் எங்கு, எப்படிப் பிசகியிருக்கும் என்று அவனால் சரியாக யூகிக்க முடியவில்லை.

அவனது குழப்பத்தைத் தெளிவாக்க அங்கு வந்து சேர்ந்தான் மணிகண்டன்.

**ம**ணிகண்டனைக் கண்டதும் மின்





"ஆபீஸுக்குக் கொண்டு போறன சாப்பாட்டை அப்படியே கொண்டு வந்துட்டீங்களே...?"

"காலையில் பியூன்கிட்டே கொஞ்சம் சத்தம் போட்டேங் கறதுக்காக என்னை மத்தியானம் எழுப்பாமலேயே விட்டுட்டான்!"

— ஞா. ஞானமுத்து.

சாரம் தாக்கியவன் போல் துள்ளியெழுந்தான் டில்லி.

"மணிகண்டா!"

டில்லி மேலேதும் பேசுமுன் அவனைச் சைகையால் வாயடைத்தான் மணிகண்டன்:

"டேய்! நீ வெளில இரு. நான் கூப்பிட்டா மட்டும் உள்ளே வா!" என்றான் கந்துவிடம்.

அவர்களைவிட அதிகம் குழம்பியவனாய் அங்கிருந்து செய்வதெதுவும் புரியாது வெளியேறினான் கந்து.

"டில்லி! நானும் எல்லாம் கேள்விப்பட்டேன். பொதுவா எந்தக் காரியத்துக்குமே நேர்ல போவாத நான், தருமன் மேட்டர்ங்கற ஒரே காரணத்துக்காக நானே நேரடியாக் குயில் குப்பத்துக்குப் போனது மட்டுமில்லாம, தருமனுக்குப் போன மயிலே எங்கையால வெஷத்தைக் கலந்தேன். கலந்ததோடவுடாம அது தருமன் கைக்குப் போய்ச் சேர்றதையும் கண்ணாலப் பார்த்ததுக்கப் புறம்தான் அங்கிருந்து கௌம்புனேன். ஆனா இவ்வளவையும் செஞ்ச நான், கொஞ்சம் பொறுத்திருந்து, அந்த மயை அவன் குடிக்கிறதையும் பார்த்துட்டுக் கௌம்பியிருக்கலாம். ஆனா, செய்யாததுதான் நான் பண்ணின பெரிய தப்பு. அவனுக்கு நான் ஏற்பாடு பண்ணின யமன் அவங்கக்காளை ஏத்திக்கினு போயிட்டான்."

டில்லிக்கு விஷயம் சற்றே தெளிவாயிற்று. பொன்னம்மாள் இறந்த செய்தியைவிடத் தருமன் இன்னும் உயிரோடு இருக்கும் செய்தி அவனை அதிகத் துக்கப்படுத்தியது.

அடுத்து செய்ய வேண்டிய காரியத்தைப் பற்றி அவர்கள் அதிகம் யோசிக்கவில்லை. டில்லி அவனது சகாக்கள் சூழ, ஓர் ஆளுயர மாலையுடன் பொன்னம்மாளுக்குத் தன் இறுதி மரியாதையைச் செலுத்தக் குயில் குப்பத்திற்குள் காலடி வைத்தான்.

டில்லி குப்பத்தினுள் நுழைந்த அதே விநாடி, குயில் குப்பம் பலத்த சலசலப்புக்குள்ளானது.

திடீரென்று ஒரு கும்பல், கூடு கலைக்கப்பட்ட கோபத்தால் வெளியேறிய தேனீக்களின் வெறியோடு டில்லியின் ஆட்கள் மீது பாய, பதிலுக்கு டில்லியின் ஆட்கள் முறுக்கிக் கொள்ள, நிலைமை அபாய கட்டத்தை நெருங்கு முன் யாரோ ஒரு நல்லெண்ணத் தூதுவர் தருமனிடம் சென்று நிலைமையை விளக்க, இறந்து போன அக்காவின் தலைமாட்டில் சூரியனைத் தொலைத்து விட்ட துக்கத்தோடு அமர்ந்திருந்த தருமன் சுயநினைவுக்கு வந்தான்.

தருமன் எழுந்து சென்று நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்கு முன்னே 'பங்கிடு முருகேச' நிலைமையைச் சமாளித்து, டில்லியைச் சடலத்தின் அருகே தள்ளி வர, பொன்னம்மாளின் உடலைப் பார்த்த மாத்திரத்தில் தன் கையிலிருந்த மாலையை அவள் மீது வீசி விட்டு அதே வேகத்தில் அவள் மீது சாய்ந்து, "அய்யோ யக்கா", என்று கதறி அழ ஆரம்பித்தான் டில்லி. டில்லியின் இந்த 'அதிரடி நடவடிக்கை'யில் குப்பமே ஸ்தம்பித்துப் போய் நின்றது.

அழுது முடித்த டில்லி மெல்ல எழுந்து தருமனிடம், "தருமா! எப்படி தருமா இது...? யக்காவுக்குப் போய் எப்படி தருமா?"

"டில்லிக்குப் பதிலேதும் கூற முடியாது தருமன் லேசாக விம்மத் தொடங்க, டில்லி அவனை அனுசரணையோடு அணைத்து, "தே... ஃபீல் பண்ணாதே தருமா! உனுக்கு நாங்கள்லாம் இல்ல! தருமா! நீ இன்னாடா இவன் இப்படி பேசறானேன்னு தப்பா எடுத்துக்கக் கூடாது. கொய்யாத் தோப்பும், குயில் குப்பமும் கல்யாணத்துலேதான் ஒண்ணா சேர முடியாம பூடுச்சி.. அட சாவுலயாச்சும் ஒண்ணா கூடிக்குவோம்! சரின்னு சொல்லு தருமா."

தருமன் ஓர் அனிச்சை செயலாய்த் தலையாட்ட, டில்லி, "இப்பதான் தருமா எனக்கு மனசு நிம்மதியாச்சு. யக்காவோட சாவு செலவு மொத்தத்தையும் நான்தான் செய்வேன்," என்றவன், ஆக வேண்டிய வேலைகளைத் தன் ஆட்களிடம் வேகமாய்க் கவனிக்கச் சொன்னான்.

சற்று நேரத்திற்குப் பின் தருமனின் கட்சித் தலைவர் வந்து சம்பிரதாயங்களை முடித்துச் செல்ல, மெள்ள பொன்னம்மாளை இடுகாட்டிற்கு எடுத்துச் செல்ல வேண்டிய நேரம் நெருங்க, தன் நெஞ்சு சுமக்க முடியாத பாரத்தின் சுமையால் சுக்கல் சுக்கலாய் நொறுங்குவதைத் தருமனால் தடுக்க முடியவில்லை. பொன்னம்மாளின் சடலம் தூக்கப்பட்ட அந்த விநாடி வரை தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்த தருமன் 'இனியும் முடியாது' என்ற நிலையில் உடைந்து 'யக்கா....' என்று கத்திய கத்தலில் குயில் குப்பமே ஒரு முறை

ஆட்டங்கண்டு பின் ஒரு நிலைக்கு வந்தது.

தருமன் குலுங்கிக் குலுங்கி அழுதான். துக்கம் தீர அழுதான். தான் ஓர் ஆண் மகன் என்பதை மறந்து அழுதான்.

தருமனைத் தேற்றுவது பெரும்பாடானது. யார் சொல்லியும் கதறுவதை நிறுத்த முடியாத தருமன் பின் ஒருவாராய் அழுது ஓய, சாவுக்கு வந்திருந்த அய்யரும், மாமியும் கலங்கிய கண்களோடு மெல்லத் தருமனைத் தேற்றி அவனைத் திடப்படுத்த, தருமனுக்கோ அல்ல மற்றவருக்கோ தெரியாதவண்ணம் தருமனின் குடிசைக்குள் நின்று ஏதோ தன்னைப் பெற்ற தாயையே இழந்த சோகத்தில் தன் விழி நீரைத் தேக்க முடியாது தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தாள் சிட்டு.

விவரம் தெரிந்ததிலிருந்து தந்தையின் முகத்தை மட்டுமே பார்த்து வளர்ந்த அவள், தாய்ப்பாசம் என்னவென்று அனுபவ பூர்வமாய் உணராதவள் என்றாலும், தருமனின் குடிசையில் தங்கிய ஓரிரு நாட்களுக்குள் களங்கமில்லாத பொன்னம்மாளின் இதமான அரவணைப்பில் தாய்ப்பாசம் என்பது இப்படித்தான் இருக்கும் என்று உணர்ந்திருந்தாள்.

பொன்னம்மாள் இறந்த தினத்திலிருந்து, தருமனின் வாழ்க்கை தலைகீழாயிற்று. அனைவருக்கும் விடிந்த போது அவன் தூங்கப் போனான், மற்றவர் உறங்கப் போன நேரத்தில் தருமன் உணவருந்தப் போனான். நாட்களை ஒரு கடமைக்காகக் கஷ்டப்பட்டு நகர்த்திக் கொண்டிருந்தான். ஒரு நாள் கண் விழிக்கையில், தலைமாட்டில் வழக்கமாய்த் தன் அக்கா வைக்கும் இடத்தில் டீயும், பன்னும் இருக்க, பொன்னம்மா இறந்ததையும் ஒரு கணம் மறந்து, "யக்கா" என்று ஏதோ சொல்ல வாயெடுத்து விட்டான். பொட்டில் அறைந்தது போல உண்மை உறைக்கத் தருமன் சில்லிட்டு நின்றான். தான் கேட்காமலே தனக்கு டீயும் பன்னும் எங்கிருந்து வந்தன என்று யோசித்தவாறே உள்ளே சென்றான். மேலும் அதிர்ந்தான். அவனது துணிமணிகள் துவைத்துக் காயப் போடப்பட்டிருக்க, அடுப்பில ஏற்றிவிருந்த பாத்திரத்தில் ஏதோ பொங்கிக் கொண்டிருந்தது. தருமனுக்குத் தலையைப் பிய்த்துக் கொள்ள வேண்டும் போல் தோன்றியது. "இன்னாடா இது எய்வு," என்றவாறே அவன் திரும்பிய போது, அங்கே சிட்டு கையில் தண்ணீர்க் குடத்துடன் நின்று கொண்டிருந்தாள். சிட்டுவைக் கண்ட தருமனுக்கு அதிர்ச்சியை விடக் குழப்பமே அதிகமாக ஏற்பட்டது.

"இந்தாமே! நீதான் டீ, பன்னெல்லாம் வாங்கியாந்து, துணியெல்லாம் தோய்ச்சிப் போட்டு, அடுப்பெல்லாம் பத்த வெச்சியா?"

சிட்டுவின் மௌனம் அவனுக்கு எரிச்சலூட்டியது.

"இந்தாமே நான் கேட்டுகினுகீறனில்லே? ஆமா நீ எப்படிம்மே வந்தே இங்கே? ஐயரு ஊட்டம்மா எதனாச்சும் சொல்லுச்சா? அது அப்டியெல்லாம் பேசாதே. நீ எதனாச்சும் கோவிச்சிக்கினு வந்துட்டியா இன்னா? அட இன்னாம்மே நான் பாட்டுக்கு உன் கைலே கேட்டுகினே கீறேன் நீ சொம்மாவே இருந்தீன்னா இன்னா அர்த்தம்? வாயைத் தொறந்து எத்தையாச்சும் சொன்னின்னாத்தானமே எனக்குப் புரியும்!" என்றான்.

அனைத்தையும் மௌனமாய்க் கேட்டுக் கொண்டிருந்த சிட்டு அமைதியாக, ஆனால் அர்த்தத்தோடு பதில் சொன்னாள்: "சுத்தம் பார்த்துத்தானே நீங்க என்னை ஐயர் வீட்டிலே கொண்டு போய் விட்டீங்க.. அப்படி பார்த்தா உங்க மனசு கூடதான் சுத்தம். அதனால நான் இங்கியே தங்கிக்கிறேன்."

"இய்ஞ்சது போ நீ எப்பவாச்சுந்தான் பேசுவே. அப்படி பேசச் சொல்ல நீ இன்னா பேசறேன்னே எளவு புரிஞ்சு தொலையாது" இன்னாத்துக்கு என்னைப் போய் அவ்ளோ தூக்கி வெச்சி அவங்களோட எல்லாம் சக்வலா பேசறே இப்ப. சர்தான் அத்த வுடு.. இனிமே நீ அங்க போவப் போறதில்லையா?"

இல்லை என்பதற்கு அடையாளமாகச் சிட்டு உறுதியாகத் தலையசைக்கத் தருமன் அசையாது நின்றான்.

(தொடரும்)

அடுத்த இதழில்...



# மு.க.ஸ்டாலின்: செல்வாக்கு செயல்படுகிறதா?

—சிறப்புப் பேட்டி

# பிரமிக்க வைத்த அறிமுகம்!

வட்டமேஜை

• போட்டிக் கதை — 1 படித்திட, தற்போதைய அலுவலர்களின் கெட்ட நடத்தையே திட்டங்களை வீணாக்கிடும் என்பது நிதர்சனமாகிறது. அக்கணமே மனத்தில் உருவாகிய பாடல் இதோ!

எட்டென்ன ஒன்பதென்ன ஏழைகள் முன்னேறத்
திட்டங்கள் பல்வகை வகுத்தாலும் — வட்டமிடும்
வல்லூறாய் அதிகாரியே ஒதுக்கிட் டீதிதான்
"கல்லார் கண்பட்ட திரு"

அறிமுக எழுத்தாளராயினும் அருமையாக எழுதியுள்ளார். பாராட்டுக்கள்!

கரூர்பரமத்தி. எஸ். கே. ஈசுவரமூர்த்தி.

• 3.9.89 இதழ் சிறுகதைகள் மூன்றும் முக்கனிகள்! தனித் தனிச் சுவை! 'இன்றைய குருக்ஷேத்திரங்கள்' இல் மற்றவர்களின் உணர்ச்சிக்கு மதிப்பளிக்கிற அதே நேரத்தில், தன் தரப்பு நியாயத்தை வலியுறுத்தத் தயங்காத ஜெயந்தி, இராஜா பாலசந்தரின் கைவண்ணத்தில் அழகுற மிளிர்கிறாள்.

திருச்சி. தாயு. செந்தில்குமார்.

• "கமழிக்குக் கல்யாணம்," "கல்லார் கண்பட்ட திரு", "இன்றைய குருக்ஷேத்திரங்கள்" இம் மூன்று கதைகளும் முத்தானவை. தமக்கே உரிய பாணியில் அழகான முறையில் கதையை நகர்த்தி, இன்றைய சமுதாயத்தினை நன்றாகப் படம் பிடித்துக் காட்டி விட்டார்கள் கதாசிரியர்கள்!

புதுவை — 3. கே. லீலாவதி கிருஷ்ணவேலு.

• 'கல்லார் கண்பட்ட திரு' — இந்தச் சிறுகதையில் ஆடம்பரமில்லாத போக்கும், எளிமையான சொற்கட்டும், நவீனமான பார்வையும்... நல்ல பிடிமானங்களாகவே தோன்றுகின்றன!

சேலம் — 16. சின்னை வெங்கட்ராமன்.

• வாலறிவனின் கல்லார் கண்பட்ட திரு சிறுகதை படித்தேன். இந்தக் கதையின் சிறப்பம்சமே, கதை முடிக்கப்பட்ட விதம்தான்! கதிர்வேலு — கற்பனை கிடையாது. எண்ணற்ற கதிர்வேலுகள் இங்கே நடமாடிக் கொண்டுதான் இருக்கிறார்கள்!

கடலூர் — 2. ஆர். வேலுமணி.

• ஒரு சினிமா நடிகையின் பேட்டியாக (பந்தாவாக) இல்லாமல் சாதனை புரிந்த ஒரு சராசரி பெண்மணி பேட்டி மாதிரி (எளிமையாக) இருந்தது நடிகை சீதா பற்றிய கவர் ஸ்டோரி!

அயன்புரம். த. சத்தியநாராயணன்.

• 'நடிகையின் ஆதங்கம்' என்று உள்ளே கட்டுரைத் தலைப்பு. மேலட்டையில் நடிகையின் மகிழ்ச்சி போஸ்! இதுதான் நடிப்பாங்க?

சென்னை — 14. அய்யாறு எஸ். வாசுதேவன்.

• தமிழ்ப்பட உலகைக் குறைத்து எடை போடும் சீதா அதில் சான்ஸ் கிடைக்கவில்லை என்று மட்டும் அங்கலாய்ப்பது சரியா? நீயே சொல்லு நைனா!

சென்னை — 28. எம். தியாகராஜன்.

• நடிகை சீதாவின் ஆதங்கத்தை நன்றாகப் புரிந்து கொள்ள முடிந்தது. படவுலகில் கேரெக்டரை விட, பாப்புலாரிட்டிக்குத்தான் அதிக முக்கியத்துவம் தருகிறார்கள் என்று அவர் கூறியிருப்பது நூற்றுக்கு நூறு உண்மை.

நெல்லிக்குப்பம். தமிழ்ப்பரிதி.

• 'தொழில் வளர்ச்சிக்குத் தோரணம்...' மிகவும் அருமையாக இருந்தது. தொழில் வளர்ச்சிக்காக அரசு முயற்சி செய்தாலும், பத்திரிகைகளும் அடிக்கடி இதைப் போன்ற பேட்டிகளை வெளியிட்டு அரசின் முயற்சிகளை ஊக்குவிக்க வேண்டும்.

சிதம்பரம். ஆர். தமிழரசி.

• தலையங்கம் படு சூப்பர். ஒரு திரைப் படத்தை உதாரணம் காட்டி இலங்கைப் பிரச்னையை அலசி இருக்கும் உமது கண்ணோட்டம் உண்மையிலேயே பாராட்டத்தக்கது!

உப்பத்தூர். செந்தூர் ஸ்ரீயோராஜா.

• உடம்பு சரியில்லையென்றால் பாம்புக்கும் ஊசி போடுவார்கள், மருந்து புகட்டுவார்கள், பவுடர் பூசுவார்கள் என்றெல்லாம் கூறி, பாம்புக்கு ஏர்கூலர் வசதியும் உண்டு என்று முடித்து என்னை ஆச்சரியத்தில் திளைற அடித்து விட்டீர்கள்!

மயிலாடுதுறை. ஆர். செல்வராணி.

• கல்கி 3.9.89 இதழ் 'ராஜநாகத்துக்கு ஏர்கூலர் வசதி' கட்டுரையில், ராஜநாகத்தின் விஷம் எடுக்கும் படமும், அது பற்றிய குறிப்பும் இடம் பெற்றுள்ளது. மத்திய அரசு உத்தரவுப்படி, கடந்த சில ஆண்டுகளாகவே பாம்பிடமிருந்து விஷம் எடுப்பது தடைசெய்யப் பட்டுள்ளது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

சென்னை — 17. எஸ். சந்திரமௌலி.

• தொழிற் துறைச் செயலருடன் கல்கி கண்ட பேட்டி படித்தேன். செயலரிடம் கல்கி வரவழைத்த பதில்களிலிருந்து தமிழகத்தைத் தொழில்மயமாக்கும் முதல்வரின் தணியாத தாகமும் அது நிறைவேறும் என்ற நம்பிக்கையும் சுடர் விட்டது.

சென்னை — 102. ஆர். திலகவதி.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 431543, 434157; 434190. ஆசிரியர் குழு அலுவலகம்: 434145.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 150/; விமானத் தபால் ரூ. 350/-.



## இதன் பாவு நூலில், இதன் ஊடு இழையில், இதன் நெசவுநயத்தில்...

ஆம். இந்தியா. ஆதியிலிருந்தே பட்டைதீட்டிய வைரம் போன்று ஜொலித்து வருவது. கணக்கற்ற கற்பனை ஊற்றுக்களின் தோற்றுவாயாக விளங்கிவருவது. அதனால்தான் இந்நாள் வரை ஜீவன்ததும்ப தலை நிமிர்ந்து நிற்கிறது. இதனை, கைத்தறித் துணிகளின் மாயாஜால நெசவுக் கலைவண்ணம் எடுப்பாக, அழகாக எடுத்துக் காட்டுகிறது. இந்தியக் கைத்தறித் துணிகள் சிறப்பானவை. நுட்பமான திறன்படைத்தவை. முன்மாதிரியானவை. அவை நவீன நாகரீகப் பாணியைத் தழுவியவை. மண்ணுலக வாழ்விலே விண்ணுலக இன்பம் ஊட்டுபவை. இந்தியாவின் ஆத்மாவே இந்தியக் கைத்தறியில்தான் குடிகொண்டுள்ளது.

ஹாண்ட்லூம் ஹவுஸிலுள்ள
*தேசிய டிசைன் கலெக்ஷன்கள் முழுவதும் மானிய உதவிபெற்ற விசேடமான விலைகளில் –*
*இப்போது உங்களுக்குக் கிடைக்கின்றன – ஆண்டு முழுவதும்*

**...இந்தியாவின் ஜீவன்
இழையோடுகிறது.**

**handloom house**

*Sarees ○ Dress Materials ○ Readymades ○ Furnishings ○ Carpets ○ Bed, Bath & Table Linen*

THE ORIGINAL ONE STOP SHOP

Ahmedabad • Bangalore • Baroda
Bombay • Calcutta • Chandigarh • Coimbatore • Delhi • Ernakulam • Gorakhpur • Hyderabad • Imphal • Jaipur
Madras • Madurai • Patna • Ranchi • Secunderabad • Surat • Vijayawada • Vishakapatnam.

Interact:AIH:175 TAM.

REGISTERED NO. M. 4392

Registered as Newspaper in Srilanka

